S. 213

உ

புலிப்பாணி முனிவர்

அருளிச்செய்த

வைத்தியம் - 500

அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

பூமகள்விலாச அச்சுக்கூடம்

சென்னை

விலை] 1938 [அணா 6

நெ. 24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

S. 213

உ

கடவுள் துணை

புலிப்பாணி மஹாமுனிவர் அருளிய

வைத்தியம் - 500

காப்பு

எண்சீரடி யாசிரிய விருத்தம்

அண்டரண்ட மாகிநின்ற வரனேகாப்பு ஆநந்த மாகிநின்ற வுமை யாள் காப்பு, குண்டமெனுங் குண்டலியின் குறியேகாப்பு குமரகுரு வேல்முருகர் பாதங்காப்பு, புண்டரிகமானதிரு மாலுங்காப்பு புகழ் பிரமன் முதற்குலிச னவர்காப்பு, சண்டமெனு மாருதம்போல் வைத் தியத்தில் சாற்றுகிறேன் போகரிட பாதங்காப்பே. 1

நூல்

சுரமாத்திரை

காப்பாகச் சுரக்குளிகை சொல்லக்கேளு கருவான கௌரியது வராகனெந்து, சேப்பாக மிளகதுவு மதிலேபாதி திறமான வுளுந்ததுவு மிதுநேரப்பா, வேப்பாக விருசரக்குங் கல்வத்திட்டு விதமாக யெருக் கம்பால் தன்னுலாட்டிப், பாப்பாகக் கௌரிக்குக் கவசங்கட்டிப் பாங் காக ரவிமுகத்தில் வைத்திடாயே. 2

வைத்தவுட னெடுத்துவந்து துணிமேற்சுற்றி வகையாக வெள் ளாவி தன்னில்வைத்துக், கைத்தவுட னெடுத்துப்பின் கவசம்வாங்கிக் கனமாக அமுரியினல் கழுவிப்போட்டுச், செத்தவுடன் ரவிதனிலே கடிகைவைத்துச் செயலான கல்வத்தி லிட்டுநீயும், உய்த்தவுடன் பாச் சானை வாட்டித்தண்ணீ ருத்தமனே நாற்சாம மரைத்துத்தீரே. 3

தீரேநீ குளிகையது சிறுபயறுபோலே திறமாக வுண்டை செய்து நிழலுலர்த்திச், சேரேநீ சிமிழ்தனிலே யடைத்துக்கொண்டு செகத்திலுள்ள மனிதருக்குச் சுரத்துக்கெல்லாம், பாரேநீ சுக்குடைய

---

1 பிரமன்-பிரமா. குலிசன்-வைரவன்.

2 ரவியில்-வெய்யலில்.

3 அமுரி மூத்திரம். பாச்சான்-கள்ளி. கடிகை-நாழிகை.

கியாழந்தன்னில் பண்பாகக் குளிகையொன்று கொடுத்துப்பாரு, வீரேநீ மூன்றுபகல் கொடுக்கும்போது விதமான நால்முறையின் சுரங்கள்போமே. 4

போமேநீ பத்தியமா யறுநாள்காரு பொங்கமுடன் வெந்நீருஞ் சாதமாகும், ஆமேநீ மற்றொன்று மாகாதப்பா அடைவாக யேழாநாள் சலத்தைவாரு, நாமேநீ மிளகுடனே சிறுகீரைவேரும் நலமாகக் கியாழம்வைத்துக் கொள்ளச்சொல்லு, போமேநீ பத்தியந்தான் முரிக்கச் சொல்லிப் புனிதமுடன் மற்றநா ளெல்லாஞ்சேரே. 5

சன்னிக்கு மேல்பூசத் தைலம்

சேரேநீ சன்னிக்குத் தைலமொன்று செப்புகிறேன் புலிப்பாணி விளக்கமாக, வீரேநீ வேப்பெண்ணை படிதானொன்று விதமான கார்த்திகையின் கிழங்குத்தண்ணீர், பாரேநீ படிதண்ணீ ரளந்துவாரு பாங்கான கருநாபி வராகனொன்று, கூரேநீ வசம்பதுவும் வராகனைந்து கொடிதான வெள்ளுள்ளி வராகனஞ்சே. 6

அஞ்சான காயமது வராகனொன்று அப்பனே ஓமமது வராகனைந்து, தஞ்சான சதகுப்பை வராகனைந்து சாதிக்காய் வெண்தோன்றி வராகன்பத்து, மஞ்சான விவையெல்லாங் கிழங்குநீரில் மைந்தனே மைபோலே யரைத்துப்போட்டுத், தஞ்சான எண்ணெயிலே கலக்கிக் கொண்டு தயவாக கடுகுபதந் தன்னில்வாங்கே. 7

வாங்கியெண்ணெ மேல்பூசச் சன்னிபோகும் வகையான குடைச்சல்முதல் வாதம்போகும், பாங்கியே உள்ளுக்குக் கொடுக்கொணுது பாங்காக மஞ்சளிட்டுச் சாணமிட்டுத், தாங்கியே நீரிட்டுக் கழுவிப் போடு தயவாக இந்தயெண்ணெ யுறுதிமெத்த, ஏங்கியே யலையாதே யப்பாசொன்னே னிதமாக வைத்தியந்தா னின்னங்கேளே. 8

சூதகவலிக்கு உப்பு

கேளேநீ சூதகத்தின் வலிதான்போகக் கெடியாகச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு, வீளேநீ போகாம லுப்பைவாங்கி விதமான காந்தையிட சாற்றாலாட்டி, நாளேநீ காயவிட்டுப் புடத்திற்போட்டு நாயகனே யிம்முறையா யைந்துதீரு, பாளேநீ போகாமலெடுத்துக் கொண்டு பண்பான ஆண்செருப்படையின் சாறே. 9

---

6 கார்த்திகைக்கிழங்கு - கலப்பைக்கிழங்கு. தண்ணீர் - கிழங்குச்சார். வெள்ளுள்ளி-வெள்ளைப்பூண்டு.

7 காயம்-பெருங்காயம். வெண்தோன்றி-ஆகாசகருடன் கிழங்கு.

9 காந்தை-கொட்டைக்காந்தை. ஆண்செருப்படை-சிறுசெருப்படை.

சாற்றாலே யைந்துபுடம் போட்டாயானாற் சார்வாகச் செங்கனீறு போலேயாகும், பார்த்தாலே சூடோரியது இதற்கோவ்வாது பண்பான சூதகத்தின் வலியேகண்டால், மாற்றாலே யெலுமிச்சம்பழச் சாற்றாலே மைந்தனே யகத்தியனார் குழம்பைக்கேளு, ஏற்றாலே பண வெடைதான் சாற்றிற்சேர்த்து இதமாக வுள்ளுக்குக் கொடுத்திடாயே.

கொடுத்திடவே பேதியது அதிகங்கண்டால் குணமாக வசம் பதனை கருக்கிக்கொண்டு, அடுத்திடவோர் படிசலந்தான் கூடவார்த்து அடைவாக எட்டொன்றாய்க் குறுக்கிக்கொண்டு, கடுத்துடனே கொடுத்துவிடு பேதிநிற்கும் கருவாகப் பத்தியமாய்க் காருகாரு, சடுத்தமில்லை பச்சரிசி பயிற்றினோடு சார்வாகப் பத்தியந்தா னுப்பாகாதே. ()

ஆகாது மற்றொன்று மாகாதப்பா அடைவாக மற்றாநாள் மருந்தைக்கேளு, சாகாத வெள்ளுள்ளித் தயிலம்வாங்கிச் சாதகமாய்த் துட்டெடைதா னென்றில்வார்த்து, நோகாது முன்சொன்ன வுப்பை மைந்தா நோய்தீர வராகனென்று பொடித்துப்போட்டுப், போகாத சூதகமாம் வலிதான்தீரப் புகட்டிவிடு தயிலமதைக் கொடுத்திடாயே.

கொடுத்திடுவா யிந்தமுறை நாள்மூன்றப்பா குணமாகப் பத்தியமாய்க் காக்கச்சொல்லு, அடுத்திடுவாய்ப் பச்சரிசி பருப்பினோடு அடைவாகப் புனற்பாக மாகக் காச்சிச், சடுத்தமில்லை கொடுத்துவிடு உப்பாகாது சார்பாக வைந்தாநாள் தலைமுழுக்கு, நடுத்திடுவா யுப்பதுவும் வறுத்துக்கூட்டு நலமாக மற்றாநா ளெல்லாமாமே. 13

பெரும்பாடுக்கு மருந்து

ஆமேநீ பெரும்பாடு வந்தபேர்க்கு அடைவாக நாவல்பட்டை யெருமைமோரில், தாமேநீ துவைத்திடித்துப் பிழிந்துகொண்டு தயவாகச் சந்தனந்தான் வராகனெந்து, நாமேதான் புளித்தமோர் தனிற் கலக்கி நாயகனே கொடுத்துவிடு நாள்மூன்றப்பா, வீமேநீ பெரும்பாடு எங்கேபோச்சு விதமாகப் பத்தியந்தா னில்லைதானே. 14

குன்மம் ஆறுக்கும் உப்பு

தானேநீ குன்மம்வகை யாறுந்தீரத் தயவாக வுப்பொன்று சொல்லக்கேளு, மானேநீ யுப்பதுவும் படிதானென்று மைந்தனே எருமைமோர் படிதானென்று, வானேநீ வரிக்குமட்டிச் சாறுநாழி வகையான இந்துப்பு வெடியுப்போடு, தேனேநீ சவுட்டுப்பு வளையலுப்பு தெளிவாக வகைவகைக்கு வராகனென்றே. 15

ஒன்றாக விவையெடுத்துப் பாண்டத்திட்டு உத்தமனே மோரு டனே சாறும்விட்டுப், பன்றாக அக்கினியி லெரிக்கும்போது பதறு மல் உப்பது சர்க்கரைபோலாகுங், குன்றாகப் பாண்டத்தி லெடுத் துலர்த்திக் குணமாக உதையாதி யன்னநீரில், நன்றாக வராகனிடை யுப்பிரண்டு நலமாகத் தான்போட்டுக் கொடுத்திடாயே. 16

கொடுத்திடுவாய் மண்டலந்தா னிந்தவிதங் குணமாக அவ ரவர்க்கு நாள்தான்தள்ளு, தொடுத்திடுவாய் வாயுவென்ற கட்டிபோ குந் தொந்திப்புச் சோகைபோம் பொருமற்றீரும், படுத்திடுவாய் கவிகையொடு கிரிச்சரங்கள் பாழான கெண்டைமுதற் பறந்துபோ குங், கடுத்திடுவாய் அகுவைஎன்ற கட்டிபோகுங் கடலான வுப் புடைய திறந்தான்காணே. 17

நீரடைப்புக்கு வாழைக்கிழங்கின் நீர்

காணேநீ நீரடைப்பு கண்டபேர்க்குக் கனிவாக வாழையிடக் கிழங்கைத்தோண்டி, ஊணேநீ மற்றுநாட் பார்க்கும்போது உத்த மனே வாழையுள்ளே தண்ணீர்நிற்கும், வீணேநீ போகாமற் கிழங்கு தண்ணீர் விதமாக அரைப்படிதா னெடுத்துவந்து, பூணேநீ வெடியுப்பு விராகனிரண்டு போட்டதிலே கொடுக்க நீர்க்கட்டுபோமே. 18

மெத்தலை வியாதிக்கெண்ணை

போமேதான் மெத்தலையின் வியாதிதீரப் பொங்கமுட னெள் ளெண்ணெய் படிதானென்று, தாமேதான் பசுவின்பால் படிதா னென்று தயவாகக் கம்பச்சோற்றினீரைவிட்டு, வேமேதா னுதண்டை யிலையைத்தானும் விதமாகத் தான்துவைத்துச் சாறுநாழி, வாமே தான் மிளகதுவும் பலந்தானிரண்டு வளமாகத் தானுடைத்துப் போட்டிடாயே. 19

போட்டதொரு மிளகதுவு மிதக்குமட்டும் பொங்கமுட னக்கி னியி லெரிக்கவேண்டும், நாட்டவே யிறக்கிவைத்து வடித்துக்கொண்டு நலமான மிளகதனை யுரைத்துக்கூட்டு, ஊட்டவே யுதையாதி தொடங் குமுன்னே உத்தமனே தலைமுழுகி யமுதுகொள்ளு, காட்டவே மண் டையிடி கண்ணுக்குத்து காலமே முழுகிவர வோடிப்போமே. 20

அண்டவியாதிக் கெண்ணை

போமப்பா அண்டத்தின் வியாதிவந்தாற் பொங்கமுட னெண் ணையொன்று சொல்லக்கேளு, ஆமப்பா போகரிட கடாட்சத்

16 அன்னநீர்-பழந்தண்ணீர்.

தாலே அடைவாகப் புலிப்பாணி முறையைச் சொல்வேன், தாமப்பா விளக்கெண்ணை படிதானென்று தயவான மிளகு தக்காளிச்சாறு, வாமப்பா படியொன்று அளந்துவாரு வளமான வெந்தயந்தான் பலமும் ரெண்டே. 21

இரண்டான வெந்தயத்தை சும்மாபோடு நினைவுகள்தான் பிசகாம லெரிப்பாய்நீயே, உண்டான வெந்தயந்தான் மொருமொருப்பானல் உத்தமனே கடுகோடு ஊற்றிக்கொள்ளு, பண்டான யெண்ணையைத் தான் கொள்ளவென்றல் பாங்காக படியரைக்கால் கொள்ளச்சொல்லு, திண்டான கற்கமது கரண்டிகொள்ளத் திறமாக மூன்றுநாள் முறை யாய்க்கொள்ளே. 22

கொள்ளவே பத்தியந்தா னென்றுமாகா கொடியதோ ராறுநாட் காருகாரு, தெள்ளவே வுப்பாகா புளியுமாகா தெள்ளிமையாய்ச் சாத மன்றிச் சுவைகளாகா, மெள்ளவே பத்தியந்தா னேழாநாளில் மேன்மையாய்த் தான்முரித்து எல்லாங்கொள்ளு, உள்ளவே அண்ட மென்ற வியாதிபோகும் உத்தமனே நாட்சென்றல் போகாதென்னே.

ஒருதலைநோய்க்கு நசியம்

போகுமப்பா ஒருதலையின் வியாதிரோகம் பொங்கமுடன் சமுத் திராப் பழத்தைவாங்கி, ஆகுமப்பா பெருங்காயம் நேராய்ச்சேர்த்து அடைவான பெண்முலைப்பா லதனுலாட்டி, ஏகுமப்பா குளிகைபோல் செய்துகொண்டு இதமான பெண்முலைப்பால் தனிலுரைத்து, வேகு மப்பா நாசியிலே விட்டபோது விரண்டோடி யகன்றுவிடும் வீரந் தானே. 24

பீநசத்துக்கு நசியம்

வீரந்தா னின்னமொரு வுபாயங்கேளு விதமான மாதளம்பூ அருக்கம்பூவுங், காரந்தான் குங்குமப்பூ மூன்றும் நேராய்க் கல்வத்தி லாட்டியதை முலைப்பால்விட்டுச், சோரந்தானில்லாமல் நாசியிலே பிழி யச் சோரியென்ற பீநசந்தா னேழுந்தீரும், பாரந்தானில்லையப்பா சூட்சமாகப் பாடினேன் புலிப்பாணி விளங்கத்தானே. 25

காதுவலிக்கு எண்ணை

விளங்கவே காதிலுள்ள நோய்தனக்கு விதமான மரமஞ்சள் வெள்ளைப்பூண்டு, அளங்கவே சுக்கோடு வலம்புரியின்காயும் அடை

---

24 சமுத்திராப்பழம்-சவுரிப்பழம்.

25 அருக்கன்-எருக்கன். சோரி-இரத்தம்.

வான கரியசீரகத்திஞேடு, முளங்கவே நண்டிறைச்சி நத்தையோடு முசுறுமுட்டை கருங்கோழி முட்டையோடு, புளங்கவே யிவையெல் லாம் விராகனென்று புதுமையிலேக்கள்ளிபுனன் முருங்கைச்சாறே. ()

சாறென்ன வகைக்குவகை படிதான்வீசம் சார்வான பசுவினெய் படிதான்காலு, வாறென்ன வேப்பெண்ணை படிதான்காலு வளமாக விட்டெரித்துக் காதிலூற்றிப், பாறென்ன பஞ்சுகொண்டு மூடச் சொல்லு பாங்காக ஈராறு நாள்தான்வாரு, கூறென்ன காதிலுள்ள வியாதியெல்லாங் குணமாகும் போகரிட கடாட்சந்தானே. 27

கண்படலம்தீர ரத்திஞதி குளிகை

தானென்ற கண்ணிலப்பா படலந்தீரத் தயவான மிளகுடனே சுக்குகூட்டிக், கானென்ற திப்பிலியுஞ் சங்குங்கூடக் கரியமால்தார முடன் புங்கம்வித்தும், வேனென்ற அதிமதுரங் துத்தத்தோடு விதமான பீதரோகணியுங்கூடப், பானென்ற மஞேசிலேயு மேனக் கொம்பும் பண்பான ஆமையிட வோடுங்கூட்டே. 28

கூட்டப்பா புலிநகமும் வெள்ளியோடு கொடிதான சேவலி னெஞ்செலும்புங்கூட்டு, மூட்டப்பா இந்துப்பு இவையெல்லாந்தான் முனையாக ஓரெடையாய் நிறுத்துக்கொண்டு, ஆட்டப்பா கல்வத்தில் நந்திபத்திரி அடைவாகச் சாறுவிட்டு ஒருநாளாட்டிச், சூட்டப்பா அதனிடப் பூச்சாறுதானே சொல்லடா ஒருநாள்தா ஞட்டித் தீரே. 29

தீர்த்தெடுத்துக் கயிறுபோ லுருட்டிக்கொண்டு திறமாக நிழ லுலர்த்திப் பதனம்பண்ணு,பார்த்தெடுத்துத் தேனதிலே யுறைத்துப் போடப் படலமென்ற வகைகளெல்லாம் பறந்துபோகுஞ், சார்த் தெடுத்து முலேப்பாலி லுறைத்துப்போடச் சார்வாக வீராறு நாளுக் குள்ளே, ஈர்த்தெடுத்த ரத்ஞதிகுளிகையென்பார் இருவிழியின் படல மெல்லாம் வாங்குந்தானே. 30

மாலைக்கண் ணுக்கு மை

தானென்ற மாலையுட கண் ணுக்கப்பா தயவான சுழல்வண்டு சுட்ட சாம்பல், வேனென்ற கல்வத்தில் போட்டுக்கொண்டு விதமாக எள்

---

26 முசுறுமுட்டை-ஒருவித யெறும்பின்முட்டை.

28 மல்தாரம்-அரிதாரம். ஏனக்கொம்பு-பன்றி, சிங்சப்பல்.

29 நந்திபத்திரி-நந்தியாவட்டை இலை.

ளெண்ணெ நீர்ப்பூண்டுசாறும், பானென்ற பருத்தியிலைச் சாறுங் கூட்டிப் பாங்கான வெள்ளுள்ளி மிளகுபத்து, வானென்ற மை போலே ஆட்டிக்கொண்டு வளமாக அந்திசந்தி கண்ணிற்போடே. 31

போடப்பா நாள்மூன்று போட்டபோது பொங்கமுடன் மாலையது அகன்றுபோச்சு, வீடப்பா விளக்கெண்ணெய் வாரவீதம் விதமாக நாலைந்து முழுகும்போது, சாடப்பா அருந்ததி கண்ணில் தோற்றுஞ் சார்வாகக் கிழ்ப்பார்வை கண்ணிற்காணும், நாடப்பா போகரிட கடாட்சத்தாலே நலமாகப் புலிப்பாணி பாடினேனே. 32

கண்ணில் நீர்வடிதலுக்கு மை

பாடினேன் கண்ணில்நீர் வடிந்ததானல் பரிவாக வரட்பூலா இலையோர்குத்து, நாடினேன் கருவேலன் இலையோர்குத்து நலமான தான்றிக்காய் மாசிக்காயுஞ், சூடினேன் கடுக்காயுங் காசுக்கட்டி சுகமாக வகைவகைக்கு விராகனென்று, கூடினே னிவையெல்லாம் பொடித்துப்போட்டுக் குணமாக வேகவைத்துப் பிழிந்திடாயே. 33

பிழிந்திடுவாய் கரண்டியிலே வேணமட்டும் புனிதமுடன் அபினியது விராகன்கால்தான், செழிந்திடுவாய் சீனமது பொரித்துக்கொண்டு செயலான பொரியதுவும் விராகன்கால்தான், குழிந்திடுவா யடுப்பிலே காயும்போது கூசாம லாவிரையின் குச்சியாலே, சுழிந்திடுவாய் மைபோலே கடைவாயப்பா சுகமாகக் கண்ணைச்சுற்றி வழித்துப்போடே. 34

போடுமுன்னே புளியிலையை வேகவைத்துப் பொங்கமுடன் கண்ணைநீ கழுவிப்போட்டு, ஆடுமுன்னே யிந்தயிலை வேதுவைத்து அடைவாகப் போட்டவுடன் கண்ணீர்நிற்கும், நாடுமுன்னே சிவப்பெல்லாம் வாங்கிப்போகும் நலமான அழுகண்ணுந் தீரும்பாரு, கூடுமுன்னே யின்னமொரு வைத்தியந்தான் குணமாகச் சொல்லுகிறேன் கேளுகேளே. 35

கண்வலிக்கெல்லாம் நீர்

கேளப்பா கண்ணுவலி வந்தபேர்க்குக் கெடியான துளசிபுண்ணாக் கிலையினோடு, சூளப்பா புளியினிலை யிந்தமூன்றுஞ் சுகமாகத் தட்டியதைத் துணியில்வைத்து, வீளப்பா வில்லையடா கோளங்கட்டி விதமென்ன தூளதுவும் விராகன்பத்து, பாளப்பா பழம்புளியைக் கரைத்துநீயும் பாங்கான கண்ணுக்குப் பிழிந்துபாரே. 36

31 நீர்ப்பூண்டு நீர்முள்ளி.

34 சீனம்-படிகாரம்,

பாரேநீ பொட்டணத்தைப் பிடிக்கச்சொல்லு பண்பாக நாலுதர மொருநாள்வாரு, சேரேநீ வார்த்தவுடன் வலிதானிற்குஞ் சிறப்பாக நாள்மூன்று யிந்தப்பாகம், ஆரேநீ யைந்தாநாள் சொல்லக்கேளு ஆவிரம்பூ தலையிலிட்டு முழுகச்சொல்லு, கூரேநீ கண்ணுவலி யெங்கே போச்சு குருவான போகரிட கடாட்சந்தானே. 37

தந்தவியாதிக்கெல்லாம் பொடி

தானேதான் தந்தமென்ற வியாதிக்கப்பா தயவான அயப்பொடியும் பலந்தானென்று, வேனேதான் பீங்கானில் போட்டுக்கொண்டு விதமாகக் கடுக்காயுந் தான்றிக்காயும், பானேதான் மாசிக்காய்ச் சீனகாரம் பண்பான கொடுக்காயின் புளியுங்கூட, கானேதான் துருசுடனே காசுக்கட்டி கணக்காக வகைவகைக்கு விராகன்மூன்றே.

மூன்றாக இவையெல்லாம் பொடித்துப்போட்டு முனையெலுமிச்சம்பழத்தின் சாறுவிட்டு, நான்றாக வற்றுமட்டும் ரவியில்வைத்து நலமாக அம்மியிலே யரைத்திடப்பா, பான்றாகப் பழச்சாற்றில் மைபோலாட்டிப் பண்பாகப் பொடியாக்கி வைத்துக்கொண்டு, கூன்றாக வநுதினமும் விளக்கிவாநீ கொடிதான பல்ரோக மோடிப் போமே. 39

பல் புழுக்காக

போமேநீ யின்னமொரு விவரஞ்சொல்வேன் பொல்லாத புழுவிருக்கும் பல்லுக்கப்பா, தாமேநீ கன்னியிட நூலவாங்கித் தயவாக நூலதனைச் சொல்லக்கேளு, ஆமேநீ கீழ்க்காயி னெல்லிவேரை அடைவாகக் காப்பிட்டு ஆதிவாரம், வாமேநீ பச்சரிசி கருப்புக்கட்டி வைத்து மசிநசியென்று நூறுகூறே. 40

கூறேநீ நூற்றெட்டு தாமுஞ்சொல்லிக் கூறடா அவன்பேரைச் சொல்லி மைந்தா, பாரேநீ புழுசெத்துத் தீரவென்று பண்பாக வேரதனை யருமற்றானுஞ், சேரேநீ பிடுங்கிவிடு மறுநாட்குள்ளே செத்ததடா புழுவங்கே சேரத்தானும், வீரேநீ போகரிட கடாட்சத்தாலே விதமாக யின்னமொன்று சொல்லக்கேளே. 41

வாய்புண்ணுக்கு எண்ணெய்

கேளப்பா வாயெல்லாம் புண்ணேவந்தால் கெணிதமுட னெண்ணெயொன்று சொல்லக்கேளு, நாளப்பா விளக்கெண்ணெய் படிதா

38 தர்தம்-பல்.

னென்று நலமான சங்கஞ்சார் படிதானென்று, வீளப்பா பாச்சாலை வாட்டித்தண்ணீர் விதமாகப் படியொன்று அளந்துவாரு, சூளப்பா நீர்ப்பூண்டுச் சாறுநாழி சுருக்கான கஸ்தூரி மஞ்சள் தானே. 42

தானான கரியசீரகத்தி னேடு தயவாக வகைவகைக்கு விராகன் மூன்று, கோனான பொடிபண்ணி யிதனிற்போட்டுக் கொடிதான அக்கினியி லெரித்துவாங்கிப், பானையெண்ணெயைத்தான் பதத்தில் பார்த்துப் பண்பாகத்தான் வடித்து யெடுத்துக்கொண்டு, நானை படியரைக்கால் வீதங்கொள்ளு நாள்மூன்று தான்கொள்ள ரணங்கள் போமே. 43

போமேநீ வாய்ப்புண்ணும் வெள்ளைபோகும் பொங்கமுடன் தடிப்புவகை சிரங்குந்தீரும், தாமேநீ சூலையென்ற கட்டுந்தீரும் தய வாக பத்தியந்தா னறுநாளும், வேமேநீ வெந்நீரு மன்னமாகும் வித மாக மற்றொன்று மாகாதப்பா, வாமேநீ யேழாநாள் முழுகும்போது வகையாகக் கருக்கொன்று சொல்லக்கேளே. 44

சொல்லுவேன் குதிரையஸ்தி யோமத்தோடு சுருக்கான லூஞ்ச லுட பட்டைகூட்டி, வெல்லுவேன் கருக்கியதைக் கியாழம்வைத்து விதமாக வுள்ளுக்குக் கொள்ளச்சொல்லு, கெல்லுவே னுப்பிட்ட பருப்பின்சாறு கெணிதமுட னீர்விட்டு அமுதுகொள்ளு, மல்லுவேன் மற்றுநாள் புளியைக்கூட்டு மைந்தனே யெட்டுக்கு மாகாதென்னே. 45

ஆகாது வாழையிலை வாழைக்காயும் அப்பனே ஈராறுநாள் தான் தள்ளு, வேகாது வாயுவென்ற பதார்த்தந்தள்ளு விதமான பெண் ணுடைய மாய்கையாகா, போகா தில்லாவிட்டால் வியாதியப்பா பொங்கமுடன் தானிருந்தால் பறக்கும்பாரு, நோகாது கிரந்தியெல்லா மகன்றுபோகும் நோய்தீரும் போகருட கடாட்சந்தானே. 46

தானென்ற தடிப்புக்குச் சொல்லக்கேளு தயவான பாச்சாலை வாட்டித்தண்ணீர், பானென்ற படிசால்தான் வடித்துக்கொண்டு பண்பாக நாள்மூன்று கொடுத்தபோது, கானென்ற தடிப்பெல்லா மோடிப்போகும் கனலான புள்ளியென்ற மேகந்தீருங், கோனென்ற மூன்றுகெடுக் கொள்ளும்போது கொடிதாக முன்போல பத்தியமாய்க் காரே. 47

---

42 நீர்ப்பூண்டு-நீர்முள்ளி.

45 குதிரை அஸ்தி குதிரை எலும்பு.

மேகதடிப்பு புள்ளிக்கு அரையாப்பு

காரடா அரையாப்பு வந்தபேர்க்குக் கருவாக மருந்தொன்று சொல்லக்கேளு, பாரடா கொல்லனுட கொவ்வைமூலம் பண்பாக மேற்றோலை நன்றாய்ப்போக்கி, சேரடா அப்பையுட கொவ்வை மூலஞ் செயலான வகைவகைக்குப் பலந்தானிரண்டு, கூரடா கொடி வேலிப் பட்டையப்பா கொடிதாகப் பலமொன்று போடுபோடே. 48

போடேநீ நீர்ப்பூண்டு பலந்தானிரண்டு பொங்கமுட னிதுவெல் லாம் நறுக்கித்தட்டி, சூடேநீ விளக்கெண்ணெய் படிதான்பாதி சுக மான எள்ளெண்ணெய் படிதான்பாதி, நாடேநீ மிருதாரு சிங்கியப்பா நாயகனே விராகனிரண்டு பொடித்துப்போட்டு, கூடேநீ யிவையெல்லா மொருமொரென்று கூடையிலே யின்னமொன்று சொல்லக்கேளே.49

கேளேநீ சூலையிடக் கருப்புக்கட்டி கொடியாகப் பலமிரண்டு சீவிப்போட்டு, வீளேநீ போகாம லிறக்கிவைத்து விதமாகப் பலமரை தான்கொள்ளச்சொல்லி,சூளேநீயெண்ணெய்யொரு கரண்டிகொள்ளச் சுகமாகு மீராறு வேளையப்பா, கோளேநீ வாராமற் பத்தியத்தைக் கேளு கொடிதாக உப்பிட்ட பருப்புநெய்யே. 50

நெய்யப்பா பசுவினெய் வெந்நீராகும் நேராக அன்னமப்பா மற் றொன்றுகா, மெய்யான யெண்ணெயைத்தான் மேலிற்பூசி மேன்மையா யேழுநாள் நீரைவாரு, வெய்யான புளியுடனே யெல்லாஞ்சேரு வித மாகக் கட்டியது கரைந்துபோகுஞ், செய்யான புரைகண்டால் கிழி த்து வார்த்துச் செப்புவேன் ரணங்கண்டால் களிம்பைப்போடே. 51

போடேநீ விளக்கெண்ணெ முழுகச்செய்வாய் பொங்கமுடன் நாள்விட்டு நாள்தானப்பா, நாடேநீ முழுகப்பா பத்துநாளும் நலமாக யெண்ணெயைத்தான் முழுகும்போது, கூடேநீ பெண்மாயை யாகா தப்பா குணமாகி மாசமொன்று செல்லுமட்டும், ஆடேநீ யரையாப்பு தீர்ந்துபோகும் அடைவாகப் போகரிட கடாட்சந்தானே. 52

சகல ரணங்களுக்கும் களிம்பு

தானப்பா களிம்பொன்று சொல்லக்கேளு தயவான லிங்கமுடன் மிருதார்சிங்கு, ஊணப்பா ரசகர்ப்பூ ரத்திேனாடு உத்தமனே வெள்ளை யென்ற குங்கிலியந்தான், கோணப்பா கடுக்காயு மாசிக்காயுங் குண மான காசுகட்டித் தான்றிக்காயும், வாணப்பா ஓரெடையாய்க் கல்வத் திட்டு வகையாகத் தானரைக்க விவரங்கேளே. 53

---

48 கொல்லங்கோவைமூலம் - ஆகாசகெருடன்கிழங்கு. அப்புகொவ்வை மூலம்-சற்கோவைக்கிழங்கு.

50 சருப்புக்கட்டி - சற்சண்டு.

கேளேநீ பசுவினிடவெண்ணெய்போட்டு கெணிதமாய்வொருசாம மரைத்தபின்பு, சூளேநீ தண்ணீரில் மிதக்கவ்வத்துச் சுகமாக மற்றுநா ளெடுத்துக்கொண்டு, கேளேநீ சூலேயப்பா ரணத்திற்பூசக் கொடிதான ரணங்களெல்லாம் ஆறிப்போகும், வேளேநீ களிம்பது வுஞ் சுருக்குமெத்த விதமாக யின்னமொன்று விளம்பக்கேளே. 54

விக்கலுக்கு

விளம்புவேன் விக்கலுக்குச் சொல்லக்கேளு விதமாக சந்தனத் தின் கட்டையோடு, தளம்புவேன் சாம்பிராணி சமமாய்ச் சேர்த்துத் தயவாகப் பொடிபண்ணிக் காகிதத்திற், குளம்புறேன் சுருட்டியதைப் புகைபிடிக்கக் குணமாக விக்கலது தீரும்பாரு, விளம்புறே னின்ன மொன்று சொல்லக்கேளு விதமாகக் கலிக்கமொன்று சொல்லுவேனே.

ஜன்னிகள் பசாசுகள் முதலிய மயக்கத்துக்கு அகத்தீசர் கலிக்கம்

சொல்லுவேன் கிராம்போடு மிளகுசுக்குச் சுகமான துவரை யென்ற பருப்புங்கூட்டி, வெல்லுவே னிவையெல்லாம் விராகனென்று விதமாக அகத்தியனுர் குழம்பைக்கேளு, சொல்லுவேன் விராகனது கால்தான்கூட்டிச் சுகமான மேனிச்சார் தன்னலாட்டி, மல்லுவேன் வெற்றிலேயின் சாற்றுலாட்டி மைந்தனே கயிறதுபோல் வைத்துக் கொள்ளே. 56

கொள்ளடா முருங்கையிலேச் சாற்றிற்றேய்த்துக் குணமாகக் கண்ணிலே போட்டபோது, மெள்ளவே சங்நிமுதற் பசாசுபோகும் மேன்மையாய் விஷமோடு மயக்கம்போகும், விள்ளடா போகருட கடாட்சத்தாலே விளம்பினேன் புலிப்பாணி விளக்கமாகக், கள்ளடா மனத்தோற்குக் காட்டொணுது கருவான வைத்தியந்தா னின்னங் கேளே. 57

முகஜன்னிக்கு யெண்ணெய்

கேளேநீ முகஜன்னிக்கெண்ணெயொன்று கெணிதமுடன் தேங் காய்நெய் படிதானென்று, சூளேநீ வசம்பினேடு வெள்ளைப்பூண்டு சுகமாக ஓமமொடு சதமாங்குப்பை, வாளேநீ வகைவகைக்கு விராகன் பத்து வளமான பெருங்காயம் விராகனென்று, ஆளேநீ மாவிலிங்கம் ஆலின்பட்டை அப்பனே நொச்சியொடு பெருமரமுமாமே. 58

ஆமேநீ பட்டைவகை சொல்லக்கேளு அடைவாக வகைவகைக்கு விராகன்பத்து, தாமேநீ இவையெல்லா மிடித்துமைந்தா தயவாகச்

56 மேனி-குப்பைமேனி.

சரக்கெல்லாம் பொடியாய்ப்பண்ணி, வேமேநீ யெண்ணெயிலே போட் டுக்காய்ச்சி விதமான கடுகுபதந் தன்னில்வாங்கி, போமேநீ முழு கிடவே பறக்குஞ்சன்னி பொங்கமுட நாள்விட்டு நாள்தான்மூழ்கே. ()

ஜன்னிக்கு எண்ணெய்

முழுக்கைவிட்டு எண்ணெயொன்று சொல்லக்கேளு முரிந்தோடுஞ் சன்னியப்பா எண்ணைகண்டால், பழுக்கான வேப்பெண்ணை படிதா னென்று பண்பான சிறுபானை தன்னில்வார்த்து, அழுக்கான மயிற் பீலி யிலேதான்பத்து அப்பனே நறுக்கிநன்றா யதனிற்போடு, சுழு க்கான சூடனொடு சாம்பிராணி சுக்கோடு திப்பிலியு மரத்தைகூட்டே.()

கூட்டப்பா பெருங்காய மோமத்தோடு குணமான கிராம்பப்பா மிளகுகூட, நாட்டப்பா ரசகர்ப்பூ ரத்தினோடு நலமான தேசாவரஞ் சதமாங்குப்பை, கூட்டப்பா இவையெல்லாம் பொடியாய்ப்பண்ணி குணமான சீலையிலே முடிந்துகொண்டு, சாட்டப்பா வகைவகைக்கு விராகனென்று சாதகமா யடுப்பேற்றித் தீயைமுட்டே. 61

மூட்டப்பா சிறுசட்டி கொண்டுமூடி முக்கியமாய்க் குப்புறவே மூடவேண்டுங், காட்டப்பா அக்கினியை யெரித்தபோது கடிதாக யெண்ணையிலே தீயேபற்றும், மாட்டப்பா அதையிறக்கி வைத்த போது மைந்தனே சுடர்காட்டப் பற்றும்பாரு, மூட்டப்பா சட்டி கொண்டு மூடும்போது முக்கியமாய்த் தணலடங்கி வாசமாமே. 62

ஆமேநீ யடுப்பைமிக அணைத்துப்போடு அப்பனே ஆறவிட்டு இறக்கிவைத்து, தாமேநீ சட்டியிலே வடித்துக்கொள்ளு தயவான இஞ்சிச்சார் படியுங்கால்தான், வேமேநீ வெள்ளுள்ளித் தயிலமப்பா விதமாகக் கால்படிதா னளந்துவாரு, போமேநீ அண்டத்தின் தயில மப்பா பொங்கமுடன் படிவீச மதிலேவாரே. 63

வாரேநீ சுக்கப்பா விராகனறு வகையாக சலமதுதான் படிதா னூ, சீரேநீ பொடிபண்ணிக் கியாழம்வைத்துச் சிறப்பாக கால்படிதா னதிலேவாரு, பாரேநீ யொட்டடைத்தூள் கழஞ்சுவொன்று பாங் காக அடுப்பேற்றித் தீயைமூட்டிக், கூரேநீ கடுகுபதந் தனிலிறக்கிக் குணமாகக் கலசத்தில் வார்த்திடாயே. 64

வார்த்தவுடன் கணபதியைத் துதித்துநாடி வகையாகச் சோடச முந் தூபஞ்செய்து, பார்த்தவுட னுள்ளுக்குக் கொடுத்தபோது பாங்கான சன்னிமுதல் வலிப்புதோஷங், கார்த்தவுட னறுநாள் கொடுக்கும்போது காரடா பத்தியந்தா னென்றுமாகா, சேர்த்த

60 அரத்தை-சிற்றரத்தை.

63 அணைத்தல்-தீயாற்றல், அண்டத்தயிலம்-கோழிமுட்டைத்தயிலம்.

வுடனேழாநாள் நீரைவார்த்துச் செயலான வுப்புமுதல் சேர்க்க லாமே. 65

சோகை, காமாலை, வீக்கம், நீர்க்கோவை, பாண்டு, மகோதரம், பீலிகை இவைகளுக்குக் கியாழம்

ஆமேநீ நீர்முள்ளி கீழ்க்காய்நெல்லி அப்பனே விழிவேர் கோவைத்தண்டு, வாமேநீ பூவரசம் பட்டை கையான் வளமான செங் தொட்டி வேரினோடு, தாமேநீ சிறுபூளை வேரினோடு தயவாகச் சம்புடைய துளிருமப்பா, நாமேநீ நெருஞ்சில்வேர் சிறுகீரையின் வேர் நலமான நிலவாகை ஊஞ்சல்பட்டைகேளே. 66

கேளேநீ ஊஞ்சலென்ற பட்டைகூட்டி கெணிதமுடன் வகை வகைக்குப் பலந்தானறு, சூளேநீ சரக்குவகை சொல்லக்கேளு சுகமான கடுக்காய் ரோகணியுங்கூட்டி, வீளேநீ கருஞ்சீர கத்திேைனாடு விதமான காட்டுச் சீரகமுங்கூட்டி, பாளேநீ யில்லையப்பா திப்பிலி யுங்கூடப் பண்பான வகைவகைக்கு விராகனரே. 67

ஆரேநீ இவையெல்லா மிடித்துத்தோண்டி அடைவாக ஆறு பங்காய் நிறுத்துக்கொண்டு, ஊரேநீ யொருபங்கு பாண்டத்திட்டு உத்தமனே நாலுபடி சலத்தைவார்த்து, கூரேநீ யெட்டொன்ருய்க் குறுகக் காய்ச்சிக் குணமாகத் தான்பிழிந்து வடிதான்கட்டு, சேரேநீ கொடுத்துவர ஆறுநாள்தான் செயலான பத்தியந்தா னுப்பாகாதே.

ஆகாது சோகைகாமாலை வீக்கம் அடைவான நீர்க்கோவை பாண்டுபோகும், போகாத மகோதரமும் பீலிகையும்போகும் பொருும லுடன் மேலிளைப்புத் தீர்ந்துபோகும், நோகாது ஏழாநாள் நீரைவாரு நுணுக்கமா யுப்பிட்ட பருப்பைச்சேர்த்து, வேகாது மற்றுநாள் புளி யுஞ்சேரு விதமாக இந்தநோய் தீரும்பாரே. 69

பித்த வெடிப்புக்கு

பாரேநீ பித்தவெடி வந்தானல் பாங்கான மருதுடைய இலையை வாங்கி, சீரேநீ பசுவின்பால் தனில்துவைத்துச் சிறப்பாக மூன்று நாட் குடிக்கச்சொல்லு, வீரேநீ பத்தியந்தான் பாலுஞ்சோறும் விதமாக ஏழாநாள் நீரைவாரு, பேரேநீ போகரிட கடாட்சத்தாலே பேதமில்லை புலிப்பாணி பாடினேனே. 70

நீரிலிரத்தங்கண்டால்

பாடினே னீர்தனிலே ரத்தம்வீழ்ந்தால் பாங்காகப் புழுங்கலரிசி பலந்தானென்று, கூடினேன் விராலியிலை பலந்தானென்று குணமாக வரிசியைத்தா னூரவைத்துச், சாடினே னிடித்தெடுத்துக் கொடுப்பா

யப்பா சார்வாக மூன்றுநா ளாறுவேளை, நாடினே னிந்தவிதங் கொடுத்தபோது நடுநடுங்கி யோடிவிடுந் திண்ணந்தானே. 71

முழங்கால் வாதம்

தானென்ற முழங்காலின் வாதத்துக்குத் தயவாக வீழியிலைப் புண்ணாக்குப்பூண்டுங், கோனென்ற ஆவாரையி னிலையுங்கூடக் குணமாக விலைமூன்றுஞ் சமனாய்ச்சேர்த்து, தேனென்ற வெள்ளுள்ளிப் பூண்டே மூன்றுந் தெளிவாகத் தானிடித்து எடுத்துக்கொண்டு, வேனென்ற விளக்கெண்ணை ஒன்றில்விட்டு விதமாக வேதிட்டுக் கட்டிப்போடே. 72

போடேநீ யிந்தவித மாறுநாளும் பொங்கமுடன் வேதிட்டுக் கட்டும்போது, ஆடேநீ முழங்காலின் வாதமெல்லாம் அன்றோடிப் போகிவிடு மகலத்தானே, கூடேநீ நாட்சென்றால் பிடித்துக்கொள்ளுங் குணமாக மாட்டாது கூர்ந்துபாரு, தேடேநீ போகரிட கடாட்சத்தாலே தெளிவாகப் புலிப்பாணி விளம்பினேனே. 73

இரணங்களுக்குப் புகை

விளம்பினே னின்னமொரு கருவைக்கேளு விதமான ரணங்களென்ற வியாதிக்கெல்லாம், தளம்புகிறேன் கொழுஞ்சியுட வேரின் பட்டை தயவாக வூரவைத்து நையத்தட்டி, குளம்புகிறேன் சுங்கானில் பட்டையிட்டுக் குணமாக லிங்கமப்பா விராகன்பாதி, நளம்புகிறேன் சுங்கான்மேல் வைத்துப்பின்னும் நலமாக முன்பட்டை நிறையமூடே. 74

மூடியபின் தணலைவைத்துப் புகையைவாங்கி முக்கியமாய் விழுங்கியதைச் சுவாசந்தன்னில், நாடியமுன் நாள்மூன்று வேளையாகும் நலமாகக் குடித்தவுடன் பாற்சோறுண்ணு, தேடியபின் ஊந்தாநாட் பத்தியமாய்க்காரு தெளிந்தபின்பு ஆறுநாள் தலையைமூழ்கு, பாடியபின் னேழாநா ளுப்பைச்சேர்த்துப் பண்பாக எட்டாநாள் புளியைச்சேரே. 75

தீரும் வியாதி

சேரப்பா கரப்பனென்ற வகைகளெல்லாஞ் சிறப்பாக ஈராறு நாள்தான் தள்ளு, பாரப்பா கண்ணுவலி கன்னைசையோடு பாங்கான விப்புருதி கண்டமாலை, வீரப்பா அரையாப்பு சூலையோடு விதமான பிளவையொடு லிங்கப்புற்று, கூரப்பா ரணங்களென்ற நோய்களெல்லாங் கூசாம லோடிவிடுங் கொள்கைபாரே. 76

வாய்வு குத்தலுக்கு கியாழம்

பாரப்பா வாயுவென்ற குத்துக்கேதான் பண்பான கொடிவேலிப் பட்டையோடு, வீரப்பா சுக்குடனே பறங்கிப்பட்டை விதமான

74 கொழுஞ்சி-கொட்டாயவேளை.

பிரம்பினிட கிழங்குகூட, சேரப்பா வகைவகைக்கு விராகன்மூன்று செயலான நாலுபடி சலத்தைவிட்டு, கூரப்பா யெட்டொன்ருய்க் கியாழம்வைத்துக் கொடுத்தவுடன் வாயுவென்ற மேகம்போமே. 77

போமப்பா அந்திசந்தி மூன்றுநேரம் பொங்கமுடன் குடித்து விட வாய்வுதீரும், ஆமப்பா பத்தியந்தா னுப்பாகாது அடைவாக வைந்தான ளெல்லாங்கூட்டு, வாமப்பா கொடிவேலி சுக்குங்கூட்டி வகையாகக் கியாழம்வைத் துண்டபோது, தாமப்பா கொடிவேலி சுருக்குமெத்த தயவாக வாயுவெல்லாங் குணமதாமே. 78

கிரந்திக்கெண்ணெய்

குணமாகப் பூசினிக்காய்ச் சாறுபடிரெண்டு குருவான தாழை யுட விழுதுச்சாறு, மணமாகுங் கற்ருழை குமிழின்சாறு மைந்தனே நெல்லிக்காய் கையான்சாறும், வணமாகும் வல்லாரை வில்வத்தோடும் வளமான கொடுப்பையப்பா விழியோடு, சிணமாகும் ஆதொண்டை இலைநீர்ப்பூண்டு சிறப்பான அப்பையுட கிழங்குதானே. 79

தானென்ற பாச்சானை வாட்டித்தண்ணீர் தயவான சங்கோடு நீர்ப்பூலாவும், மானென்ற தென்னையுட பாளையப்பா மைந்தனே தக்காளி யிலையினேடு, கோனென்ற ஆனையுட நெருஞ்சிலோடு கொடி தான ஆல்விழுதும் அறுகம்வேரும், பானென்ற வகைக்குச்சாற் படி யொன்ருகும் பாங்கான பாண்டத்தில் விட்டிடாயே. 80

விட்டவுடன் சாறுவரா மூலியெல்லாம் விதமாக நீர்விட்டு பிழிந்துகொண்டு, சட்டமுடன் அடுப்பேற்றி வற்றக்காய்ச்சிச் சட்டி தனை இறக்கியபின் சொல்லக்கேளு, கட்டவுடன் இளநீரும் பசுவின் பாலும் கருவான பனிநீரும் காடித்தண்ணீர், குட்டமுடன் கோசல மும் அத்திநீருங் குணமாக வகைவகைக்குப் படிதான்வாரே. 81

வாரேநீ இவையெல்லாம் எட்டொன்ருக்கி வகையாக எண்ணெ யப்பா வடிக்கக்கேளு, சீரேநீ சிற்ருமணக்கின் முத்தைவாங்கிச் சிறப் பாகக் காடியிலே ஊறவைத்து, தீரேநீ பசுவின்பால் விட்டுமைந்தா திறமாக வேகவைத்து உலரப்போட்டு, காரேநீ யிளநீரா லெண்ணெ யூற்றிக் கணக்காக வைந்துபடி எண்ணெய்வாரே. 82

வார்த்தபின்பு வேருவகை சொல்லக்கேளு வகையாக நிலப்பனை யும் அசுவகெந்தி, காத்தபின்பு நிலக்குமிழுஞ் சித்திரமூலம் கருவான

---

79 கொடுப்பை-பொன்னாங்காணி.

81 கோசலம்-கோமயம். (பசுமூத்திரம்)

தாமரையின் கிழங்கிஞேடு, ஏத்தபின்பு பூமிசர்க் கரையுங்கூட்டு இதமான துந்தியின்வேர் நீர்நெருப்பு, சேர்த்தபின்பு வகைவகைக்குப் பலந்தானென்று சேர்த்தரைத்து எண்ணெயிலே போட்டிடாயே. 83

போட்டபின்பு சரக்குவகை சொல்லக்கேளு பொங்கமுடன் சாதிக்காய் சாதிபத்திரி, கேட்டபின்பு லவங்கமதி மதுரமாஞ்சில் கெணிதமாய்ச் சோம்போடு ஏலமப்பா, மூட்டபின்பு திரிகடுகு திரிபலாதி முக்கியமாய் வெந்தயஞ் சீரகமுமாகும், நாட்டபின்பு கஸ்தூரி மஞ்சளோடு நலமான ரோசனையும் பூரமாமே. 84

ஆமேநீ வால்மிளகு கசகசாவும் அடைவான சிறுநாகங் கடுக்காய்ப்பூவும், வாமேநீ மல்லிகைதாளிசமாம் பத்திரி வகையான சிறுலவங்கங் கார்போகந்தான், தாமேநீ சீனிகற் கண்டினேடு தலையான கூகைநீறு முத்தக்காசும், ஆமேநீ வகைவகைக்கு கழஞ்சுமூன்று அடைவாகப் பொடிபண்ணிப் போட்டிடாயே. 85

போட்டபின்பு ஆவினெய்படிதானைந்து பொங்கமுடன் தானளந்து அதனில்வாரு, நாட்டபின்பு மெழுகுபதந் தனிலிறக்கி நாயகனே கடுகோடே ஒன்றிலூற்றிக், கூட்டபின்பு கணபதியைப் புகழ்ந்து நாடி குருவினுட தாள்பணிந்து பூசைசெய்து, ஆட்டபின்பு எண்ணை யொரு கரண்டிகொள்ளு அடைவாகப் பத்தியந்தா னில்லைதானே. 86

தானென்ற வாயிலேதான் புண்ணிஞேடு தயவாகத் தடிப்பு முதல் புள்ளிமேகம், வானென்ற செங்கிரந்தி கருங்கிரந்தி வளமான பிரமியங்கள் கிரந்திபுண்ணு, கோனென்ற பெருஞ்சிரங்கு சிறுசிரங்கு கொடிதான மேகங்க ளிருபத்தொன்றுங், தேனென்ற தேகமப்பா அருணன்போலத் தெளிவான போகரிட கடாக்ஷந்தானே. 87

மேகம் 21-க்கும், வாய் நாற்றத்திற்கும் எண்ணை

தானுகஇன்னமொன்று சொல்லக்கேளு தயவான விளக்கெண்ணை படிதானிரண்டு, மானுக இளநீரும் பசுவின்பாலும் மைந்தனே காடியுடன் பொன்னுங்கண்ணி, கோனுக ஆதொண்டை இலைவல்லாரை குணமான வில்வயிலை அறுகம்வேரும், வானுக கள்ளியையும் வாட்டித் தண்ணீர் வளமாக நீர்ப்பூண்டு சாணிப்பாலே. 88

83 அசுவகெந்தி-அக்கிராரக்கிழங்கு. நீர்நெருப்பு-கல்லுருவி.

85 சிறுலவங்கம்-சன்னலவங்கப்பட்டை. முத்தக்காசு -கோரைக்கிழங்கு கூகைநீறு-கூகைக்கிழங்கின்மா.

பாலப்பா வகைவகைக்குப் படிதானென்று பாங்காகச் சரக்குவகை சொல்லக்கேளு, சாலவே வெந்தியஞ் சீரகத்தினோடு சார்வாகக் கொத்துமல்லி சிறுநாகப்பூ, கோலமுடன் சாதிக்காய் கிராம்புஏலங் குணமான அதிமதுரங் கூகைநீறுஞ், சேலமாய்ச் சீனமென்ற காரந் தானுஞ் செயலான வகைவகைக்கு விராகனென்றே. 89

ஒன்றான யிவையெல்லாம் பொடித்துப்போட்டு உத்தமனே சர்க்கரைதான் பலமோவொன்று, பன்றாகக் காய்ச்சியது மெழுகதானால் பக்குவமாய்த் தான்வடித்து எடுத்துக்கொண்டு, நன்றாகத் துட்டெடை தான் கொள்ளும்போது நலமாகு மண்டலத்தில் சூடேதப்பா, ஒன்றாக மேனியது ஊரும்பாரு உத்தமனே வாய்நாற்றம் போகும்பாரே. 90

பாரப்பா போகரிட கடாக்ஷத்தாலே பண்பான புலிப்பாணி விளங்கத்தானுஞ், சீரப்பா கொக்கோகத் திரட்டொன்றப்பா திறமுடனே நாற்றைம்பதுவுஞ் சொன்னேங், கூறப்பா வாடைபதினாறிற் சொன்னேங் குருவான ஞானமொடு தொண்ணூற்றாறு, வீரப்பா ஜோசியமுந் நூற்றுக்குள்ளே விளம்பினேன் நேத்திரம்போல் தோணும்பாரே. 91

எலிகடி 18-க்கு

பாரேநீ இன்னமொன்று சொல்லக்கேளு பதினெட்டு எலிகடிக்கு மருந்தையப்பா, வீரேநீ கரும்பூனை மலத்தைவாங்கி விதமாகக் கழற்சிக்கா யளவுதானுங், கூரேநீ யாலேயுடக் கருப்புக்கட்டி குணமாக முள்ளிக்கா யளவுசேர்த்துச், சேரேநீ மூன்றுநா ளாறுவேளை செயலாகக் கொண்டிடவே தீரும்பாரே. 92

பாரப்பா ஆறுநாள் பத்தியமேகாரு பண்பான வுப்புமுதலொன்றுமாகா, வீரப்பா ஏழாநாள் தலையைமுழ்கு விதமாக வுப்பிட்ட பருப்புமாகுஞ், சேரப்பா எட்டாநா ளெல்லாங்கூட்டிச் செயலாக நாட்சென்றால் சொல்லக்கேளு, கூரப்பா மூன்றுகெடு கொண்டபோது குணமாக எலிக்கடிகள் தீருந்தானே. 93

பேய்நரி, நாய் கடிக்குமருந்து

தானென்ற பேய்நரி நாய்கடித்ததானால் தழைத்தமணித் தக்காளி யிலைச்சாறப்பா, பானென்ற படிகால்தான் கொடுப்பாயப்பா பாங்காக மூன்றுநா ளாறுவேளை, கோனென்ற பத்தியந்தா னுப்பாகாது குணமாகு மேழாநாள் நீரைவாரு, வேனென்ற பேய்நரி நாய்கடிதான் தீரும் விதமாகு மிதன்றழையை மேலேபூசே. 94

பூனைகடி தீர மூலிகை

பூசியே பூனையுட கடிதான்தீரப் புனிதமுள்ள பூனைதொழும் பட்டைவாங்கி, ஆசியே பசுவின்பால் தனிலரைத்து அப்பனே பத்திய மாய் குடிக்கச்சொல்லு, கூசியே முன்போலப் பத்தியமேகாரு குண முள்ள நீலிவேர் தனைஅரைத்து, வாசியே யீராறு நாளும்பூச வகை யாகப் பூனைகடி தீருந் தானே. 95

வண்டுகடிக்கு மருந்து

தீருமப்பா வண்டுகடி வந்தபேர்க்குத் திறமாக மருந்தொன்று சொல்லக்கேளு, மாறுமப்பா வெள்ளாட்டுக் கறுத்தபாலு மைந்தனே தினையரிசி படிதான்காலு, வீருமப்பா மூலியொன்று அறியச்சொல் வேன் விதமான ஆடுதொடா மூலிச்சாறு, கூறுடனே வேகவைத்து அந்திசந்தி குணமாகக் கொண்டிடவே தீரும்பாரே. 96

பாரேநீ சாறதுதான் படிதான்வீதம் பண்பான பத்தியந்தா னுப்பாகாது, கூரேநீ வெள்ளாட்டுப் பாற்சோறுண்ணு குணமாக ஏழுநாள் நீரைவாரு, சேரேநீ வசம்புடனே நீலிவேருஞ் சிறப்பாகத் தானரைத்துப் பூசுபூசு, தீரேநீ வண்டுகடி யெல்லாம்பறக்குந் திற மான போகரிட கடாட்சந்தானே. 97

தானேதா னிதுபோலே விஷமுமுண்டு தயவான மேகவகை யிதுபோலுண்டு, கூனேதான் செய்தொழிலு மிதுபோலுண்டு குடில மாய்த் தாமரைபு மிதுபோலுண்டு, சோனேதா னிதுபோலே தீரா விட்டால் துணிவாக ரசப்பதங்கந்தான் கொள்ளச்சொல்லு, ஊனே தான் கண்டுகண்டு மருந்துசெய்நீ உத்தமனே இல்லாவிட்டா லேய்க் கும்பாரே. 98

பாரப்பா பூரான்தான் கடித்தபேர்க்குப் பண்பான எருக்கம்பூ நரம்பைவாங்கிச், சீரப்பா பூவேழு கொடுத்துப்பாரு ஞாளிமலப் புகையைக்காட்டு, கூரப்பா நாட்சென்றால் மண்டலங்கோள் குண மாகப் பத்தியந்தா னில்லைபாரு, வீரப்பா பூரான்தான் தடிப்புமாறும் விதமாக அதின்விஷமுந் தீருந்தானே. 99

செய்பான், பெருச்சாளி கடிக்கு

தானென்ற செய்யான்தான் கடித்தபேர்க்குத் தயவாகக் கொல்ல னுட கோவைமூலம், பானென்ற பாக்களவு கொள்ளச்சொல்லு

95 பூனைவணங்கி-குப்பைமேனி. தொழும்-வணங்கும்.
99 ஞாளிமலம்-நாய்மலம்.

பண்பான மயிற்பீலி புகையைப்போடு, கோனென்ற செய்யான்தன் விஷமும்போகுங் குணமான பெருச்சாளி கடிதான்தீர, வேனென்ற அறுகம்வேர் வெள்ளிதன்னில் விதமாகக் குடித்தவுடன் தீர்ந்து போமே. 100

தேள்காலி விஷந்தீர மூலிகை

போமப்பா தேள்காலி கடித்தபேர்க்குப் பொங்கமுடன் பெரிய நங்கை வேரைத்தானும், வாமப்பா நீரிலே உரைத்துப்பூசி வளமாக மட்டிப்பால் புகையைப்போடு, ஆமப்பா கடுகடுப்பு அடங்கிப்போகும் அப்பனே தேள்காலி விஷமுந்தீரும், நாமப்பா போகரிட கடாட்சத் தாலே நலமாகப் புலிப்பாணி பாடினேனே. 101

சகல விஷங்களுந்தீர மருந்து

பாடியதோர் விஷங்களெல்லாந் தீரவேதான் பண்பாக எட்டிப் பழந் தன்னைவாங்கி, கூடியதோர் சட்டியிலே வேணமட்டுங் குண மாகத் தானெடுத்து வேப்பெண்ணெவிட்டு, நாடியே அடுப்பேற்றி வேகவைத்து நலமாக உருட்டியதைச் செப்பில்மூடி, தூடியே விஷந் தீண்டி வந்தபேர்க்குத் தூதுவளங் காயளவு கொடுத்திடாயே. 102

விஷத்துக்கு நசியம் கலிக்கம்

கொடுத்திடவே விஷத்துக்கு நசியமொன்று குணமாக நீல மென்ற துரிசைவாங்கி, அடுத்திடவே விராகனரை துணியில்வைத்து அடைவாகசிறுநீரால் நசியம்பண்ணு, எடுத்திடவே விஷமெல்லாமிறங் கிப்போகும் இதமான கலிக்கமொன் றியம்பக்கேளு, தொடுத்திடவே சிறுபூளை கசக்கிக்கண்ணில் தோராமல் சிங்கென்று கொட்டிப்போடே.

சிறுபாம்புகடிக்கு மருந்து

போடப்பா சிறுபாம்பு கடித்தபேர்க்குப் பொங்கமுறு சிறுகுறிஞ் சான் வேரைவாங்கி, நாடப்பா வென்னீரா லரைத்துக்கொண்டு நலமாக அந்திசந்தி மூன்றுநாளுண், வாடப்பா பத்தியந்தா னுப்பாகாது வள மான ஏழாநாள் ஜலத்தைவாரு, சாடப்பா சிறுபாம்பு தடிப்புமாறுஞ் சார்வாக போகரிட கடாட்சந்தானே. 104

குஷ்டத்துக்கு மருந்து

தானென்ற குஷ்டநோய் வந்தபேர்க்குத் தயவாக மருந்தொன்று சொல்லக்கேளு, ஊனென்ற செவ்வலரி வேரையப்பா உலரவிட்டுக்

---

100 மயில்பீலி மயிலிறகு.

101 மட்டிப்பால்-சாம்பிராணி.

குழித்தயில மாகவாங்கிப், பானென்ற குப்பிதனி லடைத்துக்கொண்டு பண்பாகச் சிறுகுச்சி தயிலத்திட்டு, ஏனென்ற ஒருதுளித் தண்ணீரில்குத்தி இதமாகத் தான்கலக்கிக் கொடுத்திடாயே. 105

கொடுத்திடப்பா நாள்மூன்று காலேவேளை குருதியப்பா வடியுமடா ரணங்கள்தோறும், அடுத்திடப்பா பத்தியந்தா னுப்பாகாது அடைவாக ஏழாநாள் நீரைவாரு, விடுத்திடப்பா உப்பிட்ட பருப்பு கூட்டி விதமாக மற்றுநாள் புளியைச்சேரு, எடுத்திடப்பா குஷ்ட நோய் தீர்ந்துபோகும் இதமான போகரிட கடாட்சந்தானே. 106

மருந்தீட்டுக்குச் சிட்சை

தானுக இன்னமொன்று சொல்லக்கேளு தயவாக மருந்திடு கொண்டபேர்க்குக், கோனுக எண்ணெயிட்டு முழுகச்சொல்லிக் குணமாக ரசம்விட்டு அன்னமீய்ந்து, வேனுகத் தேங்காயின் பாலேவாங்கி விதமாகக் கரும்பாலே சர்க்கரையுஞ்சேர்த்து, வானுகத் தேங்காயின் பாலேப்புண்டு வகையாகக் கம்பளமேல் படுக்கச்சொல்லே. 107

சொல்லப்பா முருங்கையென்ற இலேயைவாங்கிச் சோரவே வதக்கியதைச் சார்பிழிந்து, அல்லப்பா சாறுபடி காலேயாகும் அடைவாக ஆவின்பால் நேரேசேர்த்து, அல்லப்பா காலமே கொடுத்தபோது அடைவாகப் பேதியிலே மருந்துவீழும், நல்லப்பா விழுந்தவுடன் ஸ்நானம்பண்ணு நலமாக வேணதெல்லாஞ் சேர்த்துக்கொள்ளே. 108

நஞ்சுண்டார்க்கு கெர்ப்பமழிக்க

கொள்ளவே நஞ்சுண்ட பேர்கட்கெல்லாங் குணமாக நீலிவேர் பட்டைதன்னே, அள்ளவே காடியிலே அரைத்துவூட்ட அடவாக நஞ்சுகக்கி மயக்கம்வாங்கு, மெள்ளவே அளிகருவை யழிக்கவேண்டில் மேன்மையாய்ச்சேர்தளேயை இடித்துமாப்போல், தள்ளவே பூநீறு படிதான்போட்டுத் தயவாக நீறுபடி யொன்றுவாரே. 109

வாரப்பா படிகால்தான் வாங்கிக்கொண்டு வகையாக முந்நீரில் பிசைந்தபின்பு, தாரப்பா அந்திசந்தி மறுநாளொன்று தான்கொடுக்கக் கர்ப்பமது அழிந்துவீழுங், கூரப்பா இந்நீரை மூன்றுநேரங் குறிகண்டால் மாவப்பா கொடுக்கப்போகா, சேரப்பா இந்தரிசி கஞ்சி வைத்து சிறப்பாகக் கருப்புக்கட்டி போட்டுக்கொள்ளே. 110

கொள்ளவே உதிரமது அதிகங்கண்டால் குணமான வேம்பின் பட்டை நனைத்துவைத்து, நள்ளவே மோருவிட்டுப் பிழிந்துகொண்டு

---

106 குருதி-இரத்தம

109 நீலிவேர்-அவுரிவேர்.

நலமாக ஒருநாளி லாறுவேளை, மெள்ளவே கொடுத்துவிட உதிரம் நிற்கும் மேன்மையா யாறுதிங்க ளப்பாகேளு, தெள்ளவே குச்சியிலே துணியைச்சுற்றித் தெளிவாக எருக்கம்பால் தடவிவையே. 111

வையப்பா அல்குலிலே விரலைவிட்டு வகையாகச் சுழற்றியங்கே பார்க்கும்போது, ஐயப்பா உந்தியிடப் பள்ளம்போல அடைவாகக் குழியொன்று இருக்கும்பாரு, வையப்பா கருக்குழிதான் வாயைமூடி வகையாகத் தானிருக்கு மறிந்துபார்த்துக், கையப்பா விரலோடே குச்சியிட்டுக் கணக்காக நெல்நீளம் வைத்துப்பாரே. 112

பாரப்பா உதிரமது காணுமட்டும் பண்பாக இம்முறைபோல் பாங்காய்வைநீ, சேரப்பா மல்லாந்து படுக்கச்சொல்லு செயலாக விடியுமட்டு மிந்தப்பாகம், வீரப்பா இடுப்புவலி சுரமுங்காணும் விதமான தலைவலியு மதிகமாகுங், கூரப்பா திங்களொரு பத்தானுலுங் குணமாகக் கழிந்துவிடுந் திண்ணந்தானே. 113

விதவையைக்கூட பிள்ளையில்லாதிருக்க

தானப்பா கன்னியர்கள் விதவைகூடித் தான்தழுவ வேணுமென்றால் சொல்லக்கேளு, மானப்பா தலைமுழுகும் பக்கந்தன்னில் மைந்தனே புணர்ந்திடவே கெர்ப்பமில்லை, வீணப்பா இதுவறிய மாட்டாமல்தான் விதமாகக் கொலைகள்வந்து நேரும்பாரு, ஊணப்பா இதுவல்லோ பாவம்பாவம் உத்தமனே அறிவாலே அறிந்துதானே. 114

பார்வைக்கு குளிகை

தானென்ற பார்வைக்குக் குளிகை சொல்வேன் தயவாக புண்ணாக்கிலையும் வீழியோடு, மானென்ற ஆவிரையுஞ் சங்குகோவை மைந்தனே சின்னியொடு முட்டைநாறி, வானென்ற நிலவாகை இராசகனிவித்து வளமான முசல்காது வாகையப்பா, கோனென்ற கோழியுட அவரையப்பா குணமான அறுகம்புல் தக்காளிதானே. ()

தானப்பா வேலியென்ற பருத்திகூட்டித் தயவான மிளகாயினிலையுஞ் சேர்த்து, பானப்பா பெருமருந்தி னிலையுங்கூடப் பண்பான தோதகத்தின் மேனியப்பா, ஆனப்பா விஷுப்பையுட இலையுங்கேளு அடைவாக வகைவகைக்கு விராகனைந்து, ஊனப்பா பெருங்காயம் விராகனைந்து உத்தமனே சீனமது விராகனஞ்சே. 116

---

112 அல்குல்-பெண்குறி.

114 பக்கம்-வீட்டுக்குத் தூரமாகிறபட்சம.

115 முட்டைநாரி-எருமுட்டை பீநாரி. இராசகனிவித்து - எலுமிச்சம்பழம்.

அஞ்சப்பா இவையெல்லா மரைக்கும்போது அடைவாக எலு மிச்சம் பழச்சார்விட்டு, மஞ்சப்பா நாற்சாம மரைக்கும்போது மைந் தனே மெழுகதுபோ லிருக்கும்பாரு, தஞ்சமாய்க் குளிகையப்பா கழஞ்சிவீதம் தான்சேர்த்து நிழலுலர்த்திப் பதனம்பண்ணு, வஞ்ச மில்லா மந்திரத்தை ஆயிரந்தானேதி வகையாகத் தேவிக்குப் பூசை செய்யே. 117

தேவிக்கு ஏகமூலம்

செய்யவே மந்திரந்தான் அம் - உம் - ஓமென்று செப்படாமம் மோடேறீயுஞ்சேரு, பையவே ஸ்ரீயுடனே சிங்குவங்கு பண்பாக ஆயிரத்தெட்டே யோது, நையவே பார்வையுடன் சூனியங்கள் நன் ருகத் தீர்ப்பதற்குக் குளிகையொன்று, உய்யவே அப்பையுட சாற்றிற் கொள்ளு உறவான தேங்காயின் பாலிற்கொள்ளே. 118

சூனியந்தீரப் புகை

கொள்ளப்பா மஞ்சளை நீ யரைத்துப்பூசிக் குணமான வெந்நீரில் ஸ்நானம்பண்ணு, அள்ளப்பா புகையொன்று சொல்லக்கேளு அடை வான எட்டிவிரை எட்டிப்பட்டை, கள்ளப்பா செக்கடிக்கீழ் மண்ணு மஞ்சள் கனிவான கொட்டைவிரைத் தூளுங்கூட்டி, உள்ளப்பா மாவிலிங்கம் ஆலின்பட்டை உத்தமனே வேம்பின்மேல் காக்கைக் கூடே. 119

கூடேநீ ஆமையுட ஓடுங்கூட குணமான குதிரையுட குளம்புங் கூட்டி, ஆடேநீ பாம்பின்சட்டை தீட்டுச்சீலை அடைவாக காக்கணம்பூ சிறுகீரைவேரு, நாடேநீ மாட்டுக்கொம்பு மூஞ்சூறின்தோல் நலமில் லாக் கம்பிளியு முசுறுமுட்டை, சாடேநீ இவையெல்லாம் நன்றாய்ச் சேர்த்து சார்வாகத் தானிடித்து எடுத்துக்கொள்ளே. 120

கொள்ளப்பா இக்தெடைக்குக் குங்கிலியங்கொடிதாகத் தானிடித்து எடுத்துக்கொண்டு, மெள்ளப்பா புகைபிடிப்பாய் அந்திசந்தி மேன்மை யாய் மத்தியமென்ற வேளைமூன்றும், தள்ளப்பா ஏவலென்ற குணங் கள்யாவுந் தருவான புகைபில்லி ஆக்கைவைப்பு, விள்ளப்பா சக்கரங் கள் ஓலைவாட்டல் விதமான வேர்பிடுங்கல் தீருந்தானே. 121

பிரமைக்கு அண்டபற்பம்

தானென்ற பிரமையது கொண்டயேர்க்குத் தயவாக மருந் தொன்று சொல்லக்கேளு, கோனென்ற போகரிட கடாட்சத் தாலே குணமாகப் புலிப்பாணி விளக்கஞ்செய்தேன், ஊனென்ற

கபாலத்தை எடுத்துவந்து உத்தமனே எலுமிச்சம் பழச்சாற்றாலே, நானென்ற சீனமதைப் பொடித்துப்போட்டு நலமான கல்வத்தி லரைத் திடாயே. 122

அரைத்தெடுத்து வில்லைதட்டி யுலரப்போட்டு அடவாகப் புடம் போட்டு எடுத்துக்கொள்ளு, விரைத்தவுடன் பொடியாக்கிப் பதனம் பண்ணி விதமாக விராகனெடை கொடுக்கக்கேளு,உரைத்தவுடன் கத்த பத்தின் பாலையப்பா உறவாகத் துட்டெடைதா னிரண்டேயாகும், குரைத்தவுட னிஞ்சிச்சா றதனிற்பாதி குணமாக விதுநேர் சர்க் கரையுங் கூட்டே. 123

கூட்டப்பா ஈராறுநாளே கொள்ளக் குணமாக அந்திசந்தி யிந்தப் பாகம், ஆட்டப்பா நசியமது தும்பைச்சாறு அடைவாகத் தான்விட்டுச் சொல்லக்கேளு, சூட்டப்பா பேய்பீர்க்குப் பேய்மிரட்டி சுகமான பேய்ப்புடலும் பேய்க்குமட்டி, நாட்டப்பா பேயத்திப் பேயாந்தும்பை நலமான எலுமிச்சம் பழமுமாமே. 124

ஆமேநீ யிச்சாற்றைத் தேய்த்துத்தேய்த்து அடைவாக நாறு குடஞ் சலத்தைவாரு, தாமேநீ ஈராறுநாள் தான்வாரு தயவாகப் பத்தி யந்தான் சொல்லக்கேளு, வாமேநீ பச்சரிசி பருப்பினோடு வளமாகத் தான்கொடுப்பா யுப்பாகாது, ஆமேநீ தேவரொடுபிரமைபித்தம் அடை வான வஞ்சனையுந் தீருந்தானே. 125

கிரகசாரத்துக்கு

தீருமப்பா சாந்தியொன்று சொல்லக்கேளு திட்டமாய்க் கிரக மென்ற சாரந்தீர, சாருமப்பா பன்னிரண்டு ராசியோர்க்குச் சகலமு மாங் கிரகங்க ளிருக்கும்பாரு, வீருமப்பா வீடடைத்துத் தகடுதன் னில் விதமாக கும்பம்வைத்துச் சோடசஞ்செய், கூறுமப்பா ஓமமுதல் சாந்திக்கெல்லாம் கூறுவோ மந்திரத்தைச் சொல்லக்கேளே. 126

கேளேநீ நவக்கிரகத் தியானஞ்சொல்வேன் கெணிதமுடன் அம்ஸ்ரீயும் சம்ஸ்ரீயும், ஆளேநீ ஸ்ரீநசி ஸ்ரீமசி உம்கிலி அடைவாகச் சாயுச்சறீநசி அங்கிஷநசி யென்று, நாளேநீ ஆயிரத்தெட் டுருவை யோதி நலமாகச் சாந்திசெய்து மருந்தையூட்டு, கேளேநீ கடிவிஷங்க ளெல்லாம்போகுங் கெடிதான அசாத்தியமென்றாற் செய்யொணாதே.

செய்யாதே பொய்க்கோபங் கொலைத்திருட்டு செயலான வைத்தி யங்கள் செய்யும்பக்கம், வையாதே பெண்களுடன் சேர்ந்திடாதே மையல்மிகக்கொள்ளாதே கிருதுசெய்யாதே, வையாதே யவரிடத்தில்

123 கத்தபம்-கழுதை.

வீண்பேசாதே வகையான வல்வகையே சொல்லிடாதே, பையாதே தேகமதில் தேனையுண்டு பண்பான வண்டதுபோல் பொருளைச் சாற்றே. 128

சூனியத்திற்கு எண்ணெ

சாராதே சூனியங்கள் தீர்க்கயெண்ணெ சாற்றுகிறேன் சுடுதருத்தி தவமுருங்கை, வீராதே முயல்காது செங்நாயுருவி வினையாகுங் கோவை மிளகுத்தக்காளி, சீராதே நாய்பாகல் வட்டத்துத்தி சிறப்பான அசுவகெந்தி சிறுகீரைசூரி, மீராதே நிலவாகை நன்னாரிபாலை மிதமாக வேர்க்கால்பலஞ் செப்பினேனே. 129

செப்புவே னெருஞ்சியு முருங்கை வாகையோடு செழித்திருக்கும் முட்டியுடன் நாமக்கோவை, கப்பவே பேய்பருத்தி கண்டங்கத்திரி கடியமருளூமத்தைப் பேய்பீர்க்கப்பை, வெப்பகலவருமேனிபெருந் தக்காளி வேடிதமாஞ் சின்னியிலை இவைகள்சாறும், அப்புமிது வகைக்குப் படியதாக அளந்துவிட்டு எட்டொன்றாய்க் குறுக்கிவாங்கே. 130

குறுக்கியே எள்ளெண்ணெ நாழிவிட்டுக் கூறியமுன்வேரின் வகை சூரணித்து, துறுத்தியே யலைத்ததிகைப் பூண்டுமூன்று துணியும் வவ்வால்தோல் பலமரைக்கால் சேர்த்து, முறுக்கியே வேம்பாடம் உள்ளியோமம் முனையான கருஞ்சீரகமுங் கிராம்பு, பெருக்கியே காயங் கோஷ்டஞ் சாதிபத்திரி பேணுங்கோரோசனையு முனையாக் கூட்டே. 131

முனையாக வகைக் கரைக்கால் பலமதாக முட்டியிடிசூரணமும் பொடியுமொன்றாய், வினையறுக்கு மெண்ணெயிலே பொடியும்போட்டு விரவிவெந்து மெழுகுபதந் தனில்வடித்து, எனையாளுங் கணபதிக்கு மலருஞ்சூட்டி யேழுபங்காய்த் தக்ஷணையும் வைத்துப்போற்றி, பனையவே தேகமதில் துவளைபோட்டால் பறக்குமே சூனியங்கள் பகரக்கேளே. 132

கேளேநீ முகமாறு மாங்கிஷங்தெரிதல் கெடியம்பு தான்றெரிதல் முட்டுச்சூன்யம், நீளேநீ பாவமுட்டு விளக்கெரித்தல் நிலையாணி முளைபடித்தல் அட்டைதைத்தல், சூளேநீ பெண்கட்டு ஆணின்கட்டு சுருக்காக அனலெரிவு குடல்கள்வெப்பு, வாளேநீ கம்பியொடு சூத்திரங்கள் வட்டதிலதம் மெதிரேற்றுஞ் சூனியமாமே. 133

சூனியமாங் கட்டைதன்னில் பதலிபாம்புச் சுணங்குடனே பச்சோங்தி விரியன்பல்லி, வானியமாம் புலிமுயல் கழுதைப்பன்றி

---

129 தவமுருங்கை-தவசுமுருங்கை. அசுவகெந்தி-அமுக்கரா. சூரி-நத்தைச்சூரி.

130 முட்டி-பேராமுட்டி.

வலுமுதலைநரி யுடும்பு தவளை மீன்கள், ஈனியானை எலிபட்சி தலையில் வைத்து இதமாக ஈமமொடு சந்திபாதை, கானியா மோலைமுதல் சக்கரம்வாட்டுக் கடுப்பெதிர் வைத்திடும் சூனியமும்பேரே. 134

பேரான நரம்புசுற்றி யுடம்பெறிவுதானும் பொலிவுடனே விகார முடன் ரத்தம்விக்கல், நேரான பாவைசெய்து முடங்கலாக்கி நிலையாத பிரம்மையொடு மயக்கஞ்செய்தல், மாநரான கண்டபலங் கண்டமாலை மதிகெட்ட விப்புருதி மாருட்டங்கள், வீரான கொடிமரங்கள் பாவை வைப்பு வெடிமலங்கள் வஞ்சனை சூனியமும் போமே. 135

மூலரோகத்துக்கு சூரணம்

போமேநீ மூலமென்ற ரோகந்தீரப் பூட்டுகிறேன் மருந் தொன்று சொல்லக்கேளு, ஆமேநீ தூதுவேளை மூலத்தோடு அடை வான மருட்கிழங்கு கருணைமூலம், தாமேநீ பிரண்டைவேர் நல்ல வாரை தயவான காட்டுடைய கருணைமூலம், வாமேநீ மிளகருணை மூலந்தானும் வளமான அறுகினுட கிழங்குதானே. 136

தானென்ற நீர்ப்பூண்டு கிழங்குமூலி தயவாக உரலிலிட்டுத் தூளாய்ச்செய்து, கோனென்ற பொடியெல்லாஞ் சமனுய்ச்சேர்த்துக் கொடுப்பாயே விரற்கடைதான் தேனிற்கொள்ள, நானென்ற நாற்பது நாள் கொள்ளும்போது, நடுநடுங்கி மூலமெல்லா மோடும்பாரு, வானென்ற போகரிட கடாட்சத்தாலே வளமான புலிப்பாணி விளம்பி னேனே. 137

கிரந்தி அரையாப்புக்கு எண்ணெய்

விளம்புகிறேன் எண்ணெயொன்று சொல்லக்கேளு விதமான சங்கோடு சங்கங்குப்பி, உளம்புகிறேன் கருநொச்சி சுடுதரத்தி உத்த மனே வெள்ளறுகு சின்னியோடு, தளம்புகிறேன் கிரந்திநாயகமுங் கூடத் தயவான பூவரசம் பட்டையோடு, குளம்புகிறேன் பாச்சானை வாட்டித்தண்ணீர் குணமான நீர்ப்பூண்டுச் சார்தான் வாரே. 138

வாரப்பா வகைவகைக்குப் படிதான்வீதம் வகையாக அளந்து விட்டு எண்ணைநாழி, சேரப்பா ஒருநாள்தான் ரவியில்வைத்துச் சிறப் பாக மற்றுறு எனலைமூட்டு, மாரப்பா எட்டொன்றுய்க் காயும்போது மைந்தனே சரக்குவகை சொல்லக்கேளு, கூரப்பா பறங்கியுடப்பட்டை தானுங் குணமான கருஞ்சீரகங் கார்போகமாமே. 139

ஆமேநீ கஸ்தூரி மஞ்சளோடு அடைவான வசம்புடனே வெள் ளைப்பூண்டு, தாமேநீ வகைவகைக்கு விராகனைந்து தயவாக எண்ணை யிலே பொடித்துப்போடு, வாமேநீ மெழுகுபதந் தன்னில்வடித்து

---

136 மூலமென்பது-கிழங்கு அல்லது வேர்.

வகையாகப் படியரைக்கால் கொள்ளச்சொல்லு, போமேநீ மூன்றுநாள் கொண்டபின்பு பொலிவான பத்தியந்தா னாறுநாளே. 140

நாளான வேழாநாள் தலையைமுழ்கு நலமான உப்பிட்ட பருப்பைச்சேரு, கேளான நாற்பதுநாள் கடுகொள்ளாதே குணமான வாழையிலே வாழைக்காயுங், தேளான கரப்பனென்ற தெல்லாந்தள்ளு தெளிவான பெண்மயக்கஞ் சற்றுமாகா, பாளான கிரந்தியரையாப்புச் சூலை பண்பான மேகமெல்லாந் திருந்தானே. 141

பிரமனுக்கும் வாசவனுக்குஞ் சாபம்

தானான முன்யுகத்தில் பிரமாவுக்குத் தாயான பார்வதியாள் தந்தசாபம், கோனான தண்டாயுதத்தைப் பூசைசெய்து கொடிதான சாபமது நிவர்த்தியாச்சு, தேனான திரேதாயின் யுகத்திலப்பா தேவேந்திரனுக்கு துருவாசர்சாபம், மானான தேவர்கோன் பூசை செய்து மைந்தனே முனிசாபந் தீர்ந்துபோச்சே. 142

போனபின்பு சொக்கலிங்கந் தன்னிற்சென்று பொன்னுலகில் தேவேந்திரன் பட்டமாச்சு, ஆனபின்பு துவாபரத்தில் போகநாதர் அடைவான கற்சிலையில் அம்மனென்று, கோனபின்பு கொங்கணருங் கருவூராறும் கூட்டிவந்து முன்னிட்டா ரையன்முன்னே, போன பின்பு கற்சிலையைச் சேர்ந்தபோது சிந்தைதனிற் சிலையென்று அறிந்திட்டாரே. 143

அறிந்தபின்பு அச்சிலையைப் பார்த்துஅம்மா அபசார மடியேற்கு நிவர்த்தியென்ன, வறிந்தபின்பு சிவகிரியில் தண்டபாணி மன்னவரைப் பூசிக்க நிவர்த்தியாகும், புரிந்தபின்பு என்னசிலை தானும்சொல்லப் போகருமே துவாபரத்தில் பூசைசெய்தார், சரிந்தபின்பு அபசாரம் நிவர்த்தியாச்சு சார்வான கலியுகத்தில் சொல்லக்கேளே. 144

கேளேநீ கலியுகத்தி விருநூற்றைந்தில் கேசரிபோல் புலிப்பாணிபோல் பேரும்பெற்றேன், சூளேநீ சலந்திரட்டிக் காத்திலேந்திச் சுகமாக வேங்கையின்மேல் ஏறிச்சென்று, நாளேநீ சிவகிரியில் தண்டபாணிநாதருக்குப்பூசித்து அருளைப்பெற்று, ஆளேநீ போகரிட குகைமேலேயா அஷ்டசத்தி பதிதனிலே வாழ்ந்தேன்பாரே. 145

---

141 கடு-கசப்பு.

142 தேவர்கோன்-தேவேந்திரன்.

143 கற்சிலை-உருப்பட்ட கல்.

145 கேசரி-சிங்கம்.

மேருவுக்கு வடக்குமனிதர்

பாரேநீ யுகந்தோறுஞ் சொல்லக்கேளு பண்பான மேருவுக்கு வடபாகத்தில், தீரேநீ மனிதரப்பா தங்கவண்ணம் திகழ்மதியா முயரமப்பா சொல்லக்கேளு, வாரேநீ நாலாயிர முழமேயாகும் வளமான ஆலங்கனி யுநீரோடே, சீரேநீ யருந்துவது அதுதானப்பா சிறப்பான சதாசிவமே தெய்வந்தானே. 146

தானுகும் வயதுதான் நாலுலட்சந் தாயாகச் சத்தியத்தைக் கைவிடாதார், கோனுன பொய்யொன்றுஞ் சொல்லிடாதார் குவலயங்கள் கைலையல்லால் வேறென்றில்லை, சேனுன மேருவுக்கு வடபாகத்தில் செயலான மனிதருட செய்கையப்பா, தேனுன போகரிட கடாட்சத்தாலே தெளிவாகப் புலிப்பாணி விளம்பினேன். 147

விளம்புகிறேன் மேருவுக்குக் கிழக்கேயப்பா விதமான மனிதர்கள்தாம் நீலவண்ணம், தளம்புகிறே னுயரமது நானூறாகும் தயவாக நாவற்கனியுமங் நீரோடே, கிளம்புகிறேன் அருந்துறது இதுதானப்பா கிருபையுள்ள விஷ்ணுவே தெய்வமாகும், நளம்புகிறேன் வயதுதானிரண்டுலட்சம் நலமில்லா அதிசயங்க ளில்லைதானே. 148

இல்லான மேருவுக்கு மேற்கேயப்பா இருப்பார்கள் மனிதரப்பா ரத்தவண்ணம், வல்லான வுயரமது நாற்பதாகும் வகையான மாங்கனியு மங்நீரோடே, எல்லாரு மருந்துறது இதுதான்பாரு இதமான பராசத்தி தெய்வமாகும், சல்லான வயதுதான் லட்சமாகும் சார்வான சத்தியமும் பொய்யில்லாரே. 149

பொய்யில்லை மேருவுக்குத் தெற்கேஐயா பொங்கமுடன் மனிதருட னிறத்தைக்கேளு, மையில்லா நிறமதுதான் அந்தவண்ண மைந்தனே யுயரமது முழந்தானுலு, செய்யில்லா அறுசுவையு மநேகவர்க்கஞ் செயலான அன்னமொடு சருகைநீரும், எய்யான பாலோடு கிழங்கு காய்கள் இதமான அமுர்தமது கொள்வாருண்டே. 150

உண்டான அநேகவித தெய்வமுண்டு வுத்தமனே சாஸ்திரங்களனேகமுண்டு, பண்டான பொய்கொலையுங் களவுமுண்டு பண்பில்லா விசுவாசம் பாவமுண்டு, சென்டான முறைமைகெட்டு மையல்கொண்டு செயலான பாக்கியமும் வறுமையுண்டு, கொண்டான வயதுதானூறென்பார்கள் கொற்றவனே நிச்சயந்தா னில்லைதானே. 151

தானென்ற கோயில்குளம் ஆறுமுண்டு தயவான புண்ணியமும் பாவமுண்டு, மானென்ற சித்தரென்றும் முனிவரென்றும் மகிமையாந் தபோதனர்கள் பெரியோரென்றும், கோனென்ற வரசரென்றுங் குருக்களென்றும் கொடிதான பிரமலிபி கடந்தோரென்றும், வானென்ற கிரகங்கள் நோய்களென்றும் வகைவகையாய்ப் பலசாதி யனேகந்தானே. 152

தானுக போகரிட கடாட்சத்தாலே தயவாகப் புலிப்பாணி விளக்கஞ்செய்தேன், வீணுக அவரவர்கள் செய்தார்கர்மம் விளைந்துதடா நோய்போலே வநேகங்கோடி, கோனுக வந்தகர்மந் தீரவேண்டிக் குணமாகத் தானதருமஞ் செய்யவேண்டும், தேனுகத் தருமங்கள் செய்யாவிட்டால் தேகமது நோயிட்ட பாண்டமாமே. 153

ஆமேநீ மருந்திடு முறியவேண்டில் அப்பனே இலவினுடபட்டைகொண்டு, தாமேநீ எலுமிச்சங் காயின்சோடு தயவாக அரைத்துக் காடியிற்கலக்கி, வாமேநீ துட்டெடைதான் சர்க்கரையுங்கூட்டி வளமாகக் கொடுத்தவுடன் மயக்கந்தீரும், போமேநீ பெண்மயக்கம் ஆண்மயக்கம் போச்சேநீ மூன்றுநாள் கொடுத்தபோதே. 154

சூலைக்கு

போதேநீ சங்கம்வே ரிழைத்தரைத்துப் பொங்கமுடன் புன்னைக்காய் விதமாகச், சூதேநீ யில்லையடா காடியிற்கொள் சுருக்கான மண்டலத்தில் வியாதியெல்லாம், ஊதேநீ யோடிவிடும் நாடுவிட்டு உத்தமனே பத்தியந்தா னில்லையப்பா, சாதேநீ வெள்ளாட்டமுரி தன்னிற் கொள்ளச் சார்வாக சூலையது தீருந்தானே. 155

கர்ப்பமுண்டாக எண்ணெய்

தானேதா னின்னமொன்று சொல்லக்கேளு தயவான வீழியிலைச் சாறுநாழி, மானேதான் தைவேளைச் சாறுநாழி மைந்தனே பிரமியிலைச் சாறுநாழி, கோனேதான் கொட்டையிலைச் சாறுநாழி கொடிதான நிலவாரைச் சாறுநாழி, தேனேதா னுவின்பால் படிதானுழி தெளிவாகச் சரக்குவகை சொல்லக்கேளே. 156

கேளேநீ மஞ்சளுடன் கடுகுகூடக் கெனிதமுட னிந்துப்பு வெண்காரந்தான், நாளேநீ கடுக்காயும் வெள்ளைப்பூண்டு நலமான ஆண்வசம்பு சுக்குங்கூடப், பாளேநீ வகைவகைக்கு விராகன்மூன்று பண்பாகப் பொடிசெய்து இதனிற்போட்டு, கேளேநீ விளக்கெண்ணை நாழிவிட்டுக் கெடிதாக மெழுகுபதந் தன்னில் வாங்கே. 157

156 கொட்டையிலை-கொட்டைக்கரந்தை.

வாங்கியே கணபதிக்கு முன்னேவைத்து வகையாக சோடசங் கள் செய்தபின்பு, பாங்குடனே மாதவிடை மூன்றும்நாள்தான் பண்பாகத் தலைமுழுகிக் கரண்டியெண்ணெ, தாங்கியே கொடுத்துவிடு நாள்மூன்றப்பா தயவாக மறுபத்திய மொருநாட்காரு, தூங்கியே திரியாதே ஐந்தாநாளில் துருசாக சிரசுக்கு நீரைவாரே. 158

வாரேநீ வறுத்தவுப்பு பொரிச்சாரப்பா வளமாக மற்றுநா ளெல் லாஞ்சேரு, தீரேநீ மற்றுநாள் நசியமொன்று தீர்க்கமாய் வேலியிலை வேரைத்தட்டிக், கூரேநீ வலதுநாசியிற் பிழிந்தால் கொற்றவனே ஆண்பிள்ளை பிறக்கும்பாரு, சீரேநீ யிடதுநாசியிற் பிழிந்தால் சிறப் பான பெண்ணென்றுஞ் செப்பினேமே. 159

துவளை

செப்பினேன் துவளையொன்று சொல்லக்கேளு சிறப்பான மாவிலை மாதளையுஞ் சேர்த்து, செப்பினேங் கஸ்தூரி மஞ்சளோடு தாயகமா யிவைமூன்றுஞ் சமமாய்ச்சேர்த்து, அப்பினேஞ் சலம்விட்டுஅரைத்து மைபோல் அடைவாக மேனியெங்கும் பூசச்சொல்லு, செப்பினே மேனேக்கி யுதிர்த்துப்போடு விதமாகவுதிர் தழைத்தான் சேரவாரே.

புகை

வாரினதை மாவிலையின் தன்னில்வைத்து வகையாக முகங்காட்டி தலையைச்சுற்றி, கோரினே நடுவாசல் குழியைத்தோண்டிக் குணமாகத் தான்புதைத்துச் சொல்லக்கேளு, ஆரினேன் ஜலமதுதான் சிரசில் வார்த்து அப்பனே புகையொன்று சொல்வேன்பாரு, தூரினேன் சாம்பிராணி அகிலின்கட்டை தூளிடித்துப் புகைகாட்டு நாள்தான் மூன்றே. 161

மூன்றுநாள் துவளையிட்டுப் புகையும்போடு மூர்க்கமுள்ள சிதம் பரத்தை மாறிக்கட்டு, ஈன்றுபோல் மூன்றுதினங்க ளிந்தப்பாகம் இதமான மாதவிடா யாகும்பக்கம், கூன்றுபோ விம்முறையைச் செய் யும்போது குணமாகக் கர்ப்பமது தரிக்கும்பாரு, ஊன்றுபோம் போக ரிட கடாட்சத்தாலே உத்தமனே புலிப்பாணி பாடினேனே. 162

சிவகிரி வளப்பம்

பாடினேன் சிவகிரியின் மாற்றேதென்னில் பண்பாக ஆயிரத் தெட்டுமாற்று, சூடினே நவலோக மிதிலேயுண்டு சுருக்கப்பா சாஸ்திர மும் வேதையோடும், வாடியேதிரியாதே நரையும்மாறும் வயதப்பா லக்கில்லை கெவனியாவாய், நாடியே சுன்னமொடு சிந்தூரக்காடு நாய கனே அஷ்டசித்தி நடனந்தானே. 163

தானென்ற நவசித்தர் கோடாகோடி தானடன மதிகமடா சித்தர் கூட்டங், கோனென்ற மலையுள்ளே விருட்சமூலி குற்றமில்லை வேதை யுந்தா னனேகஞ்செய்வார், வானென்ற தேவரொடு முனிவர் சித்தர் வருகிறதும் போகிறதுங் காணச்செய்யு, மானென்ற தேவரொடு தவமேசெய்தோர் மைந்தனே சிததிமுத்தி பெறுவர்தானே. 164

வராககிரி

தானென்ற வராககிரிச் சருவில்மைந்தா தயவான வோடைகளும் ஆறுதோற்றும், தேனென்ற அருவியதும் மண்ணுங்கல்லுந் தெரியா மல் தங்கமாயிருக்குமப்பா, பானென்ற மூலிகையால் வேதயாகும் பட்டமண்ணுங் கல்முதலாய்த் தங்கமாகும், கோனென்ற சிலைபோலே கிடக்கும்பாரு கொற்றவனே யறியார்க ளாருந்தானே. 165

தானான சதுரகிரி மேலேயப்பா தயவான உதகமொன்று இருக்கு தப்பா, மானான காஞ்சனமாங் காயசித்தி மைந்தனே அஷ்டசித்தி கெவுனசித்தி, கோனான தேவர்முதல் கணங்கள்யாவுங் கூப்பிட்டால் கேள்விவந்து கேட்கும்பாரு, வானான சித்தருட கூட்டமெத்த வள மான சஞ்சீவி மூலியுண்டே. 166

உண்டான மூலியைத்தான் குகையினுள்ளே ஒளித்துவைத்தார் சித்தரெல்லாம் வெளியாமென்று, பண்டான சித்தர்க்கு மூலிகிட்டும் பாவிகட்கும் கர்மிகட்குங் கிட்டுமோசொல், செண்டான பூவுலகில் மனுடரெல்லாஞ் செத்தவர்க ளெழுந்திருப்பார் திடங்கொள்ளாது, கொண்டான விதியாளிவந்தானாகில் கூப்பிட்டுத்தான் கொடுப்பார் சித் தர்தானே. 167

இருமலுக்கு லேகியம்

தானான லேகியந்தான் சொல்லக்கேளு தருவான கரிப்பான்சார் படிதானொன்று, பானான காணிச்சார் நாழியொன்று பண்பான சங்கம் பழச்சாறுநாழி, வானான தேன்படிதா னரையுங்கூட்டி வளமான ஆவினெய் படிகால்சேர்த்து, கோனான திப்பிலியு மிளகுசுக்கு கொடி தான சிற்றரத்தை கடுக்காய்தானே. 168

தானப்பா வகைக்குவகை விராகனைந்து தான்பொடித்து வடி கட்டி லேகியமாய்க்கிண்டி, வானப்பா நெல்லிக்கா யளவாய்க்கொள்ள வளமாக வீராறு நாளுக்குள்ளே, கோணப்பா அந்திசந்தி கொண்ட போது கொடிதான இருமலெல்லாங் குடியேபோகும், நாமப்பா பத்தி யந்தா னில்லையையா நாயகனே லேகியந்தான் மேருவென்னே. 169

166 உதயம்-சலம். காஞ்சனம்-பொன்.
168 கரிப்பான்சார்-கையாந்தகரை.

சூலேவாயு மேகத்துக்கு தைலம்

என்னவே தைலமொன்று சொல்லக்கேளு இதமான கொடிவேலி மூலிதானும், பன்னவே துலாமரைதா னிடித்துப்போட்டு பண்பான ஆவின்பட்டை சங்கவேரு, நன்னவே வகைக்குவகை துலாமே கால் தான் நாயகனே இத்துடனே கூடச்சேர்த்து, அன்னவே தூணிநீர் விட்டுக்காய்ச்சு யப்பனே எட்டொன்றாய்க் குறுக்கிவாங்கே. 170

வாங்கியே எள்ளெண்ணெ நாழிவாரு வகையாக மிளகுபல மரைத்துப்போட்டுத், தாங்கியே பசுவின்வெண்ணெ பலந்தானென்று தயவாக வேப்பெண்ணெ படிகால்வாரு, பாங்கியே மெழுகுபதந் தனில் வடித்துப் பண்பாக முழுகிவரச் சூலேயேகுந், தூங்கியே திரியாதே மேகமெல்லாந் துடித்துவிழுந்தோடு மெதிர்நில்லாதே. 171

பிரமேகத்துக்கு எண்ணெ

நில்லாத பிரமேகந் தீரவேண்டில் நிட்சயமாய்த் தேங்காய்பால் படிதானென்று, வல்லான பொடுதலேச்சார் படிதானென்று வளமான பிரமிச்சார் படிதானென்று, நல்லாக வெரித்திறுத்து எண்ணெவாங்கி நாயகனே மூன்றுநா ளாறுவேளை, சொல்லாகக் குடித்தவுடன் பிரமியங்கள் சிறப்பாகத் தீருமடா திண்ணந்தானே. 172

திண்ணமாய்ப் பத்தியந்தா னுறுநாளுஞ் சிறப்பான ஆவின்பாலாகுமல்லால், வண்ணமாய் மற்றொன்று மாகாதப்பா வளமாக ஏழாநாள் தலேயைமுழ்கு, உண்ணமாஞ் சீப்பிரமியம் ரத்தப்பிரமியம் உத்தமனே தீருமடா இந்தயெண்ணெ, எண்ணமொன்று மில்லேயடா விசனம்போகும் என்னசொல்வே னெண்ணெயுட வீரந்தானே. 173

சுகபேதி சூரணம்

வீரந்தான் பேதியொன்று சொல்லக்கேளு விதமான சிவதைவேர் பசுவின்பாலில், சீரந்தான் மிதக்கவிட்டுச் சுண்டக்காய்ச்சித் திறமாக வுலர்த்தியதைத் தூளாய்ப்பண்ணி, வாரந்தான் சரியெடை சர்க்கரையுஞ்சேர்த்து வளமாக ஏலமது அரைக்கால் சேர்த்துப், பாரந்தான் வெருகடிதூள் வெந்நீரிற்கொள்ள பள்ளநற் சீதமுதற் கழிந்துபோமே. 174

விப்புருதிக்கு மருந்து

போமேநீ விப்புருதி வந்தபேர்க்குப் பொங்கமுடன் சல்லிவேர்க் கிழங்குவாங்கி, தாமேநீ கழுவியதன் தோலேப்போக்கித் தயவாக

174 பள்ளம்-திசைக்கோல் குறிப்பு.

நாலுபல மொருவேளைக்கு, வாமேநீ கம்புமா வரைப்படியும் போட்டு வள்மாகக் களிகிண்டி அந்திசந்தி, ஆமேநீ பசுவினெய் கருப்புக்கட்டி அடைவாக மூன்றுநாள் கொண்டிடாயே. 175

கொண்டபின்பு மறுபத்திய மூன்றுநாளுங் குணமாக வெந்நீரும் அன்னமாகும், கண்டபின்பு ஏழாநாள் சலத்தைவாரு கருவான விப்புருதி கரைந்துபோச்சு, அண்டபின்பு சின்னிபொடு தலையின் சாறு அப்பனே பத்தியந்தா னிந்தப்பாகம், உண்டிடவே அரையாப்பு விப்புருதிதீரும் உத்தமனே மேகசலக் கட்டிபோமே. 176

போமேநீ மருந்தீடு வாந்தியாகப் பொங்கமுடன் கரிப்பான்சார் தன்னைவாங்கித், தாமேநீ யிருப்புடைய படியிலப்பா தயவாகக் காற் படிச்சார் படியில்தானும், வாமேநீ எலுமிச்சம்பழச்சார் நேரே வள மாக அந்திசந்தி படியில்விட்டு, ஆமேநீ யுதயாதி தொடரு முன்னே அப்பனே உள்ளுக்குக் கொடுத்திடாயே. 177

கொடுத்திடவே வாந்தியது காணும்பாரு கொடிதான மருந்தீடு எல்லாம்வீழும், அடுத்திடவே வாந்தியது அதிகங்கண்டால் அடை வாகப் பச்சரிசி பருப்பினோடு, கடுத்திடவே கஞ்சியதுகொண்டபோது களங்கமற வாந்தியது நிற்கும்பாரு, தொடுத்திடவே மருந்தீடு தீர்ந்து போச்சு தோஷமது விலகிற்று தொழிலைப்பாரே. 178

சாதிலிங்கக் கட்டு

பாரேநீ லிங்கமது விராகன்பத்து பாங்கான முலைப்பாலி லொரு நாள் போட்டுச், சீரேநீ விராகனெடை தங்கரேக்கு சிறப்பான லிங்கத் தின் மேலேசுற்றி, தேரேநீ வெண்காரம் பொரித்துப் பூசித் திறமாக செங்கொட்டைப்படி நறுக்கிப்போட்டு, வீரேநீ யிடித்தப்பா தேங்காய் மட்டம் விதமாக் லிங்கத்தைப் பொதிந்துமூடே. 179

மூடியே சிறுசட்டி நடுவில்வைத்து மூர்க்கமுள்ள பசுவெண்ணைத் தேங்காய்வீதம், நாடியே செங்கொட்டை யுருண்டைமேலே நலமாக வைத்தெரிக்கக் கனல்தான்மீறி, ஆடியே தீயெரிந்து சாம்பலாகும் அப்பனே ஆறவிட்டு எடுத்துப்பாரு, கூடியே லிங்கமது வுருகிக்கட்டிக் கொற்றவனே உருக்கமதுபோ லிருக்கும்பாரே. 180

---

175 சல்லிவேர்-தண்ணீர்மிட்டான்.

179 லிங்கம்-சாதிலிங்கம். மட்டம்-அளவு.

180 உருக்கு-எஃகு.

சூலே 18-க்கும் கிஷாயம்

பாரடா சிவன்வேம்பு சங்கம்வேரு பாங்காக முக்கழஞ்சி சித்திர மூலங், கூரடா வெள்ளறுகு அசுவகெந்தி கொடிதான சங்குப்பி மூலத்தோடு, வீரடா பிரம்பினுட கிழங்குகூட விதமான பூவரசன் பட்டைதானுஞ், சேரடா நஞ்சுண்ட பட்டையப்பா சிறப்பாக வகைக்குவகை பலந்தா னிரண்டே. 181

இரண்டான வாய்விளங்கம் மிளகுசுக்கு இரதமிலா காட்டுச் சீரகமுமப்பா, பண்டான வகைக்குபல மிரண்டதாகப் பசுமூலிச் சரக் கையுஞ்சேர்த் திடித்தெடுத்து, முண்டாறு பங்காக்கி யொருபங் கப்பா முக்கியமாய்க் கிஷாயம்வைத்து பரங்கிப்பட்டை, பண்டாகக் கால்பலந்தான் முடிந்துபோட்டுப் படிசலந்தான் விட்டெரித் தெட் டொன்ருய் வாங்கே. 182

வாங்கியே பரங்கியுட பட்டைதன்னை வளமாக கியாழத்தி லரைத்துமைபோல், தூங்கியே திரியாமல் கலக்கிப்போட்டுத் துடி கொண்ட கட்டுலிங்கம் பணவிடையிலப்பா, தாங்கியே யுறைத்துவிடு இந்தப்பாகந் தயவாக ஈராறுவேளை கொள்ளப், பாங்கியே சூலேபதி னெட்டுந்தீரும் பாங்காகப் பத்தியந்தா னென்றுமாகா. 183

ஒன்றான வென்னீரும் அன்னம்கொள்ளு ஓகோகோ மறுபத்திய மறுநாட்காரு, நன்ருக விப்படியே காத்தாயானல் நாயகனே நோயேது சூலேயேது, சென்ருன வியாதியது அணுகுமோசொல் செம்மையாய்ச் சடலமங்கே வலுத்துப்போகும், கன்ருன போகரிட கடாட்சத்தாலே கருவாகப் புலிப்பாணி பாடினேனே. 184

செங்கிரந்தி தடிப்புக்கு

பாடினேன் கொடிக்கள்ளி பயறுபோலே பாங்காக ஒருதுலாம் பாண்டத்திட்டு, நாடினேன் ஒருகுடத்தில் சலத்தைவிட்டு நாயகனே யெட்டொன்றுய்க் குறுகக்காய்ச்சிக், கூடினேன் வடிகட்டுந் தரந்தா னேமூ கொற்றவனே படியரைக்கா லந்திசந்தி, நாடினேன் திரியாதே கொண்டாயானல் நலமாகச் செங்கிரந்தி தடிப்புப்போமே. 185

போமேநீ மூன்றுநா ளாறுவேளைப் பொங்கமுடன் மறுபத்திய மூன்றுநாளாம், நாமேநீ யாறுநா ளீராறுவேளை நாயகனே உப்பில்லாக் கஞ்சியாகும், ஆமேநீ ஏழாநாள் பத்தியத்தைநீக்கி யடைவாக விளக்

---

181 அசுவகெந்தி-வமுக்கரா. நஞ்சுபட்டை-நஞ்சுபாலப்பட்டை.

182 பசுமூலி-பச்சைமூலி.

கெண்ணை முழுகிவாநீ, தேமேநீ கிரந்திவகை யெல்லாந்தீருந் திறமாக போகரிட கடாட்சந்தானே. 186

மந்தார சன்னிக்கு தைலம்

தானென்ற ஒடுக்காணைப் பிடித்துவந்து தயவாக செஞ்சீலை மேலேசுற்றி, வானென்ற சலாகையிலே குத்திக்கொண்டு வளமாக வேப்பெண்ணை மேலேவாரு, கோனென்ற தீபிடித்து வேகவேகக் கொற்றவனே சுடரெண்ணை மேலேவாரு, பானென்ற எண்ணையைநீ யெழுதரமீந்தாற் பண்பான எண்ணையது தைலமாச்சே. 187

ஆச்சேநீ தைலமது துட்டெடைதான்விதம் அப்பனே உள்ளுக் குக் கொடுத்தபோது, வாச்சேநீ மந்தார சன்னியேது வகையாக மூன்றுநா ளாறுவேளை, வீச்சேநீ யாறுநாள் பத்தியமாய்க்காரு வித்தகனே உப்பிலாக் கஞ்சியாகும், பாச்சேநீ முன்தைலந் துவளை போடு பண்பாக ஏழாநாள் நீரைவாரே. 188

காதடைப்புக்குத் தைலம்

வாரேநீ யின்னமொன்று சொல்லக்கேளு வளமாக துலாமிளகாய் நிறுத்துப்போடு, சேரேநீ தூணிநீரெட்டொன்றுக்கிச் செப்பமுடன் மண்சட்டி தனிலிறுத்துக், காரேநீ எள்ளெண்ணை நாழிவிட்டுக் கனிவாக மிளகுபல மறைத்துப்போட்டுத், தீரேநீ மெழுகுபதந்தனில் வடித்துத் தீர்க்கமாய் முழுகிவரப் பலனைக்கேளே. 189

கேளேநீ நீர்ச்செரிப்பு திமிருவாதங் கெணிதமாய்ச் சோகை யொடு மண்டைகுத்து, வீளேநீ மேல்வலிகள் சூலைநோயும் விதமான புடை சூலைமேகவாயுவும்,பாளேநீ சொரிசிரங்குந் தீரும்பாரு பண்பான காதடைப்பு காதுகுத்து, சூளேநீ யிவையெல்லாந் தீருந்தீருஞ் சுகமான போகருட கடாட்சந்தானே. 190

வயிற்றுக் கடுப்புக்கு

தானென்ற சுக்குமொரு விராகனிரண்டு தயவாக மோருவிட்டு மைபோலாட்டிக், கோனென்ற அரசிலையில் வைத்துதைத்துக் குண மாக மோருவிட்டு வேகவைத்து, மானென்ற ஏழுதர மிந்தபாகம் மைந்தனே தயிருவடிகட்டிநேரே, வானென்ற தயிரில்வைத்து விழுங் கும்போது வயிற்றிரைச்சல் கடுப்புமுதல் தீர்ந்துபோமே. 191

பேதி மாத்திரை

போமேநீர் நேர்வாளஞ் சுத்திசெய்து பொங்கமுட ஞமணக்கு காசுக்கட்டி, ஆமேநீ யோரிடையாய் நிறுத்துக்கொண்டு ஆவின்பால்

187 ஒடுக்கான்-ஆமை.

விட்டறைத்து துவரைபோலே, தாமேநீ குளிகையொன்று வெந்நீரிற்கொள்ளத் தயவாக பேதியது வாகும்பாரு, வாமேநீ பேதியது யதிகமானுல் வளமாக வசம்புதட்டிக் கிஷாயங்கொள்ளே. 192

தலைவலி சன்னிப்புகை

கொள்ளவே இன்னமொன்று சொல்லக்கேளு கொடியான பெருங்காய மோமஞ்சுக்கு, தெள்ளவே சாம்பிராணி மிளகுசாரந் தெளிவான சிற்றரத்தை கழற்பருப்பு, மெள்ளவே சீரகமும் லிங்கங்கூட மேன்மையாய் சமன்கொண்டு அருக்கம்பாலிற், றள்ளவே திரியாக்கிப் புகைதான்காட்டத் தலைவலியுஞ் சன்னிமுத லோடிப்போமே. 193

கற்பூரக் குளிகை

போமேநீ சாதிக்காய் சாதிப்பத்திரி பொங்கமுடன் தக்கோலம் ஏலங்கோஷ்டம், வாமேநீ சந்தனம் வால்மிளகுங்கூட வகைவகைக்கு விராகனெடை நிறுத்துப்போடு, தாமேநீ கிராம்பதுவும் விராகன் மூன்று தயவான கஸ்தூரி பச்சைபூரம், ஆமேநீ குங்குமப்பூ வகை வகைக்கு அடைவாக விராகனெடை யரையுமாமே. 194

ஆமப்பா இளநீரா லறைத்துமைபோல் அடைவாகக் குன்றிமணிப் போலுருட்டித், தாமப்பா நிழலுலர்த்தித் தாம்பூலத்திற் றயவாகத் தின்றுவரப் பலனைக்கேளு, வாமப்பா முகவசியந் தேகங்காந்தி வளமான பல்லிலுள்ள வியாதிபோகும், வேமப்பா அக்கினியா மந்தந் தீரும் விதமான சன்னிமுதல் மேகம்போமே. 195

சித்திரமூல ரசாயனம்

போமேநீ கொடிவேலி நிலப்பனையின்மூலம் பொங்கமுடன் தண்ணீர்விட்டான் கிழங்குகூட, நாமேநீ சீனிசர்க்கரையுங்கூட நாயகனே வகைக்குவகை பலந்தான்கேளு, தாமேநீ பலந்தானே முப்பதாகுந் தயவான செங்கொட்டை நாற்பதாகும், வாமேநீ தூளிடித்துச் சூரணமேசெய்து வளமான சர்க்கரையும் நேரே கூட்டே. 196

கூட்டேநீ யிதிற்பாதி தேனுஞ்சேர்த்து குணமாக இதுநேரே ஆவிநெய்யை, காட்டேநீ நாற்பதுநா ளந்திசந்தி நாயகனே பத்தியந் தான் பாலுஞ்சோறும், வாட்டேநீ சர்க்கரையுஞ் சீனியாகும் நலமாக விராகனெடை யைந்தேகொள்ளும், ஆட்டப்பா இதினுடைய பலனைக் கேளு அப்பனே பதினெட்டு சூலைபோமே. 197

போமடா குஷ்டம் பதினெட்டுந்தீரும் பொலிவான வலிப்பைந்து முதிரமட்டுங், தாமடா அஷ்டகுன்மம் பாண்டு ஆறுந் தயவான

193 அருக்கம்பால்-எருக்கம்பால்.

விஷக்கடியு மேகந்தீரும், ஆமடா பலமுண்டு நரையுமாறும் அடைவான தேகமது அழகேகாந்தி, நாமடா போகருட கடாட்சத்தாலே நலமாகப் புலிப்பாணி பாடினேனே. 198

பற்பொடி

பாடியே அரக்குடனே சீனிகாரம் பண்பான துருசுடனே கடுக்காயப்பா, நாடியே மாசிக்காய் வகைவகைக்கு நலமாக விராகனெடை நிறுத்துக்கொண்டு, ஆடியே கடுக்காயுந் தான்றிக்காயும் அரப்பொடியும் வகைக்குவகை விராகன்மூன்று, கூடியே எலுமிச்சம் பழச்சார் விட்டுக் குணமாக உலரவைத்துப் பொடியாய்ச்செய்யே. 199

பொடியெடுத்து விளக்கிவரப் பலனைக்கேளு புழுச்சாகு மெயிற் கரையுந் தீரும்பாரு, இடியெடுத்துப் பல்லசைவும் பல்லுக்குத்து மெரிவான வாய்ப்புண்ணு நாற்றந்தீரும், வடிவான பல்லொளிவு வசியமுண்டு வளமான பல்லிலுள்ள வியாதிதீருந், துடியான போகருட கடாட்சத்தாலே துலக்கமாய்ப் புலிப்பாணி பாடினேனே. 200

வாய்வு, விக்கல், சோகைக்கு மருந்து

பாடியே திப்பிலி சுக்குமிளகுகூடப் பண்பாக ரோசினையும் பரிந்துகேளு, நாடியே வகைவகைக்குப் பலந்தானென்று நாயகனே கடுக்காய்த்தோல் பலந்தானுனு, கூடியே தூளிடித்துச் சூரணமே செய்து குணமாகப் பனவெல்லம் பலந்தானுலும், ஆடியே கோசலத்திலப்பா காய்ச்சி அப்பனே நெய்தேனில் கிண்டிப்போடே. 201

போடேநீ கழற்சிக்கா யளவுகொள்ளப் பொருமலுடன் வயிற்றுவலி விக்கல்சோகை, ஆடேநீ மலக்கட்டுக் கிருமிதோஷம் அடைவான மேகசலஞ் சூலைவாயு, நாடேநீ நீர்ச்செரிப்புமேல் வலியுப்போகும் நாயகனே வாயுவென்ற ரோகம்போகுங், கூடேநீ போகருட கடாட்சத்தாலே குணமாகப் புலிப்பாணி பாடினேனே. 202

கடுகெண்ணெய்

பாடினேன் கடுகெண்ணை படிதானென்று பண்பான பெருங்காயம் வசம்புசுக்கு, நாடியே கருநாவி சாம்பிராணி நாயகனே வெள்ளுள்ளி யோமங்குப்பை, ஆடினேன் மாவிலிங்கப்பட்டைகூட அடைவாக வகைக்குவகை விராகன்மூன்று, கூடினேன் மேனிச்சார் விட்டரைத்துக் குணமாகக் கடுகுபதந்தனில் வடித்தே. 203

---

200 எயிறுங்கரை புல்வீறு.

203 குப்பை-சதகுப்பை.

வடித்த எண்ணெய் துவளையிட சன்னிபோகும் வளமாக வலிப்புடனே சயித்தியந்தீரும், தடித்தவுடன் கால்குடைச்சல் மேல் வலியுந்தீரும் தயவான காதிரைச்சல் மண்டைக்குத்து, கொடிதான யெண்ணெயடா வீரம்வீரங் கொற்றவனே யெண்ணெயுட அருமை மெத்த, கெடியான போகருட கடாட்சத்தாலே கெணிதமாய்ப் புலிப் பாணி பாடினேனே. 204

பஞ்சீகரண செந்தூரம்

பாடியே தங்கமது ஒன்றரையாகும் பண்பான காரீயமொன்றே காலாம், ஆடியே செம்பதுவு மொன்றேயாகும் அப்பனே இரும்பதுவு முக்காலாகும், கூடியே நாகமது அரையுமாகுங் குணமான ரசமது தான் விராகனைந்து, நாடியே கந்தகந்தான் விராகனைந்து நாயகனே அரிதாரம் விராகனென்றே. 205

ஒன்றான இவையெல்லாம் பொற்றலையின்சாற்றால் ஒளிவாக இருசாம மைபோலாட்டிப், பன்றாகப் பொடிசெய்து குப்பிக்கேற்றிப் பண்பான மாக்கல்லுங் கொண்டுமூடி, வன்றாகக் குப்பிக்குச் சிலையேழு வளமாகத் தான்செய்து வாயைவிட்டு, நன்றாகச் சட்டியிலே மணல்தா னப்பா நலமாக நாலுவிர லுயரம்போடே. 206

போடேநீ குப்பிவாய் தெரியமூடி பொங்கமுடன் தானெரிப் யாய் கமலம்போலே, ஆடேநீ நாற்சாம மெரித்தபோது அப்பனே செந்தூர மாகும்பாரு, கூடேநீ ஆவின்பால் வெண்ணெ தன்னிற் குணமாகப் பணவெடையில் பாதிகொள்ள, நாடேநீ நாற்பதுநாள் கொண்டபோது நாயகனே வியாதியெல்லாந் தீருந்தானே. 207

தானென்ற தேகமது வலுத்துப்போச்சு தயவான வசீகரமுங் காந்தியுண்டாங், கோனென்ற ரசிதமது யேழுங்கூட்டிக் குணமான செம்பதிலே மூன்றுஞ்சேர்த்து, வானென்ற தங்கமது ஒன்றுகூட்டி வளமாகத் தானுருக்கி குருவொன்றீய, தேனென்ற கரிபோலே யிருக் கும்பாரு செம்மையா யோட்டில்வைத் தூதிப்போடே. 208

போடேநீ மாற்றறைந்து யிருக்கும்பாரு பொங்கமுட னெடைக் கெடைதான் தங்கஞ்சேர்த்து, ஆடேநீ சிவனத்தைச் செய்துகொண்டு அடைவான சாஸ்திரத்தை யறிந்துபாரு, கூடேநீ பஞ்சிகரணச் செந்தூரந்தான் குணமாகுந் தேகமது இறுகும்பாரு, தேடேநீ போக ருட கடாட்சத்தாலே தெளிவாகப் புலிப்பாணி பாடினேனே. 209

---

206 பொற்றலை-கையாந்தகரை. மாக்கல்-பலப்பக்கல்.

208 இரசிதம்-வெள்ளி.

சோகை, காமாலைக்கு லேகியம்

பாடியே சுக்குடனே மிளகுகூடப் பண்பான திப்பிலி சீரகமு மோமம், ஆடியே காட்டுச் சீரகமுமிஞ்சி அப்பனே சாதிக்காய் கிராம்புசோம்பு, நாடியே ரோகணியுமேலம் நலமாக கழல்பருப்பு அரத்தை சிறுதேக்கு, கூடியே வகைக்குவகை விராகன்மூன்று கொற்றவனே தூளிடித்துச் சூரணமேசெய்யே. 210

செய்யப்பா வெள்ளாட்டுப் புழுக்கைத்தூளு செயமாக வடிகட்டிச் சரக்கின்நேரே, வையப்பா கருப்பஞ்சார் படிதானென்று வளமாகப் பனையுடைய கருப்புக்கட்டி, நையப்பா ஏழுபலம் நிறுத்துக்கொண்டு நலமாகத் தேன்படியு மரைதான்வாரு, கையப்பா ஆவின்நெய் படி தான்பாதி கனிவாக லேகியமாய்க் கிண்டிப்போடே. 211

போடேநீ நெல்லிக்கா யளவுகொள்ளப் பொல்லாத நீர்க்கோவை பாண்டு சோகை, ஆடேநீ காமாலை சோகைவாயு வப்பனே நெஞ் செரிவு நீர்ச்சுரப்பு, கூடேநீ அக்கினியா மந்தந்தீருங் குணமான மந்த முதல் குன்மந்தீரும், நாடேநீ போகருட கடாட்சத்தாலே நலமாகப் புலிப்பாணி பாடினேனே. 212

பஞ்சீகரண மாத்திரை

பாடினேன் தாரமொன் றரையுமாகும் பண்பான சவ்வீரம் ஒன்றேகாலும், நாடியே கௌரியது ஒன்றேயாகும் நலமான வெள்ளை யது முக்கால்சேரு, ஆடியே லிங்கமது அரையுஞ்சேரு அப்பனே பொடிசெய்து வுருக்கிவாரு, கூடியே திரிகடுகு பொடியுந்தேனும் கொடுப்பாயே பணவிடைதான் நோய்கள்போமே. 213

போமேதான் வாயுவொடு குன்மரோகம் பொல்லாத நெஞ் சடைப்பு பிரமைமூர்ச்சை, தாமேநீ கயரோகம் வாந்தியேப்பம் தயவில்லா சுரங்களொடு தொண்டைக்கம்மல், ஆமேநீ விஷபாகங் காமாலைசோகை அப்பனே சன்னியொடு வலிப்புந்தீரும், நாமே தான் போகருட கடாட்சத்தாலே நலமாகப் புலிப்பாணி பாடி னேனே. 214

பஞ்சமுக செந்தூரம்

பாடினேன் சாதிலிங்கம் ரசமுங்கெந்தம் பண்பான வீரமுடன் தாரங்கூட்டி, ஆடினே னிவையெல்லாஞ் சமயனுய்க்கொண்டு அடை வாகக் காட்டாமணக்கின் பாலாலாட்டி, நாடியே பில்லைதட்டி யுலா

---

213 தாரம்-அரிதாரம்.

வைத்து நலமான புடமதுதான் கோழியாகும், கூடியே யாறவிட்டு எடுத்துப்பாரு கொற்றவனே செந்தூர மாகுந்தானே. 215

தானென்ற செந்தூரம் பணவெடைதான் கொள்ளத் தயவான திரிகடுகு பொடியிலப்பா, பானென்ற தேனுகும் வெண்ணையாகும் பண்பான பனையுடைய கருப்புக்கட்டி, வேனென்ற விதுகளிலே கொள்ளும்போது வெடிசூலே குஷ்டமுதல் கறுப்புவெள்ளை, கோனென்ற மோகத்தா லெடுத்தரோகங் கொற்றவனே குன்மமுதல் வாயுபோமே. 216

இரசசெந்தூரம்

போமேதான் ரசம்பத்து கெந்திபத்து பொங்கமுட னரிதாரம் ஒன்றுகூட்டி, ஆமேதான் அம்மியிலே பொடியாய்ப்பண்ணி அப்பனே வறுத்தெடுநீ கைபாகமாக, தானேதான் அண்டத்தைப் பொடித்துக் கொட்டித் தயவாக அதிற்பாதி போட்டுமூடி, வாமேதான் மணலில் வைத்துப் புடத்தைப்போடு வளமான செந்தூர மாகும்பாரே. 217

பாரேதான் பணவெடைதான் பனைவெல்லத்தில் பாங்காகக் கொண்டவுடன் பறங்கிச்சூலே, சேரேதான் கிரந்தியொடு குட்ட ரோகம் செயலான தாதுநஷ்டம் லிங்கப்புற்று, தீரேதான் யரையாப்பு விப்புருதியோடு திறமாக தேகமது காந்தியுண்டாம், வீரேதான் போகருட கடாட்சத்தாலே விளம்புகிறேன் புலிப்பாணி விளங்கத்தானே. 218

நீரெரிவுக்கு

தானென்ற நீரெரிவு கண்டதானல் தயவாகக் கட்டுக்கொடியிலே யரைத்து, வானென்ற நிம்பக்கா யளவுதானும் வகையாகக் கால்படியாஞ் சலத்திற்சேர்த்து, கோனென்ற சீரகமும் ஏலந்தானும் கொடிதாக விராகனிடை பொடித்துப்போட்டு, ஆனென்ற சீனிசர்க்கரை தான்விட்டு அளவாகக் கலந்துமே யுண்டுபாரே. 219

புரையோடும் ரணங்களுக்குத் தயிலம்

பாரேதான் நொச்சிவேர் அழிஞ்சிவேரும் பண்பான விழுதிவேர் சமனுய்ப்போட்டுச், சீரேதான் குழித்தயில மாகவாங்கிச் சிறப்பாக புரைகளுக்கு விட்டபோது, கூரேதான் விப்புருதி கண்டமாலே குறிப்பான அரையாப்பு கன்னப்புற்று, நேரேதான் தொடைவாழை யோடுமெப்பா நேரான பிளவையது தீரும்பாரே. 220

பறங்கிப்பட்டை பதங்கம்

பாரேதான் பறங்கியுட பட்டையப்பா பாங்காக பலமைந்து நிறுத்துக்கொண்டு, சேரேதான் பொடிப்பொடியாய்க் கண்டமாக்கிச்

---

216 திரிகடுகு-சுக்கு மிளகு திப்பிலி.
217 அண்டங்கோழிமுட்டைக் குக்குடம்-கோழியளவுபுடம்.

சிறப்பாக வேசரியின் லத்திசாற்றில், வீரேதான் பிசரியதை யுலர்த்தி வைத்து விதமாக மேனிச்சார் பொடுதலைச்சார், கூரேதான் கையான் சார் குப்பிச்சாரும் குணமான பசுவின்பா லின்னங்கேளே. 221

கேளேநீ வெவ்வேறே யுலர்த்திக்கொண்டு கெணிதமுடன் கெந்தகமும் பலந்தானென்று, வாளேநீ ரசமைந்து லிங்கமைந்து வகையாகப் பொடிபண்ணி மூன்றும்போடு, வீளேநீ மறுசட்டி தமர்கள் போட்டு விதமாகச் சட்டிவாய் தன்னில்மூடி, சூளேநீ பட்டையைத் தான் மேலே வைத்துச் சுகமாக மறுசட்டி கொண்டுமூடே. 222

மூடியே மண்சீலை வலுக்கச்செய்து முசியாமல் தானெரிப்பாய் சாமமொன்று, ஆடியே யாறவிட் டெடுத்துலர்த்தி யப்பனே சூரணமாய்ச் செய்துக்கொண்டு, நாடியே கழஞ்சியொன்று கொண்டாயானால் நலமாக மேகவகை யிருபத்தொன்றும், ஓடியே போகுமடா சூலையெல்லாம் வுத்தமனே கருங்கிரந்தி தீருந்தானே. 223

தீருமே கைக்கறுப்பு வெள்ளைதானும் திறமான பிடிப்புவகை ரணங்கள்யாவும், ஆருமே ரணங்கள்வகை சிரங்குகுஷ்டம் அப்பனே செந்தாழைத் தடிப்புந்தீரும், கூறுமே வாய்நாற்றம் தந்தசூலை குணமாக மண்டலந்தான் தின்றால்தீரும், பாருமே பத்தியந்தா னிதற்கோயில்லை பண்பாக போகருட கடாட்சந்தானே. 224

வல்லாதி தயிலம்

தானான வல்லாதி தைலமொன்று தயவாகச் செங்கொட்டை அழிஞ்சிக்கொட்டை, மானான பூவந்திக்கொட்டையோடு மைந்தனே யெட்டியுட கொட்டைதானும், வானான வேம்பின் புண்ணாக்குக்கூட வகையான சிவனதுவேம்புமேதான், கானான இவையெல்லாஞ் சரியெடையாய்த் தூக்கிக் கனிவான கன்னியிட சாற்றில் போடே. 225

போடேநீ யொருநாள் தானூறவைத்துப் பொங்கமுட னிருநாள் தானெடுத்துலர்த்தி, ஆடேநீ குழித்தைலமாக வாங்கி யப்பனே காசிடைதான் கொண்டாயானால், நாடேநீ பணிவெல்லங் தன்னிற் கொள்ளு நாயகனே சூலைபதினெட்டுந்தீரும், வாடேநீ போகாமல் மண்டலங் கால்கொள்ள மைந்தனே பத்தியந்தா னென்றுகாதே. 226

இடிவல்லாதி

ஒன்றான வல்லாதி சொல்லக்கேளு உத்தமனே செங்கொட்டை பலந்தான்பத்து, நன்றாக மூக்குவெட்டிச் சாணிப்பாலில் நலமாக மூன்றுநா ளூரவைத்து, அன்றான கல்லுரலிற் றானேபோட்டு அப்பனே யெள்ளதனை யிடித்துப்போட்டு கன்றான கொப்பரைத் தேங்காயிரண்டு கனிவாகத் தானிடித்து நினைவாய்ப்போடே. 227

221 வேசரி-கழுதை.

போடேநீ பரங்கியுட பட்டையப்பா பொங்கமுடன் அமுக்கரா சித்ரமூலம், கூடேநீ கஸ்தூரி மஞ்சளோடு குணமான கருஞ்சீரம் வாலுழுவையோடு, தேடேநீ குரோசானி யோமத்தோடு தெளிவான வெற்றிலையின் காம்புதானும், நாடேநீ கடுக்காயுந் திப்பிலிதானும் நலமான கோஷ்டம் வகைவகைக்குக் கேளே. 228

கேளேதான் வகைவகைக்கோர் பலமாய்த்தூக்கிக் கெணிதமுடன் சூரணமாய்ச் செய்துகொண்டு, வாளேதான் கல்லுரலில் மயனம்போல வகையாக யிடித்ததனைச் சொல்லக்கேளு, ஆளேதான் ரசகர்ப்பூரமப்பா அடைவாக விராகனைந்து பொடித்துப்போட்டு, சாடேதான் பனைவெல்லம் பலந்தானைந்து சார்வாகப் போட்டிடிப் பாய்த் தயவாய்த்தானே. 229

தானென்ற வல்லாதி அந்திசந்தி தயவாக ஒருமண்டலமே கொள்ள, வானென்ற குஷ்டமொடு கிரந்திசூலை வகையாக அரையாப்பு மேகமெல்லாம், கோனென்ற குன்மமெட்டுஞ் சுக்லவாய்வு குணமில்லா ரணரோகம் கிரந்திதீரும், ஏனென்ற பத்தியந்தா னிச்சா பத்தியம் இதமான வுப்புமுதல் வறுத்துக்கூட்டே. 130

கூட்டப்பா தயிர்மோரு நெய்யுமாகும் குணமான துவரையுட பருப்புமாகும், நாட்டப்பா பாசியென்ற பயறுமாகும் நலமான நல்லாரை பொன்னுங்காணி, ஆட்டப்பா மச்சமென்ற பதார்த்தந்தள்ளு அடைவாக மற்றெல்லா மாகும்பாரு, ஆட்டப்பா விளக்கெண்ணை தேய்த்து மூழ்கு அடைவாகச் சந்திரன்போல் தேகந்தானே. 231

நோயின் நட்சத்திரக் கட்டறிவு

தானென்ற அசுபதிநாள் முதற்காலப்பா தயவாக ஒன்பது நாள் சுரமேதீரும், தேனென்ற விரண்டாங்கால் கொல்லுமப்பா திரமான பத்தானாள் மரணமாவான், கோனென்ற மூன்றுங்கால் பதினைந்தாகுங் குணமாக நாலாங்கால் மரணஞ்செய்யும், வானென்ற பரணிதனில் முதற்கால்மூன்று வளமான விரண்டாங்கா லேழாமென்னே. 232

என்னவே மூன்றுங்கால் பதினைந்தாகும் எளிதில்லா நாலாங்கால் பதினைந்தாகும், நன்னவே கார்த்திகைக்கு முதற்காலானல் நலமான ஒன்பதாநாள் திரும்பாரு, பன்னவே யிரண்டாங்கால் பத்தேயாகும் பண்பான மூன்றுங்கால் பதினைந்தாகும், அன்னவே நாலாங்கால் நாற்பத்தெட்டு அடைவாக வுரோகணியும் முதற்கால் பத்தே. 233

பத்தான விரண்டாங்கால் பதினெட்டாகும் பண்பான மூன்றுங்கால் எண்ணுன்கப்பா, பெத்தான நாலாங்கால் எண்பத்திரண்டு பேத

மில்லை தீர்ந்துவிடு மின்னங்கேளு, மூத்தான மான்றலையின் முதற்கா லப்பா மூப்பதுநா ளானபின்பு தீரும்பாரு, சித்தான விரண்டாங்கா லிருபத்தெட்டு திரமான மூன்றுங்கால் பதினைந்தாமே. 234

ஆமேதான் நாலாங்கால் முப்பத்தைந்து அடைவான ஆதிரை நாள் முதற்காலொன்பான், தாமேதா னிரண்டாங்கால் மரணமாகுந் தயவாக மூன்றுங்கால் நாள்தான்பத்து, வாமேதான் நாலாங்கா லிருபத்தைந்து வளமான புனர்பூசம் நாள்தானேழு, போமேதா னிரண்டாங்கால் நாள்தான்பத்து பொங்கமுடன் மூன்றுங்கால் பதினெட்டாமே. 235

ஆமப்பா நாலாங்கால் மரணஞ்செய்யும் அடைவான பூசமப்பா முதற்காலேழு, சேமப்பா விரண்டாங்கால் பனிரெண்டாகும் சுகமான மூன்றுங்கா லொன்பதாகும், காமப்பா நாலாங்கா லிருபத்தேழு கனி வான வாயில்ய முதற்காலொன்பான், வாமப்பா விரண்டாங்கால் இருபதாகும் வளமான மூன்றுங்கால் தொண்ணூறுதானே. 236

தானுன நாலாங்கால் முப்பத்தொன்பான் தயவான மகமுதற் கால் மரணஞ்செய்யும், வானுன விரண்டாங்கால் முப்பதாகும் வள மான மூன்றுங்கால் எண்பத்தைந்து, கூனுன நாலாங்கால் நாள்தா னைந்து குணம்பூர முதற்கால்தான் சாவுமாகும், தேனுன விரண் டாங்கா லிருபத்தைந்தில் சிறப்பான மூன்றுங்கா லிருபத்தாறே. 237

ஆறுன நாலாங்கா லெண்பத்தொன்றும் அடைவான வுத்திரந் தான் முதற்காலெட்டு, வீறுன விரண்டாங்கால் முப்பதாகும் வித மான மூன்றுங்கா லைம்பத்திரண்டாங், தீரான நாலாங்கால் மரண மாகும் திறமான அஸ்தமுதற் கால்தானெட்டு, கூறுன விரண்டாங் கால் பதினைந்தாகுங் குணமான மூன்றுங்கா லிருபத்தெட்டே. 238

எட்டான நாலாங்கா லெண்பத்திரண்டு எளிதான சித்திரைபு முதற்காலொன்பான், நெட்டான விரண்டாங்கால் பதினைந்தாகும் நேரான மூன்றுங்கால் பன்னிரண்டு, கிட்டான நாலாங்கால் நாற்பத் தொன்று கெதியான சோதிமுதற் காலீராறு, குட்டான விரண்டாங் கால் மரணஞ்செய்யுங் குணமான மூன்றுங்கா லெண்பத்தெட்டே. ()

எட்டான நாலாங்காற் பன்னிரண்டு எழிலான விசாகமுதற் கால்தா னென்பான், தட்டான விரண்டாங்கால் நாள்தான் மூன்று

---

234 மான்றலை-மிருகசீரிடம்.

235 ஒன்பான்-ஒன்பது.

237 முப்பத்தொண்பான்-முப்பத்தொன்பது.

தயவான மூன்றுங்கால் நாற்பதாகும், பட்டான நாலாங்கால் எண்பத் தொன்று பாங்கான அனுஷமுதற் கால்தான்சாவு, சிட்டான விரண் டாங்கா லிருபதப்பா செயலான மூன்றுங்கால் தொண்ணூ றென்னே.

என்னவே நாலாங்கால் நாற்பதாகும் எழிலான கேட்டைமுதல் கால்தான்சாவு, நன்னவே யிரண்டாங்கா லிருபதப்பா நாயகனே மூன்றுங்கால் முப்பத்தொன்று, வன்னவே நாலாங்கா லெண்பத் திரண்டு வளமான முதற்கால்தான்சாவு, அன்னவே யிரண்டாங்கா லெண்பதாகும் அடைவான மூன்றுங்கால் நாள்தான் பத்தே. 241

பத்தான நாலாங்கால் பதினெட்டாகும் பண்பான பூராட முதற்காலொன்பான், சித்தான விரண்டாங்கால் மரணஞ்செய்யுஞ் செயலான மூன்றுங்கால் நாள்தான்பத்து, வித்தான நாலாங்கா லைம் பத்தினாலு விதமான உத்திராட முதற்காலேழு, நித்தான விரண் டாங்கா லிருபதாகும் நேரான மூன்றுங்கா லைம்பதாச்சே. 242

ஆச்சப்பா நாலாங்கால் நாற்பதாகும் அடைவான ஓணமுதற் பதினொன்றப்பா, பேச்சப்பா விரண்டாங்கால் பத்துநாளாம் பேத மில்லை மூன்றுங்கால் நாள்தானெட்டு, வீச்சப்பா நாலாங்கால் மரணம் செய்யும் விதமான அவிட்டமுதல் கால்தானொன்பான், நீச்சப்பா விரண்டாங்கால் பதினைந்தாகும் நிசமான மூன்றுங்கால் முப்பத்தி ரண்டே. 243

இரண்டான நாலாங்கால் முப்பத்தொன்பான் நிசமான சதய முதற் கால்தானேழு, வண்டான விரண்டாங்கால் பத்தாம்பாரு வளமான மூன்றுங்கால் நாள்தானாலு, திண்டான நாலாங்கால் நாள்தா னைந்து திறமான பூரட்டாதி முதற்கால் சாவு, கொண்டான விரண்டாங்கால் பதினாறுகும் குணமான மூன்றுங்கா லெண்பத் தொன்றே. 244

ஒன்றான நாலாங்கால் நாற்பத்தொன்று ஒளிவுத்திரட்டாதி முதற்காலேழு, நன்றான விரண்டாங்கால் பதினெட்டாகும் நலமான மூன்றுங்கா லேழாம்பாரு, குன்றான நாலாங்கா லிருபத்தெட்டும் குணமான ரேவதியு முதற்கால்சாவு, அண்டான விரண்டாங்கால் பதினொன்றப்பா அடைவான மூன்றுங்கால் பதினெட்டாமே. 245

ஆமேநீ நாலாங்கா லிருபத்தாறு அடைவான மரணமென்ன நாள்தான் சொல்வேன், வாமேநீ அருக்கனுள் பரணியாகா வளமான திங்கட் சித்திரையுமாகா, தாமேநீ செவ்வாய்க்கு உத்திராடந் தயவான

243 ஓணம்-திருவோணம்.

புதனுக்கு அஸ்தமாகா, நாமேநீ குருநாள்தான் கேட்டையாகா நலமான புகர்நாள் பூராடந்தீதே. 246

தீதான சனிநா ளிரேவதியுமாகா தீங்குவரு மின்னாளில் நோய்கள் கண்டால், வாதான நமனுக்கே யறுதியாகும் வந்தநோய் தீராது கொல்லுங் கொல்லுங், தாதான வயித்தியரே நூலைப்பார்த்துத் தய வாக வைத்தியங்கள் செய்யவேணும், கோகின்ற போகருட கடாட்சத் தாலே கொற்றவனே புலிப்பாணி சொன்னேனன்பாரே. 247

ரசகெந்தி மெழுகு

பாரேநீ ரசகெந்தி ரசகர்ப்பூரம் பண்பான வரிதார மூசிகாந்தம், சீரேநீ துருசுதுத்த மிருதார்சிங்கி சிறப்பான சுக்குடனே ஓமம் மஞ்சள், வாரேநீ திப்பிலியு மரத்தைகோஷ்டம் வளமான வாலுழுவை சோம்பு ஏலம், கூரேநீ சாதிக்காய் மிளகுசீரங் குணமான கார் போகம் மாசிக்காயே. 248

காயான தெசாவரம் வாய்விளங்கங் கனிவசம்பு லவங்கமுடன் பரங்கிப்பட்டை, வாயான சேங்கொட்டை கடுக்காய்த்தோலும் வானகருஞ் சீரகங் காட்டுச்சீரம், பாயான சிறுதேக்குந் தாளிசப்பத் திரி பண்பாக முந்திரிகை பிரம்பின்மூலம், வாயான எட்டிவிரை தேற் றான்வித்து வளமான நீர்ப்பூண்டு எள்ளுமாமே. 249

ஆமேநற் கொள்ளுடனே தேங்காய்க்கூட அடைவான சின்னி வேர் சங்கம்வேரும், தாமேநீ அமுக்கரா கொல்லன்கோவை தயவான கொடிவேலி மூலத்தோடு, வாமேநீ வகைவகைக்கு விராகனென்று வளமான கோழிமுட்டை யிரண்டுவாரு, போமேநீ இவையெல்லாம் பொடியாய்ச்செய்து பொங்கமுடன் கல்லுரலில் போட்டுகுத்தே. 250

குத்தப்பா இதுநேரே பனைவெல்லந்தான் குணமாக நாற்சாம மிடித்துத்தீரு, பெத்தப்பா வழித்தெடுத்துச் சிமிழில்வைத்துப் பேத மில்லை சுண்டக்காய் வீதங்கொள்ள, முத்தப்பா மோருஞ்சோறுண்டு முன்னே முசியாமல் மருந்துண்ண மண்டலந்தான், சித்தப்பா முழுகு நாள் மருந்துண்ணுதே சிறப்பாக பத்தியந்தா னில்லைதானே. 251

தானென்ற வெடிசூலை மேகசூலை தயவான இடிசூலை புடைக்குஞ் சூலை, வானென்ற துடிசூலை வாதசூலை வளமான கால்குடைச்சல் கரணைதீரும், மானென்ற விப்புருதி கண்டமாலை மதியாத குட்ட

246 அருக்கனாள்-ஞாயிறு. குருநாள்-வியாழன். புகர்நாள்-வெள்ளி.
248 சீரம்-சீரகம்.
249 பிரம்பின்மூலம்-பிரப்பங்கிழங்கு.

மொடு விஷநீர்தீரும், கோனென்ற குறைநோயுஞ் சிரங்குந்தீருங் குணமான புழுவெட்டுத் தடிப்பும்போமே. 252

போமேநீ யோனிதன்னி லிங்கந்தன்னிற் பொலிவான ஆமை யடி சிலந்திமேகம், தாமேநீ செங்கிரந்தி கருங்கிரந்தி தயவான அரிகிரந்தி பொரிகிரந்தி, வாமேநீ பருகிரந்தி யிடிகிரந்தி வளமான யிடிவிழுந்து புரைமேற் புண்ணு, ஆமேநீ அரைக்கடியுந் தண்டிற் புண்ணு மடைவான குள்ளிமா தேவியாமே. 253

ஆமேநீ துடைவாழை முட்டுவாழை யடைவான குழிவாழை முதுகுவாழை, சேமேநீ புழுவாழை விலாவில்வாழை செயலான தமர்காயாச் சிலந்தியோடு, ஓமேநீ குறிப்புற்று யோனிப்புற்றும் ஒளிவான இடிப்புற்று கன்னப்புற்று, தாமேநீ பலசிலந்தி கன்னத் தோசை சதைவளருங் கண்ணோசை போகும்பாரே. 254

பாரடா பிளவையொடு பிளவைப்பூச்சி பண்பான ராசனென்ற பிளவையோடு, கூரடா நேத்திரம் மேற்பிளவையோடு கொடிது தடிச் சிலந்தி புடைச்சிலந்தியோடு, நேரடா பவுத்திரங்கள் மூலமூலங்கள் நெடிய பதமெட்டுச் சக்கரத்தினோடு, வீரடா இவைகளெல்லாம் தீருந் தீரும் விதமாக போகருட கடாட்சந்தானே. 255

பில்லிக்குத்துவளை

தானேதா னின்னமொன்று சொல்லக்கேளு தனிக்காட்டுச் சீர கத்தி னிலையைவாங்கி, வானேதான் கசக்கியதைத் தடவும்போது வளமான வெடிபில்லி யெரிவுவீக்கம், கோனேதான் மேலெரிப்பு மூரும்பில்லிக் குணமாகும் பார்வைமுதல் திட்டிதீரும், ஆமேதான் போகரிட கடாட்சத்தாலே அணியாகப் பாடுகிறேன் புலிப்பாணி யாமே. 256

குமட்டிக்காய் பதங்கம்

ஆமேகேள் குமட்டிக்காய்ப் பதங்கஞ்சொல்வேன் அப்பனே தழுதாழையு மாவின்பட்டை, காமேநீ கொடிவேலி யமுக்கராவேர் தயவாகப் பாவட்டை முடக்கற்றானும், வாமேநீ வெள்ளைச் சாரணை யுங்கூட வளமான சத்திச் சாரணையுமப்பா, நாமேநீ வகையுடனே நல்லவேளை நலமான தூதுவளை சடைச்சியாமே. 257

ஆமப்பா குப்பைமேனிகூட அடவாகச் சிவன்வேம்பு அவிரி கூட்டித், தாமப்பா வில்வவேர் மாவிலிங்கந் தயவாகப் பிரம்பினுட கிழங்கினோடு, வாமப்பா வகைவகைக்குப் பலந்தான்வேறு வளமாகத்

---

252 குறைநோய்கள்-கால்விரல்கள் கைவிரல்கள் குறைகிற பதினெட்டு குட்டத்தொன்று.

254 தமர்காயாச் சிலந்தி-துளையாருச் சிலந்தி.

தூளாக்கிச் சூரணமேசெய்து, கோமப்பா சரக்குவகை சொல்லக் கேளு குணமாக போகருட கடாட்சந்தானே. 258

தானென்ற சுக்குடனே கிராம்புமோமம் தயவாக தெசாவரஞ் சிறுநாகப்பூ, வானென்ற மிளகு தாளிசையாம்பத்திரி மைந்தனே திப்பிலி வால்மிளகுகூட்டு, கானென்ற திப்பிலியின்மூலமப்பா கரு வான சதகுப்பை பரங்கிப்பட்டை, கோனென்ற அரத்தை யதிவிட யங்கூடக் குணமான கருஞ்சீரகந்தான் கூட்டே. 259

கூட்டப்பா வகைவகைக்கு விராகனைந்து குணமாகச் சூரணமாய்ச் செய்துகொண்டு, நாட்டப்பா இருதூளுங் கல்வத்திட்டு நலமான திருகுகள்ளிப் பால்தான்கேளு, மாட்டப்பா விராகனிடை யைந்து வாரு மைந்தனே வேலியென்ற பருத்திச்சாரு, ஆட்டப்பா கொள்ளு மட்டும் விட்டுஆட்டி அப்பனே மைபோலே யரைத்துலர்த்தே. 260

உலர்ந்தபின்பு குமட்டிக்காய் கொண்டுவந்து உத்தமனே விதை சதையும் போக்கிப்போடு, உலர்ந்தபின்பு அதிற்செலுத்தி வாயை மூடி அப்பனே பாண்டத்தி னுள்ளேவைத்து, மலர்ந்தபின் மண்சட்டி யில் மண்சீலைசெய்து மைந்தனே குழிவெட்டிப் புதைத்துகேளு, கலந்தபின்பு வெள்ளாட்டு எருமைகொண்டு கனமாகப் பாண்டத்தைப் புதைத்துப்போடே. 261

போடப்பா லகுபுடம தாகப்போடு பொங்கமுடன் கருகாம லெடுத்துக்கொண்டு, நாடப்பா தூளையெல்லா மொன்றிற்கொட்டி நலமாக நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு, கூடப்பா சாதிக்காய் விரா கன்பத்து குணமான குங்குமப்பூ விராகன்பத்து, ஆடப்பா பொடி யைச் சூரணமாய்ச்செய்து அப்பனே வெருகடியாய் கொண்டிடாயே.()

கொண்டபின்பு எருமைமோர் சோறுமுண்ணு கொற்றவனே உப்பதுதான் வறுத்துக்கூட்டு, கண்டபின் மற்றதொன்று மாகாதப்பா கருவான மூன்றுநா ள்ளறுவேளை, உண்டபின்பு வயிறுளைந்தால் நிறுத்திப்போடு, உத்தமனே யில்லாவிட்டால் மருந்தையுண்ணு உண்டபின்பு போகருட கடாட்சத்தாலே விதமாகப் புலிப்பாணி விளம்பினேனே. 263

விளம்புகிறேன் நோய்தீரும் விபரங்கேளு விதமான வாதமொடு வாதசூலை, தளம்புகிறேன் காலுகை முடங்கினாலுங் தயவில்லா பக்ஷ மென்ற வாதம்போகும், கிளம்புகிறேன் சீரணமும் பொருமல் தீருங் கிருபையுடன் வயிற்றுவலி குன்மம்போகும், அளம்புகிறேன் போக ருட கடாட்சத்தாலே அன்பாகப் புலிப்பாணி யருளினேனே. 264

264 பட்சவேலம்-பருசவாயு.

சூத செந்தூரம்

அருளாலே யின்னமொன்று சொல்லக்கேளு அடைவான கெந்தகந்தான் விராகனென்று, பொருளான ரசமதுதான் விராகனென்று பொங்கமுடன் னிருசரக்குங் கல்வத்திட்டு, மிருளாலே சிற்றாமணக் கெண்ணெவிட்டு மீறாமல் மெழுகதுபோ லரைத்துருட்டித், திருளாலே நார்ப்பட்டு மேலேசுற்றித் திறமாக கொடிவேலிப் பட்டைகேளே. ()

கேளேநீ பட்டையைத்தான் தண்ணீர்விட்டுக் கிருபையுடன் அரைத்தெடுத்துக் கவசங்கட்டி, நாளேநீ குகையினுள்ளே சிப்பித் தூளை நன்றாகத் தான்போட்டு மேலேவைத்துச், சூளேநீ மேலு மந்தப் பொடியைப்போட்டு சுகமாகச் சில்லிட்டு மண்சீலைசெய்து, தாளேநீ சாணுமியில் புடத்தைப்போடு தயவாகச் சூதமது செந்தூர மாமே. 266

ஆமப்பா நோய்களெல்லா மகன்றுபோகும் அடைவாகத் தேக மது சிவந்துமின்னும், போமப்பா பெரியோர்கள் கடாட்சஞ்செய்வார் பொங்கமுடன் தேவதைகள் கிருபைகூறுங், தாமப்பா செந்தூர முண்டோர்க்கெல்லாந் தாழ்வொன்றும் வாராது கர்மந்தீரும், நாமப்பா போகருட கடாட்சத்தாலே நலமாகப் புலிப்பாணி பாடினேனே. 267

கெந்தக ரசாயனம்

பாடினேன் கெந்தகந்தான் வேணமட்டும் பாங்காக வாங்கிவந்து சொல்லக்கேளு, ஆடியே கலசமதில் பசுவின்பாலே அடைவாகத் தானூற்றிப் புதைத்துப்போடு, கூடியே சிறுகலசந் தமர்கள் போட்டுக் குணமான பாற்கலச மேலேவைத்து, நாடியே கெந்தகத்தையிதற்கு ளிட்டு மகனே சில்லிட்டுச் சீலைசெய்யே. 268

செய்தபின்பு லகுபுடமதாகப்போடு சிறப்பான கெந்தியது திறமதாச்சு, கொய்தபின்பு அதையெடுத்துக் கழுவிப்போட்டு குழியம்மி தனில் நீர்ப்பூண்டின்சாற்றில், பைதபின்பதனை யரைப்பாய் சாமமைந்து பாங்காக வதையெடுத்து வைத்துக்கொண்டு, செய்தபின்பு விராகனிடை பாதிதானுந் தீவிரமாய்ப் பணிவெல்லாந் தன்னிற் கொள்ளே. 269

கொள்ளவே மண்டலத்தில் குட்டரோகங் குணமான வெள்ளையொடு கடுப்புந்தீரும், தள்ளவே சொரிசிரங்கு மேகரோகந் தடிப்புடனே செவ்வட்டைக் கடிரணங்கள், விள்ளவே பத்தியந்தா னிதற்கோயில்லை விதமான நெய்பாலு தயிர்மோ ருண்ணு, அள்ளவே போகருட கடாக்ஷத்தாலே அடைவாகப் புலிப்பாணி யருளினேனே.

---

266 சில்லு-புதிய ஓடு. சாணுமியில்-சாண் வயாமுள்ள பூமியில்.

வேதுநீர்

அருளாலே யின்னமொன்று சொல்லக்கேளு அடைவாக ஆலரசு அத்திப்பட்டை, பொருளாலே வகைவகைக்குப் பலந்தான்பத்து புகழ்ந்திடித்துப் பாண்டத்தில் போட்டபின்பு, திருளாமல் பூண்டுடனே சலத்தைவிட்டுத் திறமாகக் காய்ச்சியதை மேலேவாரு, யிருளாதே யீராறு நாள்தான்வாரு இதமாக அந்திசந்தி மருந்தை யுண்ணே. 271

உண்ணப்பா சிவகரந்தை விஷ்ணுகரந்தை உத்தமனே அரைத்து முள்ளிக்காய்வீதம், பண்ணப்பா உள்மூல முளைகளெல்லாம் பதறியே யுதிர்ந்துவிடுங் கண்டுபாரு, நண்ணப்பா பத்தியங்க ளிதற்கோயில்லை நாயகனே யீராறு நாளுக்குள்ளே, திண்ணப்பா தீர்ந்துவிடுங் கண்டு பாரு திறமான போகருட கடாக்ஷந்தானே. 172

பயித்தியந்தீர

தானென்ற சிறுகீரை வேரைத்தானுந் தானரைத்து எலுமிச்சங் காய்தான்வீதம், வானென்ற மூன்றுநா ளாறுவேளை வளமாக வெந்நீரிற் கொடுத்துப்பாரு, கோனென்ற ஆறுநாளுப்பாகாது கொற்றவனே ஏழாநாளெல்லாமாகும், ஊனென்ற பயித்தியந்தான் தீர்ந்து போகும் உத்தமனே போகருட கடாக்ஷந்தானே. 273

தானப்பா இப்பாகம் நீர்க்கடம்புவேரைத் தான்கொடுப்பாய் பயித்தியந்தான் தீரும்பாரு, வானப்பா தும்பை மிளகுபூண்டு வளமாக நசியமிடு ஆறுவேளை, சீனப்பா மயக்கமுதல் கிறுகிறுப்புச் சிறப்பான அறுநினைவுந் தீர்ந்துபோகும், ஆனப்பா போகருட கடாட்சத்தாலே அடைவாகப் புலிப்பாணி பாடினேனே. 274

சகுனம்

பாடினே னின்னமொன்று சொல்லக்கேளு பண்பில்லாத் தலைவிரித்தல் மொட்டையப்பா, நாடினேன் சங்யாசி செட்டிதட்டான் நலமான குயவன் மூக்கரையன் செக்கான், கூடியே நாவிதனும் பிணி நோயாளன் குணமில்லாக் கட்டையொடு விலங்குயாக்கை, சூடினேன் கயிறு சக்கரியுமாகா சுணைகெட்ட வழிக்குண்டி யாகாதென்னே.

ஆகாது புகையோடு பின்புதும்மல் அப்பனே அழுகையொடு முசலுமாகா, வாகாது நீர்ப்பானை யுடைத்தபோது வழியிலே யடித்து விழக் காணப்போகா, பாகாது மரம்வெட்டல் அடியுஞ்சண்டை பண்பான கட்டிலொடு நாற்காலி முக்காலி, சோகாது இவைமூன்றும் வந்துகண்டால் சுருக்கப்பா மரணமென்று சொல்லிப்போடே. 276

போடேநீ தேவதைகள் ராசாயானை பொலிவான பூஷணமாம் பெண்கள்பிள்ளை, நாடேநீ பூரணமாங் கும்பத்தோடு நலமான

---

275 சக்கரி-எண்ணெய்வாணியன். வழிக்குண்டி-கட்டுச்சோறு.

தயிரோடு பாலும்பானே, சூடேநீ குதிரையொடு வேதியர்கூட்டஞ் சுகமான குடைசுருட்டி சிவிகைகளுரு, ஆடேநீ வெண்சாமரைசுகந்த புஷ்பம் அப்பனே வாத்தியங்கள் கேட்கநன்றே. 277

சுரங்களுக்குக் கியாழம்

நன்றாக யின்னமொன்று சொல்லக்கேளு நலமான தூதுவளை கண்டங்கத்திரி, பன்றாக நிலவேம்பு முத்தக்காசு பாங்கான ஆடாதோடை விஷ்ணுகாந்தி, குன்றாத பர்ப்படகம் சீந்தில்தண்டு குணமான சிற்றாமுட்டி வேரினோடு, அன்றாகச் செந்தொட்டி மூலமப்பா அடைவான வேம்புடைய பட்டைதானே. 278

பட்டையப்பா முசுக்கை மாதுளையின்வேரும் பாங்கான தும்பைப்பேய்ப் புடலுங்கூட்டி, நிட்டையமாம் நாய்த்துளசி வேருமையா நிசமாக வகைவகைக்கு விராகன்பத்து, தட்டையாம் உரல்தனிலே யிடிக்கும்போது தனியாகச் சரக்குவகை சொல்லக்கேளு, நட்டமாம் தேக்குதாளிசமாம் பத்திரி நலமான சுக்குடன் சிற்றரத்தையாமே. ()

ஆமேதான் தெசாவரந் திப்பிலியப்பா அடைவாக வகைவகைக்கு விராகன்மூன்று, தாமேதா னிவையெல்லா மிடித்துத் தோண்டித் தயவாக ஆறுபங்கு வைத்துப்பின்னே, வாமேதான் பாண்டத்திலெடுத்துப்போட்டு வளமாக ரெண்டுபடி சலத்தைவிட்டுப், போமேதானெட்டொன்றாய்க் குறுக்கியப்பா பொங்கமுடன் மூன்றுநாள் கொடுத்திடாயே. 280

கொடுத்திடுநீ மூன்றுநா ளாறுவேளை குணமாகும் புளிபுகையுமோருந்தள்ளு, அடுத்திடவே கொடுத்திடுவா யிந்தபாகம் அப்பனே சுரமேக மெல்லாந்தீரும், கடுத்திடுநீ யிதுமிஞ்சி சுரமேவந்தால் கற்கமொன்று சொல்லுகிறேன் கனிந்துகேளு, வடுத்திடு திப்பிலி சுக்கு சிற்றரத்தை வளமான தெசாவரங் கோஷ்டமாமே. 281

ஆமேதான் தேக்கு அதிமதுரங் கிராம்பு அப்பனே கருஞ்சீரகம் வாய்விளங்கம், போமேதான் தாளிசபத்திரியு மாஞ்சில் பொங்கமுடன் மிளகுடனே அக்கிராகாரம், தாமேதான் விடய மதிமதுரங்கூட்டித் தயவாக வகைவகைக்கு விராகன்வாங்கி, வாமேதான் பொன்னிறமாய் வறுத்துக்கொண்டு வளமாகப் பொடிபண்ணி வைத்துக்கொள்ளே. ()

கொள்ளேநீ யிஞ்சியைத்தான் சுரசஞ்செய்து குணமாக வெருகிடிதான் பொடியைப்போட்டு, அள்ளேநீ மூன்றுநா ளாறுவேளை அப்பனே கொடுத்தவுடன் தீரும்பாரு, தள்ளேநீ யிதுமிஞ்சி யதிகமானால் தயவான தோஷஞ்சன்னி அடுத்ததானல், சுள்ளேநீ சின்னியுடன் மாவிலிங்கஞ் சுகமாக நொச்சியுடன் முருங்கையாமே. 283

279 முசுக்கை-முசுமுசுக்கை.

ஆமேநீ யாவியுடன் சங்கம்வேரும் அப்பனே யிந்தவகைப் பட்டையெல்லாம், தாமேநீ யிஞ்சியுடன் சிற்றரத்தைத் தயவாக விவையெல்லாஞ் சுரசம்வாங்கி, வாமேநீ பூநாகம் பொடி வறுத்து வகையாக வராகனிடை பொடியும்போட்டுப், போமேநீ வெருகடிமுன் பொடியில் போட்டுப் பொலிவான தேனொரு காசிடைதான் வாரே. ()

வாரேதான் முலைப்பாலு முள்ளிப்பாலும் வளமாக முசுறுமுட் டைப் பாலுஞ்சேரு, கூரேதான் வெள்ளுள்ளி தயிலங்கொஞ்சம் குணமான பாலுடைய விண்டுகொஞ்சம், நேரேதான் கோழியுட முட்டைகொஞ்சம் நிச்சயமாய் கஸ்தூரி ரோசனையுங்கூட்டி, சாரே தான் கொடுத்திடுவா யாறுவேளை சாந்தமாய்ப் போகுமடா கண்டு பாரே. 285

பாரேநீ வலிப்புடைய சன்னிதோஷம் பறக்குமடா இச்சுரசங் கண்டபோதே, தேரேநீ விதியிருந்தால் லபிக்கும்பாரு திறமாகச் சாத்திய மசாத்தியமுங் காணும், வீரேநீ சாத்தியந்தானிருந்தால் செய்நீ வீதமசாத்தியமென்றால் செய்யொண்ணாது, கூரேநீ போகருட கடாட்சத்தாலே கொற்றவனே புலிப்பாணி பாடினேனே. 286

தளம் கண்ட அவிழ்தம்

பாடினேன் தளமொன்று சொல்லக்கேளு பாங்காகப் பொன் வெள்ளி பவழஞ்சிங்கி, நாடினே னுமையென்ற வோடுமப்பா நலமான வில்வவோடு விளாவினோடு, கூடினேன் கிராம்பு அதிமதுரஞ்சுக்கு குணமாகத் தெசாவாரந் திப்பிலியரத்தை, ஆடினேன் உருத்திராக்ஷ மிவை யெல்லாந்தா னடைவாக முலைப்பாலி லுரைத்திடாயே. 287

உரைத்தெடுத்து மயிற்பீலி சுட்டசாம்பல் உடன்சத்தி நாவத னில் தளமாய்ப்போட்டால், கரைத்தெடுத்து நாவதனில் சலந்தா னூருங் கனவில்லா தோஷமது தணியும்பாரு, மறைத்தெடுத்த பேய்குமட்டி வேரைத்தட்டி மைந்தனே கொடுத்துவிடு அடக்கிக் கொள்ள, துரைத்தெடுத்த தேகத்தில் வந்ததோஷந் துன்பமது தான் விலகும் கண்டுபாரே. 288

தாகத்துக்கு கியாழம்

பாரேதான் விளாவிலையு மாடாதோடைப் பாங்கான அரசனுட கொழுந்துமப்பா, சேரேதான் வகைவகைக்குப் பிடிதானொன்று சிறப் பான மணலும் அரைபடி தான்போட்டுக், கூரேதான் முந்திரிக்காய் மதுரந்தானுங் குணமாக வகைவகைக்கு விராகனொன்று, வீரேதான்

284 பூநாகம்-நாக்குப்பூச்சி.
285 உள்ளி-வெள்ளைப்பூண்டு. முசுறுமுட்டை-ஒருவித எறும்புமுட்டை.
286 சாத்தியம்-சவுக்கியம். அசாத்தியம்-நிலையின்மை.
288 மயிற்பீலி-மயிலிறகு.

இவையெல்லாங் கருகுமட்டும் விதமாகத் தான் வறுத்துத் தண்ணீர் வாரே. 289

வார்த்தப்பா தானெரித்துக் குறுக்கக்காய்ச்சி வடிகட்டி தான் கொடுப்பாய் தாகந்தீரும், கோர்த்தப்பா யிந்தவித மூன்றுநாளுங் கொடுத்திடவே தாகமென்ற தெல்லாந்தீரும், பார்த்தப்பா சுரதாக முஷ்ணதாகம் பரிவான அந்திரதாகம் பறவைதாகம், பேர்த்தப்பா குடிநீரைக் குடித்தபோது பொங்கமுடன் தீருமடா திண்ணந்தானே.

வாய்வுகளுக்கு

திண்ணமதாய்ச் சங்கம்வேர் முக்கொழுஞ்சி திறமான கொடி வேலி பரங்கிப்பட்டை, வண்ணமாய்ச் சுக்குடனே வாய்விளங்கம் வளமான சிறுதேக்கு கொத்தமல்லி, எண்ணமாய் வகைவகைக்கு விராகனிரண்டு இடித்தெடுத்து பாண்டத்தி லிதமாய்ப்போட்டு, நண்ணயமாய்ச் சலமதுதான் கொஞ்சம்விட்டு நாயகனே எட்டொன்றாய் குறுக்கிவாங்கே. 291

வாங்கியே மிளகதுவும் விராகனென்று வளமாகப் பொடிபண்ணி யிதனிற்போட்டுத், தாங்கியே விளக்கெண்ணை துட்டெடைதான்விட்டு தான்கொடுப்பாய் மூன்றுநா ளாறுவேளை, யேங்கியே புளிபுகையுந் தள்ளுதள்ளு யிதமான வாயுடனே மேகவாயு, வோங்கியே மேல் கடுப்பு புளித்தயேப்பம் வோடிவிடும் வாயுவெல்லாந் தீருந்தானே. ()

சூட்டுக்கு குடிநீர்

தீருமே யின்னமொன்று சொல்லக்கேளு திறமான இளநீரு படிதான் மூன்று, ஆருமே எலுமிச்சம் பழச்சாருநாழி அப்பனே சுன்னநீர்த் தெளிவுதானும், ஏருமே படியரைதா னளந்துவாரு இசையான குமரிச்சார் பலந்தானுறு, வீறுமே சீரகமும் பலந்தானென்று விதமான ஏலமரைப் பலந்தான் போடே. 293

போடேநீ ஏலமதைப் பொடித்துப்போடு பொங்கமுடன் புதுச் சட்டி தன்னிற்சேர்த்து, நாடேநீ மணலிட்டு ஈரஞ்செய்து நாயகனே யிதுமேலே சட்டிவைத்துக், கூடேநீ ஈரச்சீலை யதனால்மூடிக் குணமாக வைத்திருநீ பகற்காலந்தான், சாடேநீ ராக்காலம் பனியில்வைத்து சார்வாக மண்டலமுங் கால்தான் கொள்ளே. 294

கொள்ளவே கால்படிதா னந்திசந்தி குணமாகக் குமரிச்சார் பலமுங்காலு, உள்ளேநீ கொண்டுவர யிந்தப்பாகம் உத்தமனே நீரெரிவு ரத்தவெள்ளை, தள்ளேநீ யுள்ளெரிவுங் கடுப்புந்தீரும் தயவில்லாச் சங்கையது தணியும்பாரு, அள்ளேநீ போகருட கடாட்சத் தாலே அடைவாகப் புலிப்பாணி பாடினேனே. 295

வண்டுகடி தடிப்புக்கு சவ்வீரக் களிம்பு

பாடினே னின்னமொன்று சொல்லக்கேளு பண்பான வீரமது விராகனென்று, ஆடினேன் வெண்ணெயிலே போட்டரைத்து அடை

வாக மேல்பூச வகையைக்கேளு, கூடினேன் மேல்தனிலே மேகத் தாலே கொற்றவனே சொரிசொரியாய்ப் புள்ளிகாணும், நாடினேன் அதையும் வண்டுகடிதானென்று நாட்டிலே சொல்லுவார்க ளறிந்து பாரே. 296

பூரக்களிம்பு

பாரேநீ புள்ளியின்மேல் மூன்றுநாள் தான் பண்பாகத் தான்பூச ரணமுமாறும், சேரேநீ ரசமென்ற பூரமப்பா செயலாக விராகனிடை வாங்கிவந்து, தீரேநீ பசுவெண்ணெ விராகனெந்தில் திறமாகத் தான் போட்டு அரைத்து மைபோல், வீரேநீ பூசிடவும் ரணங்களாறும் விதமான போகருட கடாட்சந்தானே. 297

உஷ்ணகாங்கைக் குடிநீர்

தானேதா னின்னமொன்று சொல்லக்கேளு தயவான அறுகம் வேர் நெரிஞ்சில்வேரும், மானேதான் முருங்கையுட ஈர்க்குமப்பா மைந்தனே வகைவகைக்குப் படிதானென்று, வானேதான் பொடிப் பொடியாய் நறுக்கிப் புன்மை வறுக்கையிலே சீரகமு மிளகும்போட்டு, ஆனேதான் கசாகசா விராகனிரண்டு அப்பனே தான்போட்டுச் சலத்தைவாரே. 298

வாரேநீ படிசலந்தா னெட்டொன்றுக்கி வளமாகப் பசுவெண் ணெக் கழஞ்சுபோட்டுச், சேரேநீ கொடுத்தவுடன் வுஷ்ணகாந்தல் சேர்த்துவந்த வயிற்றுவலி கடுப்புந்தீருங், கூரேநீ யிந்தவித மூன்று நாள்தான் கொடுத்திடவே ஊஷ்ணத்தாங் காங்கைதீருந், தீரேநீ போகருட கடாட்சத்தாலே திறமாகப் புலிப்பாணி சொன்னேன் தானே. 299

குடைச்சலுக்குத் தயிலம்

தானையா மயிற்பீலி பலந்தானிரண்டு தான்போட்டு சட்டியிலே கருக்கிக்கொண்டு, வானையா மனோசிலைதான் விராகன்பத்து வளமாகத் தான்போட்டு உருகும்போது, சேனையா வேப்பெண்ணெ படிதான்விட் டுச் செயலாகத் தானெரித்து எடுத்துக்கொண்டு, மானையா பூசியல்லோ பிடிக்கும்போது மைந்தனே குடைச்சல்முதல் குத்துபோமே. 300

போமேநீ யிலைக்கள்ளி கொண்டுவந்து பொடிப்பொடியாய்க் கண்டமதாய் நறுக்கிப்போட்டு, நாமேநீ சலமதுதான் பதக்குவிட்டு நலமான எட்டொன்றாய்க் குறுக்கிக்கொண்டு, தாமேநீ மறுசட்டிதனி லிருத்துத் தக்கவெள்ளாட் டமுரிதானும், வாமேநீ படிரண்டு கூட விட்டு வளமாகப் பாகுபோல் காய்ச்சிடாயே. 301

காய்ச்சியே மேலெங்கும் பூசச்சொல்லிக் கனிவாக ஆட்டுத் தோல் கலைத்தோல் தன்னில், ஆய்ச்சியே படுத்திருக்கச் சொல்வாய்

302 கலைத்தோல்-மான்தோல்.

நீயும் அப்பனே சாயரட்சை நன்னிற்கேளு, வாய்ச்சியே நொச்சியிலை முடக்கற்றானும் வளமாகத் தழுதாழை மாவிலிங்கம், காய்ச்சியே மேனியுடன் தும்பைகொண்டு தயவாகப் பூவரசன் பட்டையாமே. ()

ஆமேநீ யெட்டிபாவட்டையாக அடைவாக எருக்கம்பூ கடம்பின் பட்டை, தாமேநீ காட்டெலுமிச்சை இலையினோடு தயவாக உத்தா மணி திருகுகள்ளி. வாமேதா னிலுப்பையுட பட்டைதானும் வள மான நெல்லுமியு மிவைகளெல்லாம், போமேதான் சலம்விட்டு வேக வைத்துப் பொங்கமுடன் மூன்றுநாள் போதவாரே. 303

வாரேதான் அந்திசந்தி வார்த்தபோது வளமில்லாச் சூலையொடு பிடிப்புதானும், வீரேதான் கைகால் குடைச்சல்தீரும் மிகுந்ததொரு மேல்கடுப்புக் குத்துதீரும், பாரேதான் சருவாங்க வாதம்போகும் பண்பான படைசூலை கரணைபாதம், தீரேதான் போகருட கடாட்சத் தாலே திறமாகப் புலிப்பாணி பாடினேனே. 304

மாந்ததோஷத்துக்கு குளிகை

தாமப்பா இன்னமொன்று சொல்லக்கேளு தயவான வில்வ மப்பா விளாவும்வேளை, வாமப்பா நாய்வேளை கஞ்சாங்கோரை மைந் தனே சின்னியொடு காட்டுமொச்சை, தேமப்பா திருநீற்றுப்பச்சை தும்பை தெளிவான சிறுதும்பை கண்டங்கத்திரி, வாமப்பா அமுக் கரா சங்கு தாங்கி வளமான நுணுவேலிப் பருத்தியாமே. 305

ஆமேதான் முடக்கற்றான் வெண்காவேளை அடைவான சாரணை யின்முட்டைநாறி, தாமேதான் கொழுஞ்சிவேர் புண்ணுக்குப்பூடு தயவானபிரமியொடு சித்திரமூலம்,வாமேதான் கொவ்வையுடன்மணத் தக்காளி வகையான கையானுங் கீழ்வாய்நெல்லி, போமேதா னிந்த வகை மூலமெல்லாம் பொங்கமுடன் வகைவகைக்கு கழஞ்சுதூக்கே. ()

தூக்கப்பா வசம்புடனே வோமஞ்சுக்கு துன்பமில்லாச் சத குப்பை திரிகடுகூட, வாக்கப்பா தேசாவரமரத்தை கோட்டம் வளமான சாதிக்காய் வெள்ளைப்பூண்டு, ஆக்கப்பா துருசு சீரகமுங் காயம் அடர் கோரோசனை கருஞ்சீரகமுமப்பா, தாக்கப்பா வகை வகைக்கு கழஞ்சியொன்று தான்தூக்கிக் கல்வத்தி லரைத்திடாயே.

அரையப்பா அப்பைச்சார் நாய்வேளைச்சார் அடைவான அகத்திச் சாறிண்டம்பாலும், துரையப்பா சாமமது மயனம்போலே துருசாக

---

305 தாங்கி-மலைதாங்கி.

306 வெண்காவேளை-வெள்ளை கொள்காய்வேளை. முட்டைநாறி-எரு முட்டை பீநாறி. கொழுஞ்சி-கொள்காய்வேளை.

ரண்டுபங்கு ஆக்கியப்பா, விரையப்பா துவரைபோ லுருட்டிப்போடு விதமாக வொருபங்கில் விவரங்கேளு, இரையப்பா சுத்திசெய்த வாளந்தானும் இதமாகக் கடுகுரோகணியும் பாரே. 308

பாரப்பா வகைவகைக்கு கழஞ்சிதூக்கிப் பாங்காக முன்மருந்தை யிதிலேசேர்த்து, வாரப்பா அகத்திச்சார் நிலவாகைச்சார் வளமாக விட்டரைப்பாய் சாமமூன்று, வீரப்பா துவரைபோ லுருட்டிச் சேர்த்து விதமாக நிழலுலர்த்தி யெடுத்துக்கொண்டு, நேரப்பா குழந்தைகளின் பிணிகட்கெல்லாம் நிச்சயமாய்த் தான்கொடுக்கத்தீரும் பாரே. 309

பாரேதான் அப்பைச்சார் நாய்வேளைச்சார் பண்பான துளசிச் சார் சிறுதும்பைச்சார்,வீரேதான் எருமுட்டைநாறிச்சாறும் விதமான காட்டுமொச்சை யிலைச்சாரப்பா, கூரேதான் வயிறுகட்டிப் பிணிநோய் கண்டால் கொடுப்பாயே நேர்வாளமுஞ் சேர்த்தப்பா, தேரேதான் வயிறெடுத்துப் பிணிநோய் கண்டால் செலுத்திடுவாய் குளிகைச்சா றெதிலுந் தீருந்தானே. 310

தீருமே மாந்தத்தின் வகைகள்யாவுந் திறமான தோஷமொடு வலிப்பு காய்ச்சல், ஆறுமே அக்கினியின் மாந்தமப்பா அன்பில்லா அநேகவித நோயும்போகும், கூறுமே சிசுவருத்தந் தீர்ந்தோர்க்கெல் லாங் குற்றமொன்றும் வருகாது வறுமை நீங்கும், வீறுமே போகருட கடாட்சத்தாலே விதமாகப் புலிப்பாணி பாடினேனே. 311

தாளக பற்பம்

பாடினே னின்னமொன்று சொல்லக்கேளு பாங்கான அரிதாரக் கட்டியப்பா, கூடிநீ கடுக்காய்த்தோல் நீராலாட்டிக் குணமாக மேல் கவசம் வலுக்கச்செய்து, நாடினேன் குகையிலிட்டு சில்லுப்போட்டு நலமாக மண்சீலை வலுக்கச்செய்து, ஆடினே னிரண்டெருவில் புடத் தைப்போடு அடைவாகப் பற்பத்தை யெடுத்துக்கொள்ளே. 312

கொள்ளேநீ பொடிபண்ணி வைத்துக்கொண்டு குணமாக தேனதிலே விராகன்கால்தான், அள்ளிநீ கொடுத்தவுடன் சுரங்கள் யாவும் அப்பனே அகன்றோடிப் போகும்பாரு, தள்ளவே யிரும்ப லொடு பாண்டுசோகை தயவில்லா யெலிக்கடியுந் தீரும்பாரு, கள்ளேநீ பித்தமொடு மயக்கந்தீருங் கனமான போகருட கடாட்சந்தானே. 313

தானப்பா புகையோடு புளியுங்கள்ளு தயவான யேழாநாள் நீரைவாரு, வானப்பா நீலிவேர் கியாழங்கொள்ளு வளமான மற்றுநா ளெல்லாங்கூட்டு, கோனப்பா குடிலங்க ளொன்றுமில்லை குணமாகுஞ் சயமுதல் சுரங்கள்போகுந், தேனப்பா போகருட கடாட்சத்தாலே தெளிவாகப் புலிப்பாணி பாடினேனே. 314

குன்மம் வாந்தி யேப்பம் வாய்நீருக்குக் கியாழம்

பாரேநீ யேலமொடு நெல்லிவற்றல் பாங்காகப் பசும்பயறு மிளகுகூடச், சேரேநீ நெற்பொரியும் வில்வவேரும் சிறப்பாக வகைக்குவகை சொல்லக்கேளு, தீரேநீ ரெண்டரைதான் பலமதாகத் திறமாகத் தூளாக்கி வைத்துக்கொண்டு, கூரேநீ இரண்டுபங்கு குணமாய்ச்செய்து கொற்றவனே யிளநீரும் நேராம் ரெண்டே. 315

இரண்டான இளநீரின் சலத்திலப்பா அணுவளவு பிசகாமல் மைபோலாட்டிக், கொண்டான பாண்டத்தி லெட்டொன்றுக்கி கொடுப் பாயே யீராறு வேளைதன்னில், கண்டான குன்மவகை வாந்தியேப்பங் கனிவில்லா வாய்நீரும் பொருமல்தீரும், பண்டான அன்னமது செரிக் கும்பாரு பாங்கான வரோசகமும் வலிப்பும் போமே. 316

போமப்பா பத்தியந்தான் சொல்லக்கேளு பொங்கமுட னுப் பிட்ட பருப்புமாகும், ஆமப்பா பசுவின்மோர் வென்னீராகும் அடை வான தூதுவளை பொன்னுங்காணி, தாமப்பா கொடிவிளங்காய் நெல் லிக்காயுந் தயவான பசுவினெய் தேனுமாகும், வாமப்பா ஏழாநாள் சலத்தைவாரு வளமாக யெட்டாநாள் புளியைச்சேரே. 317

வயிற்றிரைச்சல் பேதிக்கு மிளகுசூரணம்

சேரேநீ யின்னமொன்று சொல்லக்கேளு செயலான மிளகுபல மிரண்டுவாங்கி, நேரேநீ வேலியுட பருத்திச்சாறு நிறையவிட்டு ஊரவைத்து வுலரப்போட்டுக், கூரேநீ வறுத்துமிகப் பொடியாய்ச் செய்து கொற்றவனே வெருகடியாய்த் தேனிற்கொள்ள, வீரேநீ வயிற்றிரைச்சல் பேதிநிற்கும் விதமான பொருமலுட வாயுபோமே.

வயிற்றிரைச்சல் இரத்தக்கடுப்புக்கு

போமேநீ யின்னமொன்று சொல்லக்கேளு பொலிவாக நீர்ப் பூண்டு பலந்தானிரண்டு, ஆமேநீ எழுத்தாணி யிலையைத்தானும் அடைவாக ரண்டுபல மெடுத்துக்கொண்டு, தாமேநீ நெய்தனிலே வதக்கிமைந்தா தயவாக ஏலமது விராகனென்று, வாமேநீ சீனிபல மொன்றுகூட்டி வகையாகத் தானரைத்து எடுத்துக்கொள்ளே. 319

கொள்ளப்பா முள்ளிக்காய் வீதமாகக் கொற்றவனே மூன்றுநா ளாறுவேளை, தெள்ளப்பா வயிற்றிரைச்சல் கடுப்புரத்தந் தெளிவில்லா மூலத்தின் சூடுந்தீரும், தள்ளப்பா பத்தியந்தா னிதற்கோயில்லை ஐயனே தயிர்பாலும் நெய்யுங்கூட்டு, விள்ளப்பா போகருட கடாட்சத் தாலே விதமாகப் புலிப்பாணி பாடினேனே. 320

மூளைமூலத்துக்கு கட்டு

பாடினே னின்னமொன்று சொல்லக்கேளு பண்பான கோவை யுட இலையைக்கூட்டி, நாடினேன் கம்பஞ்சோ றுக்கிப்பின்னை நலமாகத்

தானுருட்டி நீரைவாரு, கூடுகிறேனெட்டுநாள் கடந்தசோறு கொற்றவனே முன்னிலையு மெடையாய்ச்செய்து, ஆடினே னுறுநாள் கட்டும் போது அடியோடே முளைமூல மகன்று போமே. 321

இராமபாண குளிகை

போமேநீ யின்னமொன்று சொல்லக்கேளு பொலிவான வெள்ளை யுடன் காவிக்கல்லு, ஆமேநீ சரியெடையாய் நிறுத்துக்கொண்டு அப்பனே வெற்றிலையின் சாற்று லாட்டித், தாமேநீ நாழிகை யேழரையுமானல் தயவாக மிளகதுபோ லுண்டைசெய்து, வாமேநீ சுக்குடைய கியாழந்தன்னில் வளமாக மூன்றுநாள் கொடுத்திடாயே.

கொடுத்தவுடன் சுரங்களெல்லா மோடிப்போகும் கொற்றவனே ஏழாநாள் நீரைவாரு, அடுத்தவுடன் சிறுகீரை மிளகுநீலி அப்பனே கியாழம் வைத்து கொடுப்பாய் நீயும், கடுத்தவுட னேழாள் புளி யைக்கூட்டு கழிவில்லா சுரவையது காணுதப்பா, கொடுத்தவுடன் சுரக்குளிகை ராமபாணந் துளபமணி மார்பருட சரமுமாமே. 323

கெந்தகரசாயனம்

ஆமேதான் கெந்தகத்தின் ரசாயனந்தன்னை அடைவாகச் சொல்லுகிறே னன்றாய்க்கேளு, தாமேதான் திரிகடுகு கிராம்புயேலந் தனிலவங்கப் பட்டையுடன் லவங்கப்பத்திரி, வாமேதான் ஜாதிக்காய் தாளிசபத்திரி வளமான சிறுநாகப் பூவினேடு, போமேதான் விலா மிச்சம் வேரினேடு போலுஞ்சீரகமும் குரோசானியாமே. 324

ஆமடா சிற்றரத்தை சித்திரமூலம் அடைவான திப்பிலிதன் மூலத்தோடு, நாமே பூலாக்கிழங்கு யானைதிப்பிலி நலமான கருஞ் சீரகங் கூகைநீறும், தாமே முந்திரிக்கை சந்தனக்கோலங் தயவான அதிமதுரம் முத்தக்காசும், வாமடா சடாமாஞ்சில் கொத்தமல்வி வளமான பேரிச்சம் பழமுமாமே. 325

ஆமேநீ திரிபலா சாதிபத்திரி அடைவான வெட்டிவேர் குங்கு மப்பூ, தாமேநீ நிலைப்பனைவே ரசுவகெந்தி தயவான நெரிஞ்சி முள்ளி நீர்முள்ளிவித்து, வாமேநீ பூனையென்ற காலிவித்து வளமாக வகைவகைக்கு விராகனுவு, போமேநீ நிறுத்தெடுத்துப் பொடியாய்ச் செய்து பொங்கமுடன் சுத்திகெந்தி பலமும்நாலே. 326

நாலான பரங்கிப்பட்டை பாலில்சுத்தி நாயகனே தூளுபல மிருபதாகப், பாலான சர்க்கரைதா னப்பாகேளு பாங்காகப் பல மதுதா னிருபதாக, மேலான சீனிசர்க்கரைதானப்பா கொற்றவனே

322 வெள்ளை-வெள்ளைப் பாஷாணம்.

323 சுரவை-வீக்கம்.

பலமதுதான் பத்ததாகும், மேலான நீர்விட்டான் கிழங்குச்சாறு விதமாகப் படியாறு பாண்டத்திட்டு, சேலான பசுவிநெய் படிதா னென்று சிறப்பான தேன்படிதா னென்றாய்க் கூட்டே. 327

கூட்டப்பா பாகதும்போல் பதத்தைப்பார்த்து கொற்றவனே இறக்கிவைத்துப் பொடியைப்போட்டு, ஆட்டப்பா கிளறியதை யெடுத்துக்கொண்டு அப்பனே குயக்கலசந் தன்னில்வைத்து, நாட் டப்பா நெற்புடமும் பத்துநாள்தான் நலமாகத் தான்வைத்து எடுத் துக்கொண்டு, ஊட்டப்பா கழற்சிக்காய் வீதங்கொள்ளு உத்தமனே தீருநோய் விபரங்கேளே. 328

தீரும் வியாதிகள்

கேளேநீ வாதமது எண்பதுக்குங் கெடியான பித்தமது நாற்ப துக்கும், சூளேநீ கிரிச்சரங்க ளாறுக்குந்தான் சுகமில்லாக் கிரந்தி பதினெட்டுச்சூலை, நாளேநீ குன்மமொடு பாண்டுசோகை நயமில்லா சயரோகம் மேகமெல்லாம், வாளேநீ அக்கினியின் மந்தந்தீரும் வளமான பரிதிகண்ட இருள்போல் போமே. 329

போமடா பத்துநாள் கொண்டபின்பு பொலிவான பத்தியந் தான் சொல்லக்கேளு, ஆமடா பசும்பயறு துவரையாகும் அப்பனே தூதுவளை மணத்தக்காளி, தாமடா கத்திரிக்காய் முருங்கைப்பிஞ்சு தயவான கொத்தமல்லிக் கீரையாகும், வாமடா புளியுப்பு பசுவி னெய்யும் வளமான மோர்தயிரும் பாலுமாமே. 330

வலிகளுக்குச் சாதிலிங்கக்கட்டு

ஆமேதா னின்னமொன்று சொல்லக்கேளு அடைவாக அஞ் சண்டம் வெண்கருவை வாங்கிப், போமேநீ வீரமது பச்சைபூரம் பொலிவான வெடியுப்பு சுண்ணத்தோடு, வாமேநீ வகைவகைக்கு விராகனென்று வளமாகப் பொடிபண்ணி வெண்கருவில் போட்டு, ஓமேநீ மஞ்சளுட கருவைப்போக்கி உத்தமனே வெண்கருவை யடைத்துவையே. 331

வையப்பா ஆறுநாள் கடந்தபின்பு வகையாக லிங்கமது விராகன் பத்து, கையப்பா வெண்கருவில் தோய்த்து கனிவாக ரவிதனிலே கணக்காய்ப்பத்து, பையப்பா கருமத்தம் தழைமேல்சுற்றிப் பாரு மணற் புடந்தான் முப்பத்திரண்டு, செய்யப்பா யிந்தவிதந் தோய்த் துச்சுற்றி செயலாக ஒன்றெருமுப் பத்திரண்டே. 332

இரண்டான புடந்தனக்கு உபரியொன்று ரேகிப்பாய் புடம் பத்து ஏற்றிக்கொள்ளு, கண்டான லிங்கமது உருகிக்கட்டுங் கனி

---

331 அஞ்சண்டம்-அஞ்சுகோழிமுட்டை. பச்சைப்பூரம்-பச்சைகற்பூரம்.
332 கருமத்தின் தழை-கறுப்பு ஊமத்தின் தழை.

வாகத் தானதையே எடுத்துக்கொண்டு, பண்டான இஞ்சிரசந் தன்னிற்கொள்ளப் பணவிடைதான் கணக்காக வுறைத்துப்போடு, தெண்டான மூன்றுநா ளாறுவேளை திண்ணமாய்த் தான்கொடுக்கத் தீரும்பாரே. 333

தீரும் வியாதிகள்

பாரேநீ முசலகண்டன் குமரகண்டன் பரிவான முசல் வலியன் குதிரைக்குட்டி, சேரேநீ காக்கைவலி புறவீச்சோடு சிறப்பான உள் வீச்சு சன்னிதோஷம், கூரேநீ வாலையென்ற கிறுக்கையோடு குண மான நெஞ்சுமுதல் வாயுவுக்குத்து, வீரேநீ இவைகளெல்லாந் தீரும் பாரு விதமான யிருள்கண்ட சுடர்போல் போமே. 334

பரங்கிப்பட்டை ரசாயனம்

போமப்பா இன்னமொன்று சொல்லக்கேளு பொலிவான சங்கம் வேர் சங்கங்கும்பி, யாமப்பா கொடிவேலி வேரினோடு அடைவான நிலப்பனேவே ரசுவகெந்தி, தாமப்பா இருகுமிழி நெருஞ்சில்வேரு தயவான பூவரசம் பட்டையாகும், வாமப்பா செங்கத்தாரி பட்டை யோடே வகைவகைக்குத் தூள்செய்து பலந்தானென்றே. 335

ஒன்றான திரிகடுகு ஓமம் கோஷ்டம் உத்தமனே கேசரமு மரத்தையிஞ்சி, நன்றான சிறுலவங்கப்பட்டையோடு நாயகனே லவங்க மென்ற பத்திரிகூட, பன்றான வகைவகைக்கு அரைப்பலந்தான் பாங்கான பரங்கிப்பட்டை பலந்தானைந்து, கன்றான சர்க்கரைதான் பலமோபத்து கனிவான நெய்தேனும் நாழிவாரே. 336

வார்த்தேநீ பிசைந்து நன்றாய் கலசந்தன்னில் வளமாகத் தானடைத்து வைத்துக்கொண்டு, பார்த்தேநீ நல்லநாள் தன்னிற் கொள்ள முள்ளிக்காய் வீதமாகச், சேர்த்தேநீ யந்திசந்தி நாற்பது நாளப்பா செயலாகக் கொண்டிடவேதீரும்நோய்கள், கார்த்தேநீமத்தி யமோ மிளகு கடுகுமாகா கனிவான வாழையிலை கரப்பன் தள்ளே. ()

தள்ளையிலே மேகமெல்லாம் பறக்கும்பாரு தயவில்லா சூலை யொடு விரணரோகம், அள்ளையிலே கிரந்திவகை கரப்பான் ரோகம் அடைவான குஷ்டமொடு பிரமியங்கள், தெள்ளையிலே குன்மமொடு வாயுமூர்ச்சை தெளிவில்லா வாய்நாற்ற மக்கினிமந்தம், விள்ளையிலே பரங்கிப்பட்டை ரசாயனந்தான் விண்ணவர்கள் மருந்துண்ணக் கொள்ளலாகும். 338

---

333 உபரிமேல்-திண்ணம்பலம்.

334 கிறுக்கை-பயித்தியம்.

335 இருகுமிழி-குமிழம்வேர், நிலக்குமிழம்வேர்.

சீரகச் சூரணம்

கொள்ளவே யின்னமொன்று சொல்லக்கேளு குணமான சீரகமோ பலந்தானைந்து, தெள்ளவே வாங்கிவந்து பீங்கான் தன்னில் தெளிவாகத்தான்போட்டு பழச்சார்வாரு, அள்ளவே மிதக்கவிட்டு ஊறவைத்து அடைவாக நிழல்தனிலே யுலரப்போட்டு, விள்ளவே தானெடுத்து இந்தபாகம் விதமாகத்தான்போட்டு விவரம்பாரே. 339

பாரேநீ கருப்பஞ்சார் முசுமுசுக்கை பாங்காக நெல்லிக்காய்ச் சாருங்கூட, சேரேநீ தூதுவளைச் சாற்றினோடு செயலாக வேம்பின் பட்டைச் சாறுமாகும், தீரேநீ தும்பையிலைச் சாறும்விட்டுத் திறமாக வெவ்வேறு யுலரப்போட்டு, சீரேநீ தூளிடித்து வடிதான்கட்டிச் சீனியது கால்பங்கு கலந்துகொள்ளே. 340

கொள்ளப்பா அந்திசந்தி நாற்பதுநாள்கொள்ள குணமாக வெருகடிதான் வீதம்பாரு, தெள்ளப்பா பித்தமெல்லா மகன்றுபோகும் தெளிவில்லா கிறுகிறுப்பு வாந்திதீரும், உள்ளப்பா அக்கினியா மந்தந் தீரும் ஊஷ்ணமாங் காங்கையெல்லா மகலும்பாரு, விள்ளப்பா போகருட கடாட்சத்தாலே அன்பாகப் புலிப்பாணி பாடினேனே. 341

அரிதாரபற்பம்

பாடினே னரிதாரப் பற்பந்தன்னைப் பண்பாகச் சொல்லுகிறேன் பணிந்துகேளு, நாடினே னரிதாரக் கட்டிதன்னை நலமான கற்சுண்ணந்தன்னில்நீற்றி, தேடினேன் மேனியிலை கல்லுச்சுண்ணம் சேர்த்தரைப்பாய் சமன்கொண்டு மைபோலாட்டிச், சூடினேன் சட்டியின் மேல் கவசங்கட்டிச் சுகமாக மண்சீலை வலுக்கச்செய்யே. 342

செய்யப்பா குக்குடத்தில் நீறிப்போகுஞ் செயமான பற்பத்தை யெடுத்துக்கொண்டு, வையப்பா கயங்கள்விஷ பாகம்பாண்டு வளமான சுரங்களொடு பித்தரோகம், கையப்பா எலிக்கடியும் பயித்தியந்தீரும் கருவான பற்பமிது அறிந்துகொள்ளு, நிய்யப்பா போகருட கடாட்சத்தாலே நிச்சயமாய் வைத்தியத்தைச் செய்துபாரே. 343

சகல ரோகத்துக்கு சூட்ச குளிகை

பாரடா ரசமுந் திரிபாலைகெந்தி பண்பான மிளகுடனே கடுகுஞ் சேர்த்து, நேரடா பொடியாக்கிப் பனையின்வெல்லம் நேர்சேர்த்துச் சுண்டக்காய் போலேயுண்டை, வீரடா ஒருவுண்டை வுதயந்தன்னில் விழுங்கிவிட்டுக் கடிகையா நேரஞ்சென்று, சீரடா ஆவின்பால் படியுங் கால்தான் சிறப்பாகத் தான்குடிப்பாய் திண்ணந்தானே. 344

---

343 குக்குடம-கோழியளவு புடம.

344 திரிபலை-கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய்.

தானேதா னிந்தவிதம் நாற்பத்தெட்டு தயவாக நாட்கொள்ளத் திரும் நோய்கள், மானேதான் குஷ்டமொடு குன்மஞ்சூலே மைந்தனே பெருவயிறும் பிரமைபித்தம், கோனேதான் சூலேநோவு சொரிகள் மாறுங் கொடிதான பத்தியந்தா னில்லேபாரு, நானேதான் போக ருட கடாட்சத்தாலே நலமாகப் புலிப்பாணி பாடினேனே. 345

பித்தபயித்தியத்திற்கு பற்பம்

பாடினேன் நாய்மண்டை மாட்டுமண்டை பாங்கான மனுஷருட மண்டையோடு, நாடியே சரியெடையாய்க் கல்வத்திட்டு நலமான கழுதைப்பால் தன்னலாட்டி, ஆடியே மைபோல வழித்தெடுத்து அடைவாகப் பில்லேதட்டி யுலரப்போட்டு, தேடியே குக்குடத்திற் புடத்தைபோடு தெளிவாகப் பற்பமது தவளமாச்சே. 346

ஆச்சப்பா கழுதைப்பால் துட்டெடைதா னிரண்டு அடைவான இஞ்சிச்சார் துட்டெடைதான்விட்டு, வாச்சப்பா சர்க்கரை துட்டெடைதான்போட்டு வளமான பற்பமது கழஞ்சுகூட்டி, யேச்சப்பா கொடுத்துவிடு ஈராறுவேளே யெழுந்தபித்த பயித்தியமும் பிரமை யேவல், போச்சப்பா தேவதைகளுக்கோவீடு புதைபில்லி வைப்பு முதல் தீருந்தானே. 347

பில்லி பயித்தியத்துக்கு

தானென்ற கழுதையுட இடபாகத்தில் தான்வளர்த்த சடை யுடனே பாம்புச்சட்டை, மானென்ற வேப்பெண்ணே செஞ்சீலேசுற்றி மைந்தனே சுடரென்ற தைலம்வாங்கிக், கோனென்ற வுள்ளுக்குக் கரண்டிவீதங் கொடுத்திடுவாய் மூன்றுநா ளாறுவேளே, தேனென்ற மேனுக்குப் பூசுபூசு தெளிவாகும் பில்லி பயித்திய நாளாறே. 348

சகல ரோகத்திற்கு சித்திரமூல எண்ணே

ஆரூத சூட்டுக்கு யெண்ணெய் சொல்வேன் அடைவாக எள் ளெண்ணெய் ஆவினெய்யுங், கூரூத வகைவகைக்குப் படிதான்பாதி கொடிதான சித்தருட மூலப்பட்டை, நேராகப் பலமொன்று நீர்விட் டாட்டி நேராக எண்ணேயிலே கலக்கிப்போட்டு, மீரூத மெழுகுபதந் தனிலிறக்கி மிஞ்சாமல் துட்டெடைதான் கொண்டுபாரே. 349

பாரேநீ நாற்பதுநாள் கொண்டபோது பாங்கான சூடெங்கே மேகமெங்கே, வீரேநீ விப்புருதி கண்டமாலே விதமான புண்புரைகள் சிரங்குந்தீருந், தீரேநீ வாயுவொடு சூலேக்குத்து திறமான செங்கிரந் தித் தடிப்புமாறுஞ், சேரேநீ பத்தியந்தா னிதற்கோயில்லே செய லான போகருட கடாட்சந்தானே. 350

349 மூலப்பட்டை-சித்திரமூலப்பட்டை.

ஆக்கிராணம்

தானுன ஆக்கிராணஞ் சொல்வேன்கேளு தயவான சுண்டைவேர் சித்திரமூலம், வானுன அழிஞ்சில்வேர் கண்டங்கத்திரி வளமான தூதுவளை முளகரணைவேளை, மானுன ஆடுதொடா குப்பைமேனி வளமான வெள்ளைச்சாரணையும்வேலி, பானுன வகைவகைக்கு விராக னென்று பண்பான எருக்கிலையுஞ் சுணையும்பாரே. 351

பாரேநீ சமுத்திரப் பழமுஞ்சுக்கு பாங்கான அக்கிராகாரம் தூமஞ், சேரேநீ அதிவிடையம் அரத்தைகாயஞ் செயலான திப்பிலி யுந் திப்பிலிமூலம், வீரேநீ தெசாவரங் கஸ்தூரிமஞ்சள் வீறுன வால் மிளகு கடல்நுரையுங்கடுகு, தீரேநீ குராசானியோமம் ரோகணி திறமான கருஞ்சீரகம் பேரரத்தைகாணே. 352

காணேநீ வசம்புவேப் பரிசியோடு கனிவான சாம்பிராணி வகை வகைக்குத், தானேநீ விராகனிடை நிறுத்துக்கொண்டு தயவாகச் சரக் கெல்லா மொன்றுய்க்கூட்டி, பாணேநீ அத்தியின்பால் வெள்ளாட்டு நீரும் பாங்காக பிசறிவைத் துலர்த்திக்கொண்டு, மானேநீ பொடித்து பேய்ச் சுரைகுடுக்கை மைந்தனே தூளடைத்து வைத்துக்கொள்ளே.

கொள்ளவே பணவிடைதா னுசிக்கேற்ற கொற்றவனே சன்னி யது விலகும்பாரு, அள்ளவே காகிதத்தில் வைத்துச்சுற்றி அடை வாக நிம்பயெண்ணெ தனில்வைத்து, மொள்ளவே பொருந்தியதை மாற்றிப்போட்டு மேன்மையாய் புகைதனை நாசிக்கேற்று, தள்ளவே சிரசிலுள்ள வியாதிதீருந் தலைவலியு மொருதலையு மிடிப்புபோமே. ()

போமேநீ நீர்ப்பாய்ச்சல் சயமும்பித்தம் பொல்லாத கபாலத் தின் சூலைவாயு, ஆமேநீ பீனிசமுஞ் சகலதோஷம் அடைவான மண்டைகுத்து கெர்ப்பநோயும், தாமேநீ சிரசிலுள்ள வியாதியெல் லாந் தாக்கடா இப்புகையைச் சண்ணுஞ்சண்ணும், வாமேநீ யின்ன மொரு சூட்சஞ்சொல்வேன் மாறுத ரணங்களுக்கு வழுத்துறேனே.

இரணங்களுக்குப் புகை

வழுத்துகிறேன் கண்டத்தின் மேலேயுள்ள வாய்முதல் கண் செவியின் நோயுந்தீரும், பழுத்துகிறேன் பற்கிட்டு சன்னிதோஷம் பாங்கான முனிகறுப் பெதுவானுலுங், கொழுத்துகிறேன் பணவிடை ஆக்கிராணத்தோடே குணமான நவாச்சார நேரேசேர்த்து, கழுத்து கிறேன் கற்சுண்ணங் கொஞ்சங்கூட்டிச் சுருக்காக மத்தித்து நாசிக் கேற்றே. 356

352 அரத்தை-சிற்றரத்தை. ரோசணி-கடுகுரோகணி.

ஏற்றேநீ ஆக்கிராணங் கழஞ்சியொன்று இதமான அரிதாரம் லிங்கம்பூரம், பார்த்தேநீ கொடிக்கள்ளிப் பட்டைதூளும் பாங்கான கழுதைலத்திப் பொடியுமப்பா, போற்றேநீ வகைவகைக்குக் கழஞ்சி யொன்று பொங்கமுடன் திருகுகள்ளிப் பாலாலாட்டி, சேர்த்தேநீ யுலரவைத்து எடுத்துக்கொண்டு செயமான புன்குபுளி தணலிற் கேளே. 357

கேளேதான் தணலிலே பொடியேபோட்டுக் கெடியான புண் களிலே புகைதான்சாரச், சூளேதான் வெடிசூலே மேகவெட்டை சுடுக்கிரந்தி யரையாப்பு பௌத்திரங்கள், கோளேதான் இப்புகையில் தீரும்பாரு கொற்றவனே பொடியெடுத்து அலரிப்பாலில், நானே தான் மத்தித்து ரணத்தில்போட நாயகனே ரணங்களெல்லாந் தீருந் தானே. 358

சூட்டுக்கு முழுக தாமரைத் தயிலம்

தானான எள்ளெண்ணே படிதானென்று தகமைகுளிர்த் தாம ரைச்சார்படிதானென்று, பானான பதந்தனிலே காய்ச்சியப்பா பக்குவ மாய்க் கிழிறக்கித் தானேவைத்து, மானான பூலாக்கிழங்கு பச்சிலையு மப்பா வகைவகைக்கு விராகனேந்து நிறுத்துக்கொண்டு, தேனகப் பொடிபண்ணித் தூவிப்போடு தெளிவாக வடித்திருத்து முழுகுவாயே.

முழுகையிலே சூடெல்லாந் தணிந்துபோகு முன்னிலையாக் கண் ணெரிவு குளிர்ச்சியாகும், பழுகாது திரேகமது பொன்போல் மின் னும் பண்பான நீர்கடுப்பு வினையுந்தீரும், அழுகாது விந்துவங்கே யிறுகும்பாரு அடைவாக மூலத்திற் சூடும்போகும், நழுகாது சூலே யுட கரணேவாங்கு நலமான போகருட கடாட்சத்தானே. 360

தானான வைத்திய முப்பூமார்க்கந் தயவாகச் சொல்லுகிறேன் தருமமாகக், கோனான பங்குனி சித்திரையில் பூநீறு கொற்றவனே மண்படா தெடுத்துவந்து, மானான நாலுபடி பாண்டத்திட்டு மைந் தனே கடலுப்பு படிதானிரண்டு, வானான கற்சுண்ணம் படிதா னிரண்டு வளமான அமுரியது படிதானெட்டே. 361

எட்டதுதான் வார்த்தபின்பு எள்ளெண்ணேயப்பா இதமாக படியரைதா னளந்துவாரு, தொட்டதுதான் கலக்கியதை தெளிவிறுத் துத் தோணவே வுப்பாகு மட்டுங்காய்ச்சி, விட்டதுதான் முரிபடி யெட்டேவிட்டு விதமாக இவ்விதமாய்ப் பத்துமுறை காய்ச்சு, பட் டதுதான் குழம்பதுபோ லாகும்பாரு பாங்கான எருச்சாம்பல் சொல் லக்கேளே. 362

கேளேதான் எருச்சாம்பல் பரப்பிமைந்தா கனிதமுடன் சல் லாவை விரித்துப்போட்டு, நாளேதான் இதில்வாரு இறுகும்போது நலமாக உண்டையா யுருட்டிப்போடே, சூளேதான் ரவியில்வைத்து

எடுத்துக்கொண்டு சுகமாக நெற்பிசரி ஒரு பாண்டத்தில், வாளேதா னரைப்பாண்ட மதனில்விட்டு வளமாக அதின்மேல் மல்லிகையி னிலையே. 363

மல்லிகையி னிலைபரப்பி யிந்தவண்ணம் மைந்தனே மேல் வைத்து இலையால்மூடி, அல்லியே யதின்மேலே நெல்லிட்டப்பா அடைவாகச் சட்டிகொண்டு மூடியெரியவைநீ, வல்லியே நெல்லு வெந்தபின் னெடுத்துவைத்து வளமாகச் சிப்பிநூறிறைச்சியொக்கக், கல்லிலே துவாரமிட்டுச் சொல்லக்கேளு கருத்தாகவீரம் பச்சைப் பூரந்தானே. 364

தானான பூரமுடன் பூநீறப்பா தயவாக வகைவகைக்கு விராகன் மூன்று, கோனான இவைநாலும் பொடியாய்ச்செய்து கொற்றவனே சிப்பியிட துவாரந்தன்னில், மானான சிப்பிதொறுங் கொஞ்சம்போடு மைந்தனே சட்டியின்மேல் பரப்பிவைத்து, பானனசெயநீரும் இறங் கும்பாரு பாங்காக யிதையெடுத்துப் பதனம்பண்ணே. 365

பண்ணப்பா நாதவிந்து ரண்டுதானும் பண்பான யிளநீரும் சம னுய்ச்சேர்த்து, நண்ணப்பா பாடுவண்டு உரமுஞ்சூதம் நலமாகக் கரு நாபிபச்சைப்பூரம், உண்ணப்பா ஆறுபுள்ளி வண்டின்முட்டை உத்த மனே சீனமுடன் சாரமப்பா, வண்ணப்பா வகைவகைக்குப் பணவெ டைதான்வீதம் வகையாகப் பொடிபண்ணி இளநீரிற்போடே. 366

போடேதான் தெளிவிறுத்து உண்டைபண்ணிப் பொங்கமுடன் இளநீரால் சாமமாட்டி, சூடேதான் வில்லைதட்டி ரவியில்போட்டு அடை வாகக் காய்ந்தபின்பு சொல்லக்கேளு, நாடேதான் பேரண்டம் பொடிய தாக்கி நலமான ஓட்டின்மேல் பரப்பிவைத்து, கூடேதான் அதன் மேலே வில்லைவைத்துக் குணமாக அதின்மேலே பொடியைப் போடே. 367

போடப்பா மேல்மூடிச் சீலைசெய்து புனிதமுடன் பத்தெருவில் புடத்தைப்போடு, சாடப்பா இம்முறையா யைந்துபோடு கசடறவே சுண்ணமா யிருக்கும்பாரு, பாரப்பா பேரண்டஞ் சிற்றண்டத்தோடு பாங்கான சிப்பியுநண் டோடுநத்தை, மாட்டப்பா யிதையெல்லாம் வெவ்வேருக மைந்தனே சிற்றண்டக் கருவாலாட்டே. 368

ஆட்டியே உலரவைத்து உலையிலூத அப்பனே அஞ்சுந்தான் சுண்ணமாகும், நாட்டியே அஞ்சுசுண்ணஞ் சமனுய்க்கூட்டி நலமாக முன்விட்ட செயநீர்விட்டுக், கூட்டியே தானரைத்துக் குகைபிடித்துக்

---

366 சாரம்-நவாச்சாரம்.

368 பேரண்டம்-தலைவோடு. சிற்றண்டம் கோழிமுட்டை.

குணமாகச் சில்லிசெய்து முன்சுண்ணத்தை, வாட்டியே செயநீரால் மைபோலாட்டி வளமாகத் தான்ரவியி லுலரப்போடே. 369

போடேநீ அஞ்சுசுண்ணக் குகையில்வைத்துப் போதகமா யஞ்சு சுண்ணம் சில்லுப்போட்டு, ஆடேநீ சுண்ணும்புச் சீலைசெய்து அடை வாகப் புடம்போட்டு எடுத்துக்கொண்டு, நாடேநீ அஞ்சுதர மிந்த பாகம் நலமாகப் புடம்போட்டு எடுத்துக்கொண்டு, மாடேநீ நாதாக்கள் சாபந்தீர மைந்தனே யாத்தாளைப் பூசைபண்ணே. 370

பண்ணவே சுண்ணத்தால் சுண்ணமாகும் பாங்கான செந்தூரம் மெழுகுமாகும், நண்ணவே கட்டினமு முருக்கினமுமாகும் நலமான சரக்கெல்லாம் பஸ்பமாகும், உண்ணவே லேகியங்கள் கிருதமெண் ணெய் உத்தமனே யவிழ்தமென்ற வகைகட்கெல்லாம், எண்ணவே பணவிடை தான் கூட்டவேண்டு மில்லாவிட்டா லவிழ்தமது வீறில் லாதே. 371

கருமசாந்தி

இல்லாத நோய்கள்தான் கடத்தில்மேவும் ஏதென்றால் பஞ்ச பாதகத்தால்காணும், பொல்லாத கர்மவினை தீரவேண்டிப் பூட்டு கிறேன் சாந்தியொன்று சொல்லக்கேளு, வல்லான ஓடுநீர் கலசந்தன் னில் வளமாகக் கொண்டுவந்து தர்ப்பைபோட்டு, சொல்லான கல சத்தை மேலேவைத்து சொகுசான் அக்குமணி சேர்த்துக்கட்டே. ()

கட்டப்பா மாவிலையை மேலேவைத்துக் கனமான மஞ்சளைத்தான் அரைத்துஅப்பி, பட்டான முக்கோணங் கலசத்துள்ளே பாங்காகத் தானிட்டுச் சிகரம்நாட்டி, மட்டான நோயாளி தன்னைத்தானும் மன் னவனே முன்னைவைப்பாய் மதியந்தன்னில், வட்டப்பா தூபமொடு தீபங்காட்டி வளமான வில்வமது நூற்றெட்டாமே. 373

ஆமப்பா ஓமென்று அர்ச்சனையுஞ்செய்து அடைவாக கலசநீர் சிரசில் வார்த்துத், தாமப்பா ஒருசிரங்கை யுள்ளுக்கீந்து தயவாக வில்வமது மூன்றுநாள்கொண்டால், ஓமப்பா அருக்கன்முதல் சனிநாள் மட்டு மொடுக்கமா யிப்படியே செய்தாயானல், போமப்பா பஞ்சபாத கங்களியாவும் பொல்லாத பிரமைபிணி யேவல்போமே. 374

நோய்க்கும் பேய்க்கும் ஓமசாந்தி

போமேதான் ஓமத்தின் சாந்திகேளு பொங்கமுட னைந்துபடி யரிசிகொட்டி, ஆமேதான் பச்சரிசி மேலேகேளு அறிவான திரிகோ ணம் விந்துபோட்டு, தானேதான் ரீங்கார முன்னேபோட்டுத் தயவா கக் கும்பமைந்தில் தனிநூல்சுற்றி, வாமேதான் சலமதுதா னிறைய விட்டு வளமான சொர்னமொன்று கூடப்போடே. 375

---

372 அக்குமணி-பலகரைமணி.

374 அருக்கன்-ஞாயிற்றுக்கிழமை.

போடப்பா இருபத்தைந் தறையுமாறிப் பொங்கமுடன் மாவிலை யுந் தேங்காய்வைத்து, ஆடப்பா சந்தனத்தைக் கரைத்துச்சாத்தி அட்சதையுஞ் சுகந்தபரி மளங்கள்பூசி, நாட்டப்பா பட்டுவஸ்திரங்கள் சாத்தி நலமான புட்பமர்ச்சனையே செய்து, ஈட்டப்பா பழம்தேங்காய் தாம்பூலங்கள் இதமான பலகார மிளநீர்பாலே. 376

பாலுடனே பானக்கம் வஸ்துவோடு பரமான்னம் அவலுடனே சுத்தியண்டம், ஏலுடனே பொரிகடலை சர்க்கரைமாவிளக்கு இதமான வெண்ணெய்பொங்கல் பசும்பருப்பு, சேலுடனே யித்தனையு மிலை தான்போட்டுச் செப்பமுடன் பரிமாறி தூபம்போட்டு, மாலுடனே வோமகுண்டஞ் சமிதைகேளு மைந்தனே மாவிலிங்க விளாத்தி யாமே. 377

ஆமேநீ வில்வமொடு எட்டிநொச்சி அடைவான மாவோடு ஓமம் செய்யாம், தாமேநீரம் அக்கினிநமா வென்றேதான் தயவாகச் சமித் துக்காயிரத் தெட்டோதி, போமேநீ யெள்ளுழுந்து கடலைமொச்சை பொலிவான துவரைபசும் பயற்றினோடு, வாமேநீ காராமணியும் அரிசி கோதுமை வளமாக ஒன்பதையும் ஓமம்பண்ணே. 378

பண்ணப்பா தேன்பாலு வஸ்துசுத்தி பாங்கான பழந்தேங் காய்ப் பலகாரங்கள், நண்ணப்பா இளநீர் சர்க்கரைபானக்கம் நலமான தயிர்சோறு நெற்பொறியுங்கூட, வண்ணப்பா அக்கினிக் காகுதியே பண்ண வஞ்சனையு முறைப்பாடுந் தேவர்குற்றம, ஒண்ணப்பா அசுத்த சுத்த கணமும்பூதம் உத்தமனே பஞ்சபாதகமும்போமே. 379

போமடா பில்லிவஞ்சனையும் ஏவல் பிரமையொடு வியாதிமுதல் பசாசுபேயும், ஆமடா முனிகறுப்பு லாடன்காட்டேரி அடைவான பேய்ச்சிகந் திருவர்மூர்த்தி, தாமடா சாத்தனொடு இருளனையன் தய வில்லாச் சப்பாணி யிருதலையின்கொள்ளி, ஓமடா இன்னம்வெகு பிசா சாணும் ஓமத்தில் ஓடிவிடுங் கண்டுபாரே. 380

கண்டுநீ கும்பமைந்துந் தூபதீபங் கனிவாகத் தான்கொடுத்து சோடசமுஞ்செய்து, பண்டுமுன்னே நோயாளி தனக்குமப்பா பாங் காகக் கலசநீர் சிரசில்வார்த்துக், கொண்டுமல்லோ அவிழ்தங்கள் கொடுக்கச்செய்யப் பிணியெலாந் தான்தீர்ந்து வியாதிபோகும், தொண்டுசெய்வா ரனைவோருஞ் சமர்த்தனென்று தொல்லுலகில் செல் வமாய் வாழ்வார்தானே. 381

---

876 அட்சதை-மஞ்சளரிசி.

377 சுத்தி-மாங்கிஷபொரியல். சமித்தை-கள்ளிவிறகு.

378 அரி-சரிசி.

381 கும்பம்-கலசம்.

கழிப்புசெய்யும் விதம்

தானென்ற கழிப்புக்குச் சொல்லக்கேளு தயவாகப் பச்சைமாப் பாவைசெய்து, வானென்ற புதுமுறத்துக் குள்ளேவைத்து வளமாக ஆபரணந் தன்னைப்போட்டுத், தானென்ற முப்பத்திரண்டுதீபங் குறையாமல் நவரத்தினம் சொர்னம்வைத்து, வானென்ற வஸ்திரங் கள் பரிமளங்கள்சாத்தி மைந்தனே சுகந்தபுட்பம் வாடைதூவே. 382

இரத்தசாமுண்டி சக்கரம்

தூவடா ரத்தசாமுண்டிசக்கரந் துலங்கவே பாவைமுன்னே எண்கோணம்போட்டு, மாவடா தானெடுத்து ரேகைபோட்டு மைந் தனே எட்டறையில் கரியேதூவு, நாவடா நாலறையி னுட்கோணத் தில் நலமான திருச்சூரணந் தன்னைத்தூவு, வாமடா உச்சதுரம் மஞ் சள்தூவு வளமான முக்கோணம் பச்சையாமே. 383

ஆமேதான் முக்கோணம் ஸ்ரீங்காரம்போட்டு அடைவான நாலறையில் அம்ஓம்தும்வம்மென்று, தாமேதான் நாலறையில் ஓங்கா ரங்கட்டித் தலைசுழித்துச் சூலமிட்டு தயவதாக, வாமேதான் கறுப்பு வண்ண அறைகளெட்டு வளமாக அ ஆ இ ஈ எ ஏ என்ன, மோமோ தான் எட்டுமுனை சூலம்போடு பொங்கமுடன் களபமுதல் சுகந்தச் சாத்தே. 384

சாத்தப்பா எட்டுமுனைச் சக்கரத்தில்மூன்று சார்வான பழந்தேங் காய் தாம்பூலங்கள், மாத்தப்பா பலகார வகையுமன்னம் வஸ்துசுத்தி கடலைபொரி யண்டத்தோடு, போத்தப்பா இளநீர்தேன் பானக்கம் பால் பொங்கமுடன் மஞ்சள்நீர் கரிதண்ணீரும், ஏத்தப்பா கடலை மொச்சை பயறுசுண்டல் இதமாக வெண்ணெயுஞ் சர்க்கரையும்வையே.

வையப்பா பச்சைமா விளக்கினோடு வளமாக இத்தனையும் முன் னேவைத்து, கையப்பா புதுப்பானை வாயைத்தட்டிக் கனிவான சுண் ணும்பை மேலேபூசி, வையப்பா கரிபொட்டு மேலேகுத்தி பாங்காகப் புழுங்கலரிசி சோற்றைப்போட்டு, மையப்பா உளுந்தென்ற பருப்புங் கூட மைந்தனே கத்தரிக்காய்க் கருவாடாமே. 386

ஆமேநீ முருங்கைக்காய் மொச்சைச்சாறு அடைவான புண்ணாக் குக் கீரையோடு, வாமேநீ வஸ்துவுடன் சுத்திகூட வளமான பஞ்ச வண்ணச் சோறும்வைத்துத், தாமேநீ பழந்தேங்காய் தாம்பூலஞ்சுற் றித் தயவாக ஓட்டிலிட்டு பாவைமுன்பு, போமேநீ யெட்டிமா விலிங் கம்ரண்டும் பொங்கமுட நிம்பஎண்ணை மிளகாயாமே. 387

387 நிம்பஎண்ணெய்-வேப்பெண்ணை.

ஆமப்பா சொர்னபுஷ்ப மவர்க்குவைத்து அடைவாகத் தூபமொடு தீபங்காட்டிக், காமப்பா சோடசோபசாரஞ்செய்து தயவான நைவேத் தியமானபின்பு, வாமப்பா பாவையைத்தான் தலையைச்சுற்றி வளமாக ஓட்டையுந்தான் தலையைச்சுற்றி, போமப்பா காடுதன்னில் மயானந் தன்னில் பொங்கமுடன் முப்பலியுங் கொடுத்துவையே. 388

வைத்தவுடன் பில்லிசூனியங்கள் யேவல் வலுவான பேய்பூதங் கறுப்புமாடன், இத்தமுடன் முனிவீரன் இருள்காட்டேரி இதமான மலக்குடனே சின்னுபீரும், பத்தவுடன் பிரமராட்சதையும் பேயும் பாங்கான சாத்தனெடு மாடன்பின்னும், கத்தவுட னிருதலையின் கொள்ளியோடு கருமுறையுந் தேவதைக ளோடிப்போமே. 389

சிதம்பரமெழுதிகட்ட

போமேநீ சிதம்பரத்தை யெழுதிக்கட்டப் போகுமடா நோய் பிணியும் பஞ்சபாவம், ஆமேநீ பிராமணர்க்கு அன்னம்போடு அபி ஷேகம் சங்கரற்குத் தீபம்யேற்று, தாமேநீ மஹேஸ்வரற்குப் பூசை செய்நீ தயவுடனே நந்திக்குச் சலத்தைவாரு, வாமேநீ அரசுடனே வேம்புசுற்றி வைரவர்க்கு வடமாலை சாத்தநன்றே. 390

பில்லி வஞ்சனைநோயுந் தீர்ப்பதற்கு கிரியை

நன்றான பில்லிவஞ்சனையும் நோயும் நாயகனே தீர்ப்பதற்குச் சொல்லக்கேளு, குன்றான மாவிலிங்கங் குப்பைமேனி குணமாக முடக்கற்றான் இதுதான்மூன்று, பண்டான வகைவகைக்குப் பலம் பத்தாக பாண்டத்திலதனையிட்டுத் தூணிநீரில், துண்டாகவேவைத்து விரல்பொறுக்கத் தும்பைமலர் மேலிடவே பிணிகள் போமே. 391

வேது தண்ணீர்

போமேநீ பூவரச ஆலின்பட்டை பொங்கமுடன் கடப்பம்பட்டை மூன்றுமாக, ஆமேநீ வகைவகைக்குப் பலந்தான் பத்து அடைவாகத் தூணிநீர் தண்ணீர்காச்சி, தாமேநீ மேலிடவே பிணிநோய்தீருந் தயவான பில்லி வஞ்சனையுந்தீரும், போமேநீ அறுகம்புல் சம்பு கோரை புகழ்பெறவே முன்போலே பிணிகள்போமே. 392

ஏவல் திர்க்க

போமடா கண்டங்கத்திரியின்மூலம் பொங்கமுடன் காட்டுசீரகத் தின்மூலம், வாமடா பிரமராட்சதையின்மூலம் வகைவகைக்குப் பலம் நூறு நிறுத்துக்கொண்டு. தாமடா வெவ்வேறு பாண்டத்திட்டுத் தயவான தூணிநீர் தன்னைவார்த்து, நாமடா வெந்திறக்கி தினமொன் ருக நலமாகத் தான்வார்க்க ஏவல்போமே. 393

இரத்தசாமுண்டி மந்திரம்

போமப்பா ரத்தசாமுண்டி மந்திரம் பொங்கமுடன் முன்னுக சொல்லவில்லை, ஆமப்பா ஓம்ரீயும் ரத்தசாமுண்டி துருதுரு மடிமடி மடி சித்தி குரு சுவாகாவென்று அடைவாக சக்கரத்தி லாயிரந்தா னோது, நாமப்பா பில்லிவஞ்சனையும் நோயும் நலமான தேவரோடு கணங்கள்பூதம், வாமப்பா பஞ்சபாதகங்கள் யாவும் வலுவான ராட் சதையும் விலகுந்தானே. 394

ஆடாதபேய் ஆட

தானென்ற பேய்மிரட்டி யிலையின்தூளுந் தலைப்பிள்ளைக்கொடி தூளுஞ் சமனுய்ச்சேர்த்து, பானென்ற யிவையுடன் சாம்பிராணி சேர்த்துப் பாங்காகப் புகைபோட பசாசு ஆடும், கோனென்ற ஓ வா வென்றுவோத கொற்றவனே பூதமெல்லா மாடும்பாரு, தேனென்ற போகருட கடாட்சத்தாலே தெளிவாகப் புலிப்பாணி பாடினேனே. ()

பில்லி வஞ்சனைபோக தீபம்

பாடினேன் மேனிவேர் முட்டையோடு பாங்கான கழுதையுட தண்டுங்கூட்டி, நாடினேன் கரிச்சிலை தனில்சுருட்டி நற்கழுதை நெய்யாதல் வேப்பெண்ணையாதல், கூடினேன் சிரசோடு கிளிஞ்சி யாதல் குணமாகத் தீபமிட்டுப் பார்க்கும்போது, ஓடினேனென்று சொல்லிக் கணங்கள்யாவும் உத்தமனே பில்லி வஞ்சனையும் போமே.

பயித்தியத்திற்கு

போமடா கோசலமும் பசுவின்பாலும் பொங்கமுடன் கரிப்பான் சார் முசுமுசுக்கை, தாமடா வகைவகைக்குப் படிதானென்று தயவான எள்ளெண்ணை படிதானென்று, ஆமடா கடுகுபதந் தன்னிற் காய்ச்சி அடைவாக மூழ்கிவரப் பிரமைபித்தம், சாமடா பயித்தியஞ்செய் வினையுந்தீருஞ் சற்குருவாம் போகருட கடாட்சந்தானே. 397

சகல பேய்க்குங் குளிசம்

தானப்பா பிரமராட் சதையின்பூடு தயவாக வெள்ளிநாள் காப்புகட்டி, வானப்பா பஞ்சவண்ண நூலினாலே வளமாகத் தான்கட்டி கோசலத்தைவாரு, மானப்பா எட்டுநா ளந்திசந்தி மைந்தனே வார்க் கையிலே தியானமோது, ஆனப்பா அரிபிரமராட்சதை நீயென்று ஆனந்தவல்லியென்று நூற்றெட்டோதே. 398

---

396 முட்டை-எருமுட்டை பீநாரி.

ஓதடா முப்பலியும் பொங்கலிட்டு உத்தமனே நடுச்சாமந் தன்னில்தானும், வாதடா நிருவாண ரூபங்கொண்டு வண்மையுடன் ஆணிவே ரறுமல்நீயும், ஆதடா வெடுத்துவந்து குளிசங்கட்ட அடைவான பிரமராட்சதையுமேவல், நாதடா முனிகறுப்பு பேயும் பூதம் நலமான தேவனே டோடிப்போமே. 399

பேய் பூதம் ஓடிப்போக மை

போமடா இன்னமொரு மையைக்கேளு பொங்கமுடன் பன்றியுட மூஞ்சியொன்று, ஆமடா நாய்ப்பல்லு புலி யுண்ணுக்கு அடர் கழுதை மண்டை கரும்பூனையீரல், வாமடா மனுஷர்மலந் தீட்டுச்சீலை வளமாக நொறுக்கியப்பா பாண்டத்திட்டு, தாமடா குழித்தைலமாவரை காஷ்டத்தாலெரித்து தானெடுத்துக் குப்பியில் அடைத்துக் கொள்ளே. 400

கொள்ளப்பா மயானத்தில் பாழ்வீடாதல் கோரிவிடு குட்டிச் சுவர் தண்ணிலாதல், வள்ளப்பா வஸ்துடனே நெற்பொரியும் வைத்து வளமில்லா எருக்கம்பூ அரும்பினாலே, மெள்ளப்பா நூறெட்டு உருதானேதி மேன்மையாய் ஆத்தாளை தியானித்துநீ அள்ளப்பா தூம்தூம் தூசிதூசி சிசிபோவென்று அடைவாகத் தைலத்தி னருமைபாரே. ()

பாரேநீ திலதமிடப் பில்லிவஞ்சனை பறக்குமடா தேவரொடு கணங்கள்பூதம், நேரேநீ முனிகறுப்பு பேய்பிசாசு நேரில்லா செய்வினையும் பயித்தியந்தீரும், சீரேநீ நெறிகட்டில் வாசல்மேலே செயலாகப் பொட்டிட சொற்பனங்கள்கோடி, வேறேநீ வெடியிடுக்கில் தடவினக்கால் வீரான குறிமுகந்தான் சொல்ல நன்றே. 402

சொல்லான வெடிப்பிருந்த பொட்டினாலே சொற்பெரிய சொற்பனங்கள் தீரவேண்டில், அல்லான பொட்டைமிகச் சுரண்டியப்பா அடைவாக முறந்தனிலே சிந்தாமற்றான், வல்லான சாணியிட்டு மெழுகிநன்றாய் வளமாகப் பசுவின்பால் கொண்டுதேய்நீ, சொல்லான வெல்லார்கால் படாநிலத்தில் சூரையாய்க் கொட்டிவிடு சொற்பனங்கள் போமே. 403

அக்கினி பிளாஸ்திரி

போமென்ற அக்கினி பிளாஸ்திரியைக்கேளு பொங்கமுடன் மெழுகதுவும் விராகன்பத்து, ஆமென்ற பாண்டத்தி லிட்டுமைந்தா அடைவாக வீரமைந்து பொடித்துப்போட்டுத், தாமென்று உருகையிலே விளக்கெண்ணைவிட்டுத் தானுருக்கி வடிகட்டி சலத்தில்வாரு, வாமென்று தனையெடுத்து சிமிழில்வைத்து வளமாகச் சல்லாமேல் தடவிவையே. 404

---

400 காஷ்டம்-விறகு.

தடவியே கைகால்குத்த லெடுக்குந்தேகந் தயவாக எலுமிச்சம் பழச்சார்பூசி, அடவியே சாரத்தைப் பொடித்துத்தூவி அடைவான பிளாஸ்திரியை அளவாயப்போட்டு, மடவியே கட்டிடவே பொறுக் கொணுது மயக்கமுஞ் சோபங்கொண்டா லவிழ்த்துப்போட்டுத், தடவியே கொப்பளித்துச் சலமதாகும் கத்திரித்து விட்டுவிடு நீரு போமே. 405

இரணமாறுகிற பிளாஸ்திரி

போமேநீ வலிக்குத்து தீர்ந்துபோகும் பொங்கமுடன் ரண மாறப் பிளாஸ்திரி சொல்வேன், ஆமேநீ வெள்ளையென்ற குங்கிலியந் தன்னை அடைவாக மெழுகுடனே சமனுய்ச்சேர்த்து, வாமேநீ பாண் டத்தி லுருகும்போது வளமான தேங்காயின் நெய்யைவார்த்து, நாமேநீ யுருக்கிவடி கட்டிநீரில் நலமாகத் தான்வார்த்து எடுத்துக் கொள்ளே. 406

கொள்ளப்பா சிமிழ்வைத்துப் பதனமாகக் கொற்றவனே சல்லா வஸ்திரத்தில்பூசி, அள்ளப்பா அனல்தனிலே காட்டிக்கட்ட அளவில்லா ரணங்களெல்லா மாறிப்போகு, மெள்ளப்பா சிரங்குபுண்ணில் பிளாஸ் திரிபோட மேன்மையா யொடுங்கியது உதிர்ந்துபோகும், தெள் ளப்பா போகருட கடாட்சத்வாலே தெளிவாகப் புலிப்பாணி பாடி னேனே. 407

பிளாஸ்திரி

பாடுகிறே னின்னமொரு பிளாஸ்திரிகேளு பாங்கான விளாம் பிசினுங் கருங்குங்கிலியம், நாடுகிறேன் சமன்கொண்டு உருகும் போது நலமான விளக்கெண்ணை கூடவிட்டு, ஆடுகிறேன் வடிகட்டிக் கலயந்தன்னில் அடைவாகத் தானடைத்துத் துணியில்பூசி, சூடு கிறேன் ரணங்கள்மேல் போட ஆறும் சுகமாக அனல்காட்டிப் போட்டிடாயே. 408

போட்டிடவே யின்னமொரு பிளாஸ்திரி சொல்வேன் புகழ் பெரிய மரத்துவெள்ளை பலந்தானிந்து, கூட்டிடுவாய் பூரம்விடை விராகனைந்து கூட்டியே தானரைத்துப் பொடியாய்ச்செய்து, மாட்டிடு வாய் தென்னங்கா யெண்ணையாலே மைந்தனே தானரைத்துத் தண் ணீர்விட்டு, ஆட்டிடுவாய் தவளம்போலாகுமட்டும் அப்பனே புண் மேலே போடப்போமே. 409

மேகராஜாங்கத்து எண்ணை

போமென்ற மேகராஜாங்கத்தெண்ணை பூட்டுகிறே னன்றுகப் புகலக்கேளு, ஏமென்ற எரண்டத்தெண்ணை படிநாலு இதமாக

409 மரத்துவெள்ளை-வெள்ளைக்குங்கிலியம். தவளம்-வெள்ளை.
410 எரண்டத்தெண்ணை-ஆமணக்கெண்ணை. ஈருள்ளி-வெங்காயம்.

ஈருள்ளிச்சாறு படிரண்டு, ஆமென்ற கழுதைலத்தைச்சாறு படிரண்டு அடைவாக வரிக்குமட்டிச்சாறு படிரண்டு, வாமென்ற கையான் புளியாரைசங்கு வல்லாரை பிரமிபொடுதலை செருப்படியே. 410

படியான கருநொச்சிப் பொன்னுங்காணி பாரிநுணா ஆதொண்டை கிரந்திபூண்டு, செடியான வெள்ளறுகு சிவனார்வேம்பு செயலாக வகைவகைக்குப் படிதானிரண்டு, கெடியான சாரெல்லா மெட்டொன்றுக்கி கணிதமாய் வேறுவகை சொல்லக்கேளு, பிடியான கொடிவேலி பூவரசன்வேரும் பொங்குநிலவாகை சுடுதுரத்தம் வேரே. 411

வேரான கிளிமூக்கின் கிழங்கினோடு விதமான அப்பையுட கிழங்குங்குப்பி, சீரான வகைவகைக்குப் பலமதாகச் சேர்த்திடித்துக் குறுணிநீ ரெட்டொன்றுக்கிக், காரான எண்ணையிலே விட்டுமைந்தா கடைசரக்கு இதிற்போட கருத்தாய்க்கேளு, பேரான சாதிக்காய் கிராம்பு எலம் பேதமில்லா சிறுலவங்கப்பட்டை மிளகே. 412

மிளகுடனே அதிமதுரங் கோஷ்டங் திப்பிலி மிதமான திப்பிலியின் மூலத்தோடு, அளகான வெண்காரம் குராசானியோமம் அடைவான தான்றிக்காய் கடுக்காய்க்காயம், வளமான கரியசீரகங் கார்போகங் கஸ்தூரி அரத்தை சுக்கு அதிவிடய மக்கிராகாரம், புளகான கடுகுரோகணியு மாஞ்சில் பொங்கமுடன் தாளிசப் பத்திரியுமாமே. ()

ஆமென்ற கசகசா ஓமங்கஞ்சா அடைவான வலம்புரிக்காய் பரங்கிப்பட்டை, வாமென்ற சேனுமரப் பட்டையோடு வளமான வாலுழுவை சிறுநாகப்பூ, ஊமென்ற தக்கோலம் வசம்புசுக்கு உத்தமனே யபினி வசுவாசிசிரம், போமென்ற யானைத்திப்பிலி குங்குமப்பூ பொங்கமுடன் வாளஞ்சேங் கொட்டை தானே. 414

தானென்ற எவாச்சாரஞ் சத்திசாரந் தயவான நவாச்சாரஞ் சாஸ்திரபேதி, ஆனென்ற வகைவகைக்கு விராகன்நாலு அடைவாகப் பொடித்துநீ எண்ணைதனிற்போட்டு, வானென்ற மெழுகுபதந்தனி லிறக்கி வண்மைபெற கணபதியைப் பூசைசெய்து, தேனென்ற குருபதத்தை மனதிலுன்னி தென்புபெற ஒருகரண்டி உள்ளே கொள்ளே. 415

கொள்ளப்பா அந்திசந்தி கொண்டபோது கொடிதான பத்தியந்தா னெதுவுமாகா, தெள்ளப்பா மூன்றுநா ளாறுவேளை தெளி

---

411 கிரந்திபூண்டு-கிரகதிநாயகம. சுடுதுரத்தம்-சித்திரபாலை.
412 கிளிமூக்குக்கிழங்கு-சற்ருழைக்கிழங்கு.
414 சேனுமரப்பட்டை-அழிஞ்சிற்பட்டை.

வாக ஏழாநாள் நீரைவாரு, வெள்ளப்பா வறுத்தவுப்பும் பருப்புமாகும் மேன்மையாய் மற்றுநாள் புளியைக்கூட்டு, சுள்ளப்பா கிரந்தி யரையாப்புச்சூலை சுகமில்லா விப்புருதி கண்டமாலைபோமே. 416

போமேநீ யிருபத்தோர் மேகமுந்தானும் பொங்குகின்ற குஷ்டமொடு சோகைபாண்டு, தாமேதான் கழல்வாதம் அண்டவாதந் தயவில்லாக் கால்வாதம் பட்சவாதம், ஆமேதான் பவுத்திரமு மூலப்புற்று அடைவான மண்டையுட சூலைவாயு, தீமேநீ ரணங்களொடு சூலைதீருந் திறமான போகருட கடாட்சந்தானே. 417

ஐந்தெண்ணைத் தயிலம்

தானான யெள்ளெண்ணை யேரண்டத்தெண்ணை தயவான இலுப்பெண்ணை வேப்பெண்ணைதான், மானான புங்கெண்ணை யைந்துந்தானு மைந்தனே வகைவகைக்குப் படிதானென்று, தானான பாண்டத்திலளந்துவிட்டுத் தயவாகக் கியாழவகை சொல்லக்கேளு, கோனான ஆதொண்டை மூலம்பத்ரி கொற்றவனே செம்புடைய மூலங்கேளே.

கேளேநீ தழுதாழை காட்டாமணக்கு கணிதமாய்த் திருகுகள்ளி வேலைமேனி, நாளேநீ மாவிலிங்கம் ஆவிநொச்சி நலமான வேம்பு புன்கு வெள்ளைநொச்சி, சூளேதான் கொடிவேலி கார் முருங்கைசங்கு சுகமாக ஊர்முருங்கை தூதுவேளை, வாளேநீ மாம் பட்டை மூலிகைதான் மூலம் வகைவகைக்குப் பலமைந்து நிறுத்துக் கொள்ளே. 419

கொள்ளப்பா இவையெல்லா மிடித்துப்போட்டுக் குணமாகத் தூணிநீர் யெட்டொன்றாக்கி, தெள்ளப்பா எண்ணையிலே யிறுத்து வாரு தெளிவாக சரக்குவகை சொல்லக்கேளு, மெள்ளப்பா அரத்தை சுக்கு வோமந்திப்பிலி மேன்மையாய்த் திப்பிலியின் மூலத்தோடு, அள்ளப்பா ஆனைத்திப்பிலியுங் காயம் அடைவாக கருஞ்சீரகஞ் சதகுப்பைதானே. 420

தானென்ற தேசாவரங் குராசானியுள்ளி தயவாக வெளிச்சி யென்ற பிசினியோடு, வானென்ற வசம்புடனே தேக்கு இஞ்சி மைந்தனே சடாமாஞ்சில் கிராம்புகுக்கில், தேனென்ற வகைவகைக்குப் பலங்காலாகத் தெளிவாக அரைத்திட்டு யெண்ணையிலே போட்டுக், கானென்ற மெழுகுபதந்தனில் காய்ச்சிக் கணபதிக்கு பூசைசெய்து யெடுத்துக்கொள்ளே. 421

கொள்ளப்பா தயிலங் காசிடைதானுண்டு குணமாக மேலெங்கும் பூசினக்கால், கள்ளப்பா சன்னியெங்கே தோஷமெங்கே கடிதான

421 உள்ளி - வெள்ளைப்பூண்டு. வெளிச்சி - விளாம்பிசினி. குக்கில் - மைசாட்சி.

வலிப்பேழும் அண்டவாதம், சுள்ளப்பா வாதமென்ற வகைகளெல் லாஞ் சுழன்றெழுந்து ஓடிவிடு மெதிர்நில்லாது, மெள்ளப்பா மூன்றுநா ளாறுவேளை மேன்மையா யேழாநாள் நீரைவாரே. 422

விஷமுட்டித் தைலம்

வாரேதான் விஷமுட்டி தைலமொன்று வளமாகச் சொல்லு கிறேன் நன்றாய்க்கேளு, சேரேதான் ஏறழிஞ்சி யெட்டிசங்கு செய லான வன்னிபுன்கு செண்பகப்பூ, சாரேதான் சங்கங்குப்பி கடம்பு சின்னி சார்வான வெள்ளறுகு ஆவிப்பட்டை, தீரேதான் மருக்காரை இரண்டுகொத்தான் திறஞ்சென்னுபுருவி காஞ்சோரியாமே. 423

ஆமேதான் குன்றுமணி கறுகறுத்தகண்ணி ஆவாரை சிவன் வேம்பு கழுதைமுள்ளி, தாமேதான் ஐவன்னி புரசுகருங்காலி தய வான புடர்த்தியொடு கிளுவைவாகை, போமேதான் புனலிண்டு கருவூமத்தை பொங்கமுடன் கொடுவேலி முத்தக்காசு, வாமேதான் அமுக்கரா விடத்தாரிப் பூவரசுடனே சின்னபாலாக் குமரிதானே. ()

தானான மிளகருணை கொன்றையாத்தி தயவான கழல்கொடி யுஞ் செங்கத்தாரி, வானான பெருமரமும் அவரிகட்டு வளமாக சம னறுக்கி யுலர்த்திக்கொண்டு, பானான குழித்தயிலமாகவாங்கிப் பக்குவ மாய்த் தானெடுத்துப் பதனம்பண்ணு, மானான சீவசெந்து வகை யைச்சொல்வேன் மைந்தனே மூஞ்சூறுங் காகமாமே. 425

ஆமேதான் யழுங்கோடு கழுகு ஆமையாந்தை அடர்பச்சை ஓணான் கூகைதேவாங்கு, தாமேதான் பசுந்தவளைப் பெருவிரியன் தயவான மனிதன்மண்டை கழுதைமண்டை, போமேதா னெருமைக் கொம்பரிக் குளம்பினோடு பொலியானை லத்திமுதல் புழுக்கைதானும், வாமேதான் ஒட்டகத்தின் லத்திகூட வன்பன்றிக் கழுதையுட லத்தி தானே. 426

தானப்பா வெள்ளாட்டுப் புழுக்கையோடு தயவாக சமன் கொண்டு இடித்துலர்த்திப், பானப்பா குழித்தயில மாகவாங்கிப் பாங்கான இத்தயிலஞ் சமனாய்ச் சேர்த்துக், கோனப்பா செங் கொட்டைதயில மரைப்படி கொற்றவனே தயிலத்தின் கூடவாரு, வானப்பா கறுப்புடைய குங்கலியம் வளர்திசையின் பூட்டுடைய பூச்சித்தானே. 427

---

424 சின்னபாலா-குட்டிபாலா. குமரி-சோற்றுக்கற்றாழை.

425 பெருமரம்-தலைசுருளி. கட்டு-கட்டுக்கொடி.

426 கூகை-கோட்டான். பரிக்கொம்பு-குதிரைக்குளம்பு.

427 பூட்டு-சூக்ஷம்.

தானடா கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் தனித்தேதான் மாசக்கா யிரசகற்பூரம், மானடா சேனுமரப்பட்டையோடு மைந்தனே வகை வகைக்குப் பலந்தானென்று, வானடா பரங்கிப்பட்டை பிரப்பங் கிழங்கு வளமாகப் பலமிரண்டு நிறுத்துப்போட்டு, பானடா வலம் புரிக்காய் கடுக்காயோடு பாங்காகப் பலமொன்று நிறுத்துக்கொள்ளே.

கொள்ளேதான் ஒதியம்பட்டை சித்திரமூலச்சாறு குணமாகச் சாக்கெல்லா மரைத்துப்போட்டே, அள்ளேதான் மயிலெண்ணெ வேப்பெண்ணெ யிரண்டும் அடைவான தயிலத்தில் நேரேசேர்த்து, துள்ளேநீ துழாவிமிகப் பதத்தில் காய்ச்சிச் சுகமாக கணபதிக்குப் பூசைபண்ணு, தெள்ளேதான் துவளையிடு தேகமெங்கும் தெளிவாக நோய்தீரும் விபரம்பாரே. 429

பாரேதான் கால்முடங் கைமுடமுந்தீரும் பாங்கான சூலையொடு குஷ்டநோயும், சேரேதான் புடையன் செவ்வட்டை மரவட்டை செய் யான் வண்டுகடி பில்லிவஞ்சனையும் போகும், தீரேதான் பூதமுதல் பிசாசுவேதாளங் திறமான பிரமராட்சதையுங்கூட, வாரேதான் மற்று ளுள் வேதுதண்ணீர் வீறுன நோயறிந்து தண்ணீர்வாரே. 430

வாரடா கைப்போடு புளிபுகையுந்தள்ளு வளமான உப்பை நன்றாய் வறுத்துக்கூட்டு, பாரடா பாசிப்பயறு கொடிக்காலின் பஞ்சு பாங்காக முருங்கையுட பிஞ்சுமாகும், கூரடா ஆவின்பால் நெய்புமாகுங் குணமான துவரையுட பருப்புமாகும், சீரடா வியாதி யுட குறியுங்கண்டு சிறப்பாக பத்தியத்தை சீராய்க்கூட்டே. 431

விஷங்களுக்கு மெழுகு

கூட்டப்பா வரிக்குமட்டி பழச்சார்வாங்கிக் குணமாகப் பாண் டத்தில் மைபோல்கிண்டி, மாட்டப்பா சிமிழ்தனிலே யடைத்துக் கொண்டு மைந்தனே பசும்பயறு மளவாய்த்தானும், மீட்டப்பா நாவு தனில் கடவிப்போடு மிகுந்ததொரு விஷங்களெல்லா மிறங்கிப் போகும், ஆட்டப்பா போகருட கடாட்சத்தாலே அடைவாக புலிப் பாணி பாடினேனே. 432

அக்கினிமாந்தத்திற்கு லேகியம்

தானென்ற திரிகடுகுஓமம் வாய்விளங்கந் தயவாக வகைவகைக்கு விராகனெந்து, போனென்ற பொடிபண்ணிச் சர்க்கரைநேர் சேர்த்து பொங்கியே தேன்படி கால் நெய்படிகால்வார்த்து, கோனென்று பிசை ந்ததிலே வைததுக்கொண்டு குணமாக நெல்லிக்கா யளவுகொள்ள, வானென்றவாயு அக்கினியின்மந்தம் வாங்குமடா போகருட கடாட்சந் தானே. 433

சத்திவல்லாதி எண்ணெ

தானப்பா சுத்தபலாதி எண்ணெ தயவாக சிற்றுமுட்டி மூலத்தோடு, ஆனப்பா பலமது முப்பத்திரண்டு அடைவாகத் தானிடித்து இருதூணிநீரில், பானப்பா நாலிலொன்று காய்ச்சிவாங்கி பாங்காக ஐங்தெண்ணெ ஒருபடிதான்வாரு, வானப்பா கெந்தியதி மதுரங்கோட்டம் வளமான சாதிக்காய் சாதிபத்திரியே. 434

பத்தான ஏலமுடன் லவங்கப்பட்டை பாங்கான அரத்தை சுக்கு அக்ராகாரம், முத்தான மாஞ்சை தாளிசையாம் பத்திரி முடுக்கான வாய்விளங்கம் யானைத்திப்பிலி, சித்தான திப்பிலி கடுகுரோகணியுந் திருக்கைநீர் வாலின்மிளகு வோமம், வித்தான குங்குமப்பூ கறுப்பு சீரகம் விதமான கடுக்காயுந் தான்றிக்காயே. 435

காயான செண்பகப்பூ கொத்தமல்லி கருவான வாலுழுவை சிறுநாகப்பூ, மாயான செவியமது சழஞ்சிநாலு மைந்தனே பொடி பண்ணி எண்ணெயிலேபோட்டுத், தாயான பழச்சாறு பசுவின்பாலு தயவாக வகைவகைக்குப் படிதான்வாரு, சேயான மெழுகுபதந்தனில் வடித்து செயமான புழுகுடனே கஸ்தூரிப்போடே. 436

போடேதான் வகைவகைக்கு கழஞ்சிதானும் பொங்கமுடன் கணபதிக்குப் பூசைபண்ணு, நாடேதான் காசெடைதா னெண்ணெ கொள்ள நாசியிலே யொருதுளிபு மேலேபூச, சாடேதான் முகவாத மண்டைவாதம் கடிதான பித்தமொடு நீலகாசம், சூடேதான் பீநசமும் வாயுசூலை சுகமில்லாச் சொரிமுதலாய்த் தீரும்பாரே. 437

பாரேநீ மூன்றுநா ளாறுவேளை பாங்காகக் கொள்கையிலே பத்தியத்தைக்கேளு, சேரேதான் சீயக்காய் வெந்நீருவாரு சிறப்பான பசும்பயறு உப்புங்கூட்டு, நீரேதான் நாலாநா ளெல்லாங்கூட்டு தீர்க்கமா யிப்படி மூன்று கெடுவேகொள்ளு, வீரேதான் சொன்ன பிணி தீரும்பாரு விதமான போகருட கடாக்ஷந்தானே. 438

ஈளை காசம் பெருமூத்திரகிரிச்சரம் நீரடைப்பு பெரும்பாண்டுக்கு லேகியம்

தானான வரிக்குமட்டிவேர் பலமும்பத்து தயவான கடுக்காய் வேர் நெல்லிவேரும், மானான தான்றிக்காய் வேரினோடு மைந்தனே பத்திராட்சிதையி னல்வேரும், கோனான வெட்டிவேர் வில்வவேரும் குணமான விலாமிச்சை தூதுவளை நன்னாரி, வானான மாதளை மலை தாங்கி சிறுகாஞ்சோரி வளமான நெய்தலொடு செங்கழுநீர்க்கிழங்கே.

கிழங்கு காசுமல்லி நிலப்பனையும் நிலவாகை கிருபையுடன் கண்டங்கத்திரியின்மூலம், புளங்கமப்பா வகைவகைக்குப் பலந்தானொன்று போட்டிடித்துத் தூணிநீ ரெட்டொன்றாக்கி, விளங்கப்பா பசுவின்

பால்படி நாலுவிட்டு விதமான சரக்குவகை சொல்லக்கேளு,முளங்கப்பா சாதிக்காய் சாதிப்பத்திரி முதலான கிராம்புயேலம் வாலுடைய மிளகே. 440

மிளகான சிறுலவங்கம் மந்திட்டிகோட்ட மிகுந்தநல்ல சந்தன மும் கரியசீரகம், அளவான சதகுப்பை வாய்விளங்கம் அடைவான சாஸ்திரமாம் பேதியோடு, புளதான தாளிசபத்திரி தேவதாரம் புனித சீரகமிளகு சிறுநாகப்பூ, இளதான அதிமதுரம் காஞ்சினியும் ஈமவாலுமுவை சிங்கியாமே. 441

ஆமேதான் கஸ்தூரி மஞ்சளோடு அடைவான திப்பிலியுந் திப் பிலியின்மூலம், போமேதான் ரோகணியும் நெருஞ்சில்முள்ளு பொங்க முடன் குரோசானி முத்தக்காசு, தாமேதான் கடுக்காயும் நெல்லிக் காயுந் தயவான குங்குமப்பூ மாதளையின்பிஞ்சு, வாமேதான் வகை வகைக்கு கழஞ்சிகாலு வளமாகப் பசுவின்பால் தன்னுலாட்டே. 442

ஆட்டியே கியாழமது தன்னிற்போட்டு அடைவாக ஆவின்பால் நெய் படிநால்விட்டு, நாடியே செவ்விளநீர் பழச்சாருதானும் நலமான வல்லாரைச் சாருகூட, மூட்டியே வகைவகைக்குப் படிதானிரண்டு, முசியாத சீனியது பலந்தானிரண்டு கூட்டியே நல்லவெல்லம் பலந்தா னுறு கூடவிட்டு மெழுகுபதந் தன்னிற்காச்சே. 443

காய்ச்சியே வடிகட்டிக் கலசத்திட்டு கணபதிக்குப் பூசைசெய்து நெற்புடந்தான் திங்கள், ஆச்சியே யெடுத்துநீ வைத்துக்கொண்டு அடைவாக முக்கழஞ்சி அந்திசந்தி, தாச்சியேகொண்டிடவே ஈளை காசந் தயவில்லா தலைநடுக்கம் பித்தமேகம், ஆச்சியே வலிப்போடு கல்லடைப்பு அளவில்லா மூத்திரத்தின் கிரிச்சியோடு, பேச்சியே பெரும்பாடு மேலெரிவுகாந்தல் பேதமில்லா நீர்ச்சிரிப்பு வாயுபோமே.

போமடா மலடிக்குப் பிள்ளையுண்டாம் பொங்கியே கைப்புபுளி தயிருமாகா, வாமடா நெய்விட்டா லெல்லாமாகும் வளமான தேகமது காந்தியுண்டாம், பாமடா பவளபற்பம் நெய்யிற்கூட்டிப் பாங்காகக் கொண்டிடவே நோய்களெல்லாம், தாமடா கைகறுப்பு மாறிப்போகும் தயவான போகருட கடாக்ஷந்தானே. 445

பீநசத்துக்கு எண்ணெ

தானப்பா பீநசத்துக் கெண்ணெகேளு தயவாக எள்ளெண்ணெ படிதானிரண்டு, வானப்பா கரிசாலை பொன்னுங்காணி வளமான வெற்றிலையவுரி முசுமுசுக்கை, மானப்பா மூக்குரட்டை அத்திப் பட்டை மைந்தனே வவைவகைக்குப் படிசார்விட்டு, கோனப்பா

441 காஞ்சினி-மஞ்சள். சிங்கி-கடுக்காய்ப்பூ.

ஆதொண்டையிலேச் சாருதானுங் கொற்றவனே படியிரண் டளந்து வாரே. 446

வாரப்பா பீனசமாம் பூண்டுமூலம் வகையுடனே இடித்தசார் படிதானென்று, வீரப்பா பசுவின்பால் படிதானென்று வித்தகனே யடுப்பேற்றி வேகும்பாது, சீரப்பா மிளகுடனே கஸ்தூரிமஞ்சள் சிறுகடுக்காய் நெல்லிவித்து நிம்பவித்தும், காரப்பா கருஞ்செம்பைப் பூவுந்தானுங் கனமான வகைவகைக்குப் பலந்தான் வாங்கே. 447

வாங்கியே பொடித்திட்டு முன்நெய்யிற்றாவி வகையுடனே மெழுகுபத மானபோது, தூங்கியேபோகாதே யிறக்கிக்கொண்டு துய்யமிகு கணபதியைப் பூசைசெய்து, தீங்கில்லா தைலமதை தினமுநான்கில் தீவிரமாய் மூழ்கிவர தீரும்ரோகம், ஏங்கியே திரியாதே புளிப்புகைப்பு எள்ளெண்ணே மாங்கிஷமு மீனுகாதே. 448

ஆகாது பெண்போக மாகாதப்பா அப்பனே வறுத்தவுப்பு துவரையாகும், வேகாத பண்டங்க ளொன்றுமாகா வெங்நீரு முருங் கைக்கா யவரைப்பிஞ்சும், நோகாத வழுதலங்காய் வற்றலாகும் நோயாளி கண்டறிந்து பத்தியஞ்செய்தாற், போகாத பீனிசங்கள் பறந்துபோகும் போகருட கடாட்சத்தாற் பாடினேனே. 449

மேகரணங்களுக்கு தீப்புகை

பாடுவேன் மேகமென்ற ரோகந்தீரப் பாரிலுள்ள பண்டிதரே பகரக்கேளு, நாடுவேன் பூரமது விராகனென்று நலமான சூதசெந் தூரமொன்று, கூடுவேன் தேன்மெழுகு பலமேகாலு குறியாகக் கரண்டியிலே உருக்கிக்கொண்டு, ஆடுவேன் முன்சரக்கைப் பொடித் துத்தூவி அப்பனே இறக்கியைந்து திரியிலூட்டே. 450

ஊட்டியே ரோகிதனை அறையில்வைத்து உத்தமனே திரியொன் றைத் தீபமேற்றி, நாடியே கண்கொட்டாங்கச்சி யெதிரில்வைத்து நலம்பெறவே ரோகியின்மேல் போர்வையிட்டு, தாட்டிகமாய்த் திரி யெரித்து அணையுமட்டுந் தானிருந்து வேர்வையெல்லாந் துடைத்துப் போட்டு, ஆட்டியே ஆவின்பால் உழக்குள்தந்து அப்பனே பாலன்னம் பின்னுற்கொள்ளே. 451

கொள்ளவே உப்பாகா மூன்றுநாளுங் குணமாகப் பாலன்னங் கொள்ளவேண்டும், தள்ளவே மற்றொன்று மாகாதப்பா தன்மையுட நான்காநாள் வெங்நீரோடு, மெள்ளவே நீருமுள்ளி சமூலங்கொண்டு மிதக்கவிட்டு காய்ச்சி பின்னுறவிட்டு, அள்ளியே ஓமமிட்டு நீரை வார்த்து அப்பனே செம்மறியின் மிளகுநீரே. 452

---

450 சூதசெந்தூரம்-ரசசெந்தூரம்.

நீரிலே மிளகாகும் உப்புமாகும் நிச்சயமா யன்றுதொட்டுக் கார சார, மாறியே நெய்யோடு பாலுமாகும் மைந்தனே ஆட்டிறைச்சி மச்சமாகும், பாரினிலே பெண்ணுகா புளியுமாகா பாலகனே வாய் நீரை ஆற்றலாகா, வீரியமா யிருபதாநா ளோமங்தேய்த்து விருப்ப முடன் விளக்கெண்ணே முப்பதிலே மூழ்கே. 453

முப்பதுடன் பத்துநா ளாகுமுன்னே முக்கியமாய்த் தீருகின்ற வியாதிகேளு, தப்பதுடன் பீனிசங்க ளேழுந்தீருந் தலைபிளவை உச்சிபுற்று கண்டமாலே, கப்பதுடன் கன்னபுற்று லிங்கபுற்று கன மான அண்டபுற்று யோனிபுற்று, இப்பதுடன் பல்லரணை சந்தபுற்று இயலான மார்பிளவை கொறுக்கைபோமே. 454

போகுமோ அரையாப்பு ஆசனத்தின்புற்று பொல்லாத பவுத்தி ரங்கள் மேகவெடிசூலை, சாகுமே குஷ்டவெடி துடையில் வாழை சலக்கண்ணி அழுகண்ணி சதைவளர்த்தல், ஏகுமே தவளைசொரி ஆனைசொரிபீலி இயலில்லா ரணங்களெல்லா மெளிதில்போகும், ஆகுமே போகருட கடாட்சத்தாலே அவனிதனிற் புலிப்பாணி பாடினேனே. 455

அண்ட மெழுகு

ஆடியே சிற்றண்ட மெழுகிதப்பா அப்பனே சொல்லுகிறேன் வில்வவேரு, தேடியே வீசைபத்து கொண்டுவந்து சேர்த்ததனை நறுக்கியபின் நிழலுலர்த்தி, வாடியே போகாமல் பாண்டத்திட்டு வாய்மூடி சீலைசெய்து குழித்தயிலம் வாங்கி, நீடியே தலைஅண்டம் பீங்கானிலிட்டு நிலவரமாய்த் தைலமதை நிறையவாரே. 456

வார்த்தபின்பு நாற்பதுநாள் ரவியில்வைத்து வற்றவற்ற தைல மதை வார்த்துவந்தால், பார்த்திருந்த பண்டிதர்கள் மாயமாகப் பசுமை யுள்ள மெழுகாகும் பகரக்கேளு, தூர்த்துவந்த வாதமெல்லாந் துலைந்துபோகுஞ் சுண்டக்கா யளவெடுத்து தேனிலீந்தால், ஆர்த் திருந்த சூலையெல்லா மயர்ந்துபோகு மளவாகப் புலிப்பாணி அறைந் திட்டேனே. 457

இலவணச் செந்தூரம்

அறைகிறேன் லவணத்தின் செந்தூரங்கேள் அப்பனே கல் லுப்பு பலந்தானுலு, கறைகிறேன் சூதமது பலந்தானென்று கல்வத் தில் தானிட்டு வில்வத்தின் சாற்றால், மறையவே தானரைத் திரண்டு சாமம் மார்க்கமாய்க் குகையில்வைத்துச் சொல்லக்கேளு, விரைகிறேன் போகருட கடாட்சத்தாலே விரவமுடன் புலிப்பாணி விளம்பக்கேளே.

கேளேதான் உலையில்வைத்து பழுக்கஊதக் கிருபையுட னுருகி யது மணிபோலாகும், கோளேதான் வாராமல் ஆறவிட்டு கொற்ற

வனே கல்வமிட்டு பொடியாய்ச்செய்து, நாளேதான் அந்தரத்தாம ரையின் சாற்றால் நால்சாமந் தானரைத்துப் பில்லைதட்டிப், பாளே தான் போகாமல் காயவைத்துப் பக்குவமாய்ச் சில்லிட்டுப் புடமுழமு மாமே. 459

ஆமேநீ முன்போலே ஐந்துபுடம்போட்டால் அப்பனே செந் தூரமாகும்பாரு, தாமேநீ யெடுத்ததனை சிமிழில்வைத்துத் தயவாக பணவெடைதான் தேனிற்கொள்ள, போமேநீ குன்மமென்ற தெட் டுந்தீரும் பொல்லாத நெஞ்செரிவு சூலைரோகம், வாமேநீ சூதகத்தின் வாயுதீரும் வல்லமையால் புலிப்பாணி வகுத்திட்டேனே. 460

நமநாசமெழுகு

வகுத்திடவே நமநாசமெழுகுதன்னை வளமாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு, தொகுத்திடுவேன் லிங்கமோடு தாளகமுஞ்சிங்கி சொற்பெரிய மனோசிலையுங் கௌரிவெள்ளை, பகுத்திடுவேன் சூதங் கெந்திவீரம்பூரம் பாங்கான துரிசுடன் வகைக்குத்தானும், மகத்திடு வாய் விராகனிடை யொன்றேதானும் மாசற்ற வாளமது பதினொன் றாமே. 461

ஆமேதான் சரக்கெல்லாங் கல்வத்திட்டு அப்பனே அன்னக் காடியினாலாட்டி, தாமேதான் நாற்சாம மானபின்பு தயவாக முழச்சீலை அதில்பரப்பிப், போமேதான் திரித்ததனைக் காயவைத்துப் பொங்க முடன் ஆவிநெய் பலமெட்டாகும், தீமேதா னில்லையடா சுடர்தயில மாகத் தீவிரமாய் மூன்றுமுறை மடக்கிச்செய்யே. 462

செய்தபின்பு தயிலமதை எடுத்துக்கொண்டு செப்பரிய பனைவெல் லம் பலமேமூன்று, கொய்தசுக்கு சூடனுமுன் தயிலங்கூட கொற்ற வனே விராகனிடை சேர்த்துவைத்துக், கைதவமாய்ச் சுண்டைக்காய் அளவுகொள்ள கடத்திலுள்ள வாதமெல்லாங் கதிகெட்டோடும், பைத முடன் மாதமொன்றுக் கைந்துநாள்தான் பக்குவமா யிப்படிமூன்று முறையுந்தானே. 463

தானாகத் தீருகின்ற வியாதிகேளு தகைமையில்லா குன்மமெட் டுஞ் சூதகத்துவாயு, மானாக திமிர்தவாதங் குடலின்வாதம் மன்ன வனே பக்கமென்ற வாதம்போகும், வானாக பத்தியந்தான் சொல்லக் கேளு வண்மையுள்ள பசும்பாலும் பசுநெய்யாகும், தேனாக பசும் பயறு வறுத்தவுப்பாங் தெளிவுடன் பத்தாநாள் விளக்கெண்ணை மூழ்கே. 464

மூழ்கியபின் மதுபானம் பெண்ணாகாது முக்கியங் தொண்ணூறு நாளாகுமட்டும், மாழ்கிநீ போகாதே மனம்விடாதே மதிகெட்டு நில் லாதே மருந்தேறாது, காழ்த்தபண்டந் தின்னாதே காலைமாலை காலாற

464 பக்கவாதம்-பாரிசவாயு.

நீநடந்து திரும்பநன்று, வாழ்த்துவார் போகருட கடாட்சத்தாலே வகையாகப் புலிப்பாணி வசனித்தேனே. 465

ஆனைக்கால் தீர லேகியம்

வசனித்தேன் கருங்குருவை மாப்படிகால்தான் வகையாக திருகுகள்ளி பாலரைக்கால், நசனித்த பசுப்பால்தா னரைக்காலாகும் நறுந்தேனும் படியரைக்கால் நவிலக்கேளு, தசனித்த மதனிலே கலந்து கொண்டு தயவாக அடுப்பேற்றி லேகியமாய்க்கிண்டி, அசனித்து ஆற விட்டுக் கல்லிலாட்டி அப்பனே கலசத்தில் பதனம்பண்ணே. 466

பண்ணப்பா கழற்சிக்கா யளவாய்க்கொள் பக்குவமா யைந்துதின மிருநேரந்தான், நண்ணப்பா இம்முறையாய் மூன்றுமாதம் நன்மையுடன் கொள்வதற்குப் பத்தியங்கேள், உண்ணப்பா நெய்பால் பசும் பயறுகும் உத்தமனே வறுத்தவுப்பு மிகவுமாகும், கண்ணப்பா மறுபத்தியமிருந்து விளக்கெண்ணையால்மூழ்கு கருணையுள்ள போகருட கடாட்சந்தானே. 467

அர்த்தனாரீசுர மாத்திரை

தானென்ற அர்த்தனாரி மாத்திரையைச்சொல்வேன் தனிவெள்ளைப் பாஷாணம் விராகனென்று, கோனென்ற கோரோசனை விராகனென்று கொற்றவனே முலைப்பாலால் சாமமாட்டி,பானென்ற பசும் பயர்போ லுண்டைசெய்து பக்குவமாய் வலமுலைப்பால் தன்னிலீய, வானென்ற போகருட கடாக்ஷத்தாலே வண்மையுள்ள சுரம்நீங்கி அர்த்தமாமே. 468

அர்த்தமென்ற இடமுலைப்பால் தன்னில் ஈந்தால் அப்பனே இடப்புறத்துச்சுரமும் நீங்கியொரு புறமாய்நிற்கும், வர்த்தமென்ற விரண்டு முலைப்பாலிற்றந்தால் வகைகெட்டுச் சுரமதுதா னுடனேநிற்கும், கர்த்தனென்று உனைத்துதித்து லோகமெங்கும் கால்விழுந்து கும்பிடுவார் கதிதாவென்று, விர்த்தனென்ற போகருட கடாக்ஷத்தாலே விவரமுடன் புலிப்பாணி பாடினேனே. 469

அமிர்தசஞ்சீவி மாத்திரை

ஆமென்றஅமிர்த சஞ்சீவிமாத்திரை யடைவாகச் சொல்லுகிறேனப்பாகேளு, தாமென்ற சாஸ்திரபேதியேலந் தனிக்கோட்டங் கிராம்புடனே சாதிபத்திரி, காமென்ற சந்தனமுங் கடுகுரோகணி கனமான இலுப்பைப்பூ நன்னாரி விலாமிச்சை, வானென்ற இருவேலி கடுக்காய் தான்றிவற்றல் நெல்லிதிப்பிலியு மதுரமாமே. 470

---

466 கருங்குருவை-கறுப்பரிசி.

468 அர்த்தம்-பாதி ஆகையிலுவமானம்பொன்.

470 இருவேலி-வெட்டிவேர்.

மதுரமென்ற திராட்சையொடு முத்தக்காசு மைந்தனே பேரீச் சங்காய் வகைவகைக்குச், சதுரமென்ற விராகனிடை நிறுத்துக் கொண்டு சலியாமல் கல்வமிட்டுபழச்சாற்றுலே, அதிரம்போ லரைத் திடுவாய் சாமம்நாலு அப்பனே கடலைபோ லுண்டைசெய்து, நநி வரண்டு சுரமிஞ்சி யதிகமானுல் நன்முலைப்பால் வெந்நீரி லீயநன்றே.

நன்ருகுஞ் சன்னிமுதல் தோஷமெல்லாம் நன்மையாம் பிள்ளை பிணி நலியுந்தீரும், பன்ருகும் நாவரட்சி பறக்கும்பாரு பரிதிகண்ட பணிபோலாம் நசமுள்ளோற்கு, கன்ருக பத்தியமாய்க் காருகாரு கதி கெட்டால் வியாதியது கதித்துக்கொல்லும், குன்ருகும் போகருட கடாட்சத்தாலே குணமாகப் புலிப்பாணி கூறினேனே. 472

அக்கர சஞ்சீவி மாத்திரை

கூறுவேன் அக்கரசஞ்சீவிமாத்திரை குணம்பெறவே சொல்லு கிறேன் குறிப்பாய்க்கேளும், கோறுகிறேன் அதிமதுரங் கோஷ்டஞ் சுக்கு குணமுள்ளசாதிக்காய் கொடுக்காய்சீரகம், ஊறுவேன் லவங்கப் பட்டை திப்பிலிமூலம் உத்தமனே கடுக்காயும் அசமதாகம், தேறு வேன் கொத்தமல்லி கஸ்தூரிமஞ்சள் திறமுள்ள பழம்புளியுஞ் சீனி காணே. 473

காணவே அரத்தைரண்டு இந்துப்போடு கருஞ்சீரகம் வகை வகைக்கு விராகனென்று, தோணவே முலைப்பாலி லிரண்டுசாமந் தொகுத்திடவே தானரைத்துத் துவரைபோல, மாணவே யுண்டை செய்து நிழலுலர்த்தி மைந்தனே குப்பியிலே அடைத்துக்கொண்டு, நாணவே நாவரட்சி நங்கைதோஷம் நலமில்லாச் சன்னிமுதல் சுரங் கள்போமே. 474

போகுமே முலைப்பாலில் கொடுக்கநன்று புனிதமுள்ள அனுபா னந் தன்னில்ஈவாய், ஆகுமே பிள்ளைப்பிணி அனந்தம்போகும் அப் பனே பத்தியமா யிருக்கச்செய்து, பாகமா யேழுநாள் கொண்டபின் னர் பாலகனே வாரமதாய் நீரைவாரு, சோகமாய் வியாதிகண்டு மருந்தைஈவாய் சொற்பெரிய போகருட கடாட்சந்தானே. 475

பிள்ளைகட்கு பேதிமாத்திரை

தானென்ற பிள்ளைகட்கு விரோசனந்தான் தயவாகச் சொல்லு கிறேன் லவங்கமேலம், மானென்ற சன்னபட்டை மதுரங்கோட்டம் மைந்தனே சண்பகத்தின் மொட்டுதானும், வானென்ற விராகனிடை நிறுத்துக்கொண்டு வாளமது சுத்திசெய்து விராகனென்று, தேனென்ற பழச்சாற்றுல் மூன்றுசாமந் தெளிவாகத் தானரைத்து செப்பக்கேளே. 476

---

473 அசமதாகம்-ஓமம். கொடுக்காய்-கொடுக்காய்புளி.

473 அரத்தைரண்டு-பேரரத்தை, சிற்றரத்லதை.

476 விரோசனம்-பேதி. மொட்டு-மொக்கு.

கேளப்பா மிளகதுபோல் குளிகைசெய்து கெடியாக நிழலுலர்த்தி சிமிழில்வைத்து, கோளப்பா இல்லையடா சர்க்கரையாதல் கொற்ற வனே நல்லவெல்லங் கதலிதன்னில், நாளப்பா பிள்ளைபல மறிந்து நீயும் நன்மணியி லொன்றிரண்டு நல்கியபின், ஆளப்பா மிளகுநீர் சாதமீவாய் அந்தியிலே சுக்கு சீரகமுமாமே. 477

கட்டுவாதி மாத்திரை

ஆமேதான் கியாழமிட்டு கொடுப்பாயப்பா அறைகிறேன் கட்டு வாதி தன்னைக்கேளு, தாமேதான் சாதிக்காய் சாதிப்பத்திரி தகமை யுள்ள மாசிக்காய் கடுக்காய்ப்பூவும், நாமேதான் சீரகமும் விடையங் கிராம்பு நலமுள்ள வெந்தயமும் பிணிதானுங், கோமேதான் கசகசா வுங் கோரோசனையுங் கொற்றவனே விராகனிடை நிறுத்துவாங்கே. ()

வாங்கியே முலைப்பாலால் அறைத்துநீயும் வண்மையுள்ள மிள கதுபோ லுண்டைசெய்து, தாங்கியே நிழலுலர்த்திப் பதனம்பண்ணி தாரணியில் கிராணிவகை எல்லாம்போக, ஓங்கியே தேனதிலும் வெண்ணையிலுங்கொள்ள ஓடிவிடும் பேதிமுதல் ரத்தகிராணி, தீங் கில்லா போகருட கடாட்சத்தாலே திறமாகப் புலிப்பாணி திறஞ் சொன்னேனே. 479

பச்சைக்கற்பூர மாத்திரை

சொன்னதொரு பச்சைகற்பூர மாத்திரை சொல்லுகிறேன் பச் சையென்ற கற்பூரந்தான், மன்னனென்ற வீரமுடன் பூரம் லிங்கம் மைந்தனே சூதமுடன் ரசசெந்தூரம், வின்னமில்லா சுத்திசெய்து வகைவகைக்கு விராகனிடை தானெடுத்து கல்வத்திட்டு, அன்ன நடை மின்னார்கள் காமப்பாலால் அப்பனே நாற்சாமம் அரைத்து வாங்கே. 480

வாங்கியே குன்றுமணி போலுருட்டி வண்மையுட நிழலுலர்த்தி வரிசைகேளு, தீங்குற்ற சூலைதிரி கிரந்திதோஷம் தின்றிடவே ஏழு நாளில் தீர்ந்துபோகும், ஓங்கியே வந்துற்ற சன்னி ஓடும் ஒருநொடி யில் சூடெழுந்தோங்கிநிற்கும், பாங்குற்ற பத்தியங்க ளிச்சாபத்தியம் பண்பான போகருட கடாட்சந்தானே. 481

சிறுபிள்ளைகட்கு கட்டுவாதி மாத்திரை

தானென்ற சாதிக்காய் தனைக்குடைந்து தன்மையுள்ள அபினி பணவெடைதானிட்டு, கோனென்ற குளவிந்த மரைத்துக்காய்மேல் கொற்றவனே கவசமிட்டு குணமதாக, மானென்ற வேதுபுடமாகவிட்டு/

---

477 குளிகை-மாத்திரை. கதலி வாழைப்பழம்.

478 விடையம்-அதிவிடையம்.

480 காமப்பால்-முலைப்பால்.

485 குளவிந்தம்-மஞ்சள்.

மைந்தனே கவசமதை மாற்றிப்பின்பு, தேனென்ற முலைப்பாலால் அரைத்து மைபோல் தெளிவாக உளுந்ததுபோ லுண்டைசெய்யே. ()

செய்தஉண்டை தனையெடுத்து முலைப்பால்தேனில் செயம்பெறவே கொடுத்துவரத் தீரும்நோய்கள், நொய்யவந்த ரத்தக்கொட்டல் ரத்தபேதி நொடிக்குமுன்னே ஓடிவிடும் நோய்தீரும்பார், பய்யவந்த பேதிமுதல் கட்டுங்கட்டும் பக்குவமாய்ப் பத்தியங்கள் பாகஞ்செய்வாய், ஐயரெனும் போகருட கடாட்சத்தாலே அன்பாகப் புலிப்பாணி யருளினேனே. 483

இரத்தக்கொட்டலுக்கும், சீதபேதிக்கும் சூரணம்

அருளுவேன் கற்கடகசிங்கியப்பா அடைவான கிராம்புடனே கருவாப்பட்டை, உருளவேபிரட்டிசிறு வறுப்பதாக்கி உத்தமனே வகைவகைக்கு விராகனென்று, மருளவேசூரணித்து மப்பாகேளு மயக்கமில்லை ஆறுபங்காய்ச் செய்துகொண்டு, குருவாக போகரைநீ தொழுதுயேத்திக் கொடுத்துவிடு வெண்ணையிலே குலைந்துபோமே.

குழந்தைகள் சுரதோஷங்களுக்கு அமிர்த சஞ்சீவி குளிகை

போமேதான் அமிர்தமென்ற குளிகைசொல்வேன் புகழுங் கோரோசனையும் ஏலந்தானும், தாமேதான் அதிமதுரம் சண்பகப்பூ தலையான சாஸ்திரமாம் பேதியோடு, நாமேதாம் வகைவகைக்கு விராகனென்று நலம்பெறவே கல்வத்தில் நன்றாயாட்டி, ஆமேதான் வெட்டிவேர் விலாமிச்சவேரும் அடைவாகக் கியாழமிட்டு அரைத்திடாயே. ()

அரைத்திடுவா யிருசாமமானபின்பு அப்பனே குன்றியைப்போ லுண்டைசெய்து, நிரைத்தனமாய் நிழலிலுலர்த்தி நீனைவாய்க்கேளு நீமகனே முலைப்பாலில் நுணிக்கிவைக்கில், உரைத்துவந்த மாந்தமெட்டு நீர்ப்படுவன்றானும் உத்தமனே அஸ்திசுரம் வெப்புந்தீரும், மறைபுகழும் போகருட கடாட்சத்தாலே மகிழ்வாகப் புலிப்பாணி மனம்விட்டேனே. 486

சிறுபிள்ளைகட்கு காதில் சீழ்வடிகிறதற்கு ரவிதைலம்

விட்டதோர் கால்ரண்டு விராகன்பத்து வெள்ளுள்ளி குளவிந்தம் விராகனைந்து, திட்டமுற வெள்ளைக்காக்கணஞ் சாற்றாலே திறமாகத் தானரைத்துத் தேங்காய்நெய்யில், சட்டமுடன் தான்பிசைந்து ரவியில்வைத்து சாதகமாய் மூன்றுநாளானபின்பு, இஷ்டமுடன் வடிகட்டி எடுத்துக்கொண்டு என்மகனே செவியிலிட சீழ்தான்போமே. 487

---

484 கற்கடகசிங்கி-கடுக்காய்ப்பூ. கருவாப்பட்டை-லவங்கப்பட்டை,

சிறுபிள்ளைகள் பெருக்கநெய்

தானென்று தேருதபிள்ளைகட்குத் தயவாகச் சொல்லுகிறேன் தண்ணீர்மிட்டான், மானென்ற சாரும்வெள் ளாட்டின்பாலும் மைந் தனே ஆவின்பால் தேங்காய்ப்பாலும், தேனென்ற ஆவின்நெய் திற மாய்வாங்கித் தேசிகனே வகைவகைக்குப் படிகாலப்பா, கோனென்ற சீனியது கற்கண்டோடு கொற்றவனே பலமைந்து கொண்டுசேரே.

சேர்த்தபின்பு அடுப்பேற்றித் தீயைமூட்டிச் சிறுகளரி மெழுகு பதஞ் சிவக்கும்போது, சேர்த்தெடுத்து வடிகட்டிக் கொண்டுதானும் கொற்றவனே கரண்டிவீதங் கொடுத்தாயானுல், கார்த்திருந்த கணம் நீங்கிக் கரும்புபோலாம் கட்டழகுபிள்ளைகட்கு அழகுமுண்டாம், பூத்தமறை போகருட கடாட்சத்தாலே புலிப்பாணி புவிதனிலே பூட்டினேனே. 489

குழந்தைகட்கு வாந்திகண்டால்

பூட்டுகிறேன் குழந்தைகட்கு வாந்திகண்டால் பூவென்ற கிராம்பு மதிவிடையந்திப்பிலி, நாட்டுகிறேன் மயிலிறகு சுட்டசாம்பல் நன்ரு கப்பொடிசெய்து தேனில்சேர்த்து, ஊட்டவே வாந்தியது ஒழிந்து போகும் உண்மையிதுதவருது உறுதிமெத்த, ஆட்சிமிகு போகருட கடாட்சத்தாலே அன்பாகப் புலிப்பாணி யறைந்திட்டேனே. 490

குழந்தைகள் சிரங்குக்கு

அறைகிறே னின்னமொரு யெண்ணெயப்பா அனல்மீறி குழந் தைகட்கு அங்கமெல்லாம், நிறையவே சொரிசிரங்கு நின்றதானுல் நிலவரமா யாமணக் கெண்ணெயோடு, மறைவான மேனியுடன் மணித் தக்காளி மைந்தனே முடக்கற்றுன் வகைக்குப்படிகால், குறையாமல் மூக்குரட்டை யரைத்தசாந்து கூட்டிடுவாய் எலுமிச்சம் பழத்தில் வாரே. 491

வாராகக் காய்ச்சிவடித் தெடுத்துக்கொண்டு வகையாகக் கரண்டி முறை கொடுப்பாயப்பா, நேராகப் பத்தியந்தா னிச்சாபத்தியம் நிச் சயமா யைந்துநா ளேழுநாளாம், சீராகத்தலைமுழுகி வருவாராகில் சிறுசிரங்கும் பெருசிரங்கும் நில்லாதோடும், பேராக போகருட கடாட்சத்தாலே பேசினேன் புலிப்பாணி பேசினேனே. 492

சிரங்குக்குமேல் பூசுந் தைலம்

பேசுகிறேன் மேல்பூசுந் தயிலமொன்று பெரியாம்பல் கிழங் குடனே செங்கத்தாரி, மாசறவே னிடைக்கிடைதா னெடுத்துக்

493 பெரியாம்பல்-அல்லி. செங்கத்தாரி-சுருளபட்டை,

கொண்டு மைந்தனே அவுரிச்சார் தன்னாலாட்டி, நாகமென்ற நிம்ப எண்ணெ தன்னில்கூட்டி நான்குநாள் பூசிவர சிரங்குபோகும், தேசிகனார் போகருட கடாட்சத்தாலே தெளிவாகப் புலிப்பாணி பாடினேனே. 493

பிள்ளைபெற மாட்டாதவர்க்கு

பாடியே பிள்ளைவெளி காணுதபேர்க்குப் பண்பான கீழ்க்காய் நெல்லி மூலம், வாடியே போகாமல் வளையமாட்டி வசமான இடக்கால் பெருவிரலிற்போட, நீடியே பிள்ளைவெளி காணுமப்பா நினைவாக இன்னமொரு வேரைக்கேளு, சூடியே முன்னைவேர் தனையெடுத்துச் சுரபியெனும் பசுவின்பால் தனிலரைத்தே. 494

அரைத்தெடுத்து உள்ளுக்குக் கொடுத்தால்பிள்ளை அப்பனே கீழ்விழுந்து அழுகும்பாரு, மறைத்தபொருளென்றுநீ மயங்கவேண்டாம் மகாகோடி புண்ணியங்க ளுனக்குண்டாகும், துரைத்தனமாய் நீயலைந்து திரியவேண்டாம் துய்யமெனும் நூல்களெல்லாந்துணிந்து பாரு, உரைத்தகுரு போகருட கடாட்சத்தாலே உரைத்திட்டேன் புலிப்பாணி யுலகில்தானே. 495

கற்ருழை நாற்றந்தீரக் கூட்டு

உலகினிலே மானிடர்க்குக் கற்ருழைநாற்றம் ஓடிவிட சாந்தொன்று உரைக்கக்கேளு, நல்நாரி கரந்தையுட வேருங்கூட நன்னாரி வேருடனே முத்தக்காசு, குலமிலகுங் கஸ்தூரி மஞ்சள்தானுங் கூட்டியே வகைவகைக்கு விராகனெந்து, கலகமிலே யரைத்ததனை முகட்டில்பூசக் கண்டோடுங் கற்ருழை நாற்றமென்னே. 496

தலைப்பேனுக்கு மாரணம்

எண்ணவே தலையிலுள்ள பேண்கள்சாக எடுத்துரைப்பேன் சூதமொரு கழஞ்சிவாங்கி, நண்ணவே மேனிச்சார் விட்டு ஆட்டி நன்னூலில் தான்புரட்டி நவிலக்கேளு, திண்ணவே சிகையில் சிக்கம் போல் சொருகச் சிரசிலுள்ள பேன்களெல்லாஞ் செத்துப்போகும், கண்ணவே போகருட கடாட்சத்தாலே கலையறிந்து புலிப்பாணி காட்டினேனே. 497

காட்டினேன் முப்புவே கலனில்லாமல் கண்டறிந்து செய்தொழிலில் கலந்துகொள்ள, நாட்டினேன் கபடமொன்று மில்லையப்பா

496-நல்நாரி-சிவக்கரந்தை.

497 சூதம்-இரசம்.

நன்மையுடன் நீயடா நாதனெனன்பார், பூட்டினேன் கெவுனமுத விதிலேயாகும் புண்ணியனே வாதமொடு வைத்தியமாடக், காட்டினேன் போகருட கடாட்சத்தாலே கனமாகப் புலிப்பாணி கலையில் தானே. 498

கலையிலே பதினாறும் இருபத்தைந்துங் கனமான வைம்பதுட நூறும்பாரு, நிலையிலே சண்முகத்தில் பூசைமார்க்கம் நீமகனே சால மிரு நூறும்பாரு, மலையிலே பலதிரட்டு முன்னூறப்பா மைந்தனே சோதிடமு முந்நூரப்பா, குலையிலே கொக்கோக முந்நூறுதானுங் குருவான போகருட கடாட்சமாமே. 499

வைத்தியருக்கு புத்திகூறல்

ஆமேதான் பண்டிதரே யறையக்கேளீர் ஆதரையி லெளியோர்க்கு அவிழ்தமீந்து, தாமேதா னன்னமிட்டு வஸ்திரமீந்து தயவாக தன்னுயிர்போ லவரைக்காத்து, தீமேதான் சேராமல் புண்ணியவானாய்த் தீர்க்கமுள்ள வைத்தியனாய் இருந்துவாழ்வீர், நாமேதான் போகருட கடாட்சத்தாலே நலமாகப் புலிப்பாணி நவின்றிட்டோமே. 500

வியாதியஸ்தனுக்கு புத்திகூறல்

நவின்றிட்டோம் புவிதனிலே வைத்திய மார்க்கம் நன்றாகச் சொல்லிவைத்தே னின்னூல்வேண்டும், பவின்றிட்ட நோயாளர் வைத்தியோர்க்குப் பண்பாக தொழுதேத்தித் தாம்பூலமீந்து, இவின்றிட்ட மவையெல்லா மவர்க்குச் சொல்லி இதம்பெறவே செய்தபின்பு அவிழ்தங்கொள்வாய், கவின்றிட்ட போகருட கடாட்சத்தாலே காசினியில் புலிப்பாணி ஐந்நூறுமுற்றே.

புலிப்பாணி மஹாமுனிவர் அருளிச்செய்த

வைத்தியம்-500 முற்றிற்று.

பூமகள் விலாசம் பிரஸ், சென்னை:—1938.